
கல்கி
KALKI 8.11.98 ரூ. 4.50
பெண்களே உஷார்!
நகைக் கடைகள் அடிக்கும்
பகல் கொள்ளை!

கலைஞர் அரசிலும் சமீப காலங்களில் மெத்தனம் எட்டிப் பார்க்கிறதோ என்ற சந்தேகம் எழுகிறது. 1997-ல் ராஜபாளையம் பகுதிகளில் நடந்த வகுப்பு மோதல்களை அடுத்து, இது போன்ற நிகழ்வுகளை எதிர் காலத்தில் தவிர்ப்பதற்கான வழிவகைகளைத் தெரிவிக்க, நீதிபதி மோகன் தலைமையில் உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

1997 ஜூலையில் அமைக்கப்பட்ட




• நீதிபதி மோகன் தமது குழுவின் அறிக்கையை முதல்வரிடம் சமர்ப்பித்த போது...

நீதிபதி மோகன் அறிக்கை:

தமிழக அரசு மெத்தனம் காட்டுகிறதா?

இக்குழு, 1998 ஜனவரி 31ம் தேதியன்று தனது அறிக்கையை முதல்வரிடம் வழங்கியது. அது பற்றிய புகைப்படம், செய்திப் பத்திரிகைகளில் வந்தது. அவ்வளவுதான்! அதன் பிறகு அதைப் பற்றி யாரும் பேசவில்லை. அடுத்து ஒரு நீண்ட சட்டமன்றத் தொடர் நடந்தது. வழக்கமாக இது போன்ற கமிஷன் மற்றும் குழுக்களின் அறிக்கைகள் சட்டமன்றத்தில் வைக்கப்படும். ஆனால் மோகன் குழு அறிக்கை வைக்கப்படவில்லை!

அதன் பிறகு



சமீபத்தில் ராமநாதபுரத்தில் வகுப்புக் கலவரங்கள் நடந்த பிறகு கூட்டப்பட்ட அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் மோகன் குழு அறிக்கை பரித்துரைகளின் சுருக்கம் மட்டும் வழங்கப்பட்டது. ஜனவரியில் கொடுக்கப்பட்ட அறிக்கையை உடனே பரிசீலித்து, அதில் சொல்லியிருக்கிற வழி வகைகளில் குறைந்தபட்சம் ஒன்றைச் செயல்படுத்தியிருந்தால் பின்பு நடந்த வகுப்புக் கலவரங்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalki@md2.vsnl.net.in

களைத் தவிர்த்திருக்கலாமோ என்று கூட நடு நிலையாளர்கள் கருத்துத் தெரிவிக்கிறார்கள்.

இப்போது கூட பரிந்துரைகளின் சுருக்கம் தரப் பட்டதே தவிர, இன்னமும் பொது மக்களின் பார்வைக்கு முழு அறிக்கையும் வைக்கப்படவில்லை. இந்த மெத்தனம் ஏன்?

தமிழக அரசின் உயர் அதிகாரி ஒருவரிடம் கேட்டோம். அவர் காரணங்களை நம்மிடம் விளக்கினார்...

இது போன்ற சந்தேகங்கள் எழுவது தவறு என்று சொல்ல மாட்டேன். ஆனால் நீங்கள் (பொது மக்கள்) ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். நீதிபதி மோகன் தலைமையில் அமைக்கப்பட்ட உயர் மட்டக் குழு, 1952-ம் ஆண்டு விசாரணைக் கமிஷன் சட்டப்படி அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் அல்ல. எதிர்காலத்தில் ஜாதி மோதல்களைத் தவிர்க்க வேண்டும் என்ற நல்லெண்ணத்தில் கலைஞர் அரசு நியமித்த உயர் மட்டக் குழு அது. விசாரணைக் கமிஷன் சட்ட அடிப்படையில் அமைக்கப் பட்டால்தான் ஆறு மாதத்திற்குள் அறிக்கையைப் பெற்று சட்ட மன்றத்தில் வைக்க வேண்டும் என்று விதி இருக்கிறது.

நீதிபதி மோகன் தலைமையில் அமைக்கப்பட்ட அறிஞர்கள் குழு ஒரு விரிவான அறிக்கையைக் கொடுத்துள்ளது என்பது உண்மைதான். ஆனால் மற்ற விசாரணைக் கமிஷன் அறிக்கைகளுக்கும் இதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஒரு துப்பாக்கி சூட்டைத் தொடர்ந்து நியமிக்கப்படும் கமிஷன் 'யார் மீது தவறு' என்பதைக் குறிப்பிட்டுச் சொல்லும். அந்த நபர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசின் பொறுப்பு.

ஆனால் மோகன் குழுவின் பரிந்துரைகள் ஒரு நீண்டகால செயல்முறைக்கு (long term measures) வித்திட்டிருப்பவை. உதாரண மாக "கல்வித் திட்டத்தில் மாற்றங்கள் ஏற் படுத்த வேண்டும்" என்று பரிந்துரைக்கப்பட் டிருக்கிறது. இது உடனடியாக நடக்க முடியுமா? மக்களிடம் காலப் போக்கில்தான் மன மாற்றம் ஏற்பட முடியும். ஏற்றத் தாழ்வுகள் உடையும் போது மோதல்கள் வெடிக்கின்றன. இது சமூகப் பொறியியல் (social engineering) சம்பந்தப்பட்ட விஷயம்!

மோகன் அறிக்கையில் கொடுக்கப்பட்டிருந்தவற்றை அரசு உன்னிப்பாக பரிசீலித்தது. இது சம்பந்தமாக, பல கருத்துப் பரிமாற்றங்கள், அரசின் மிக உயர் மட்டத்தில் நடந்துள்ளன. எனவேதான் பொது மக்களின் பார்வைக்கு அறிக்கை வைக்கப்படுவதற்கு முன்னரே அதன் அடிப்படையில் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன!

உதாரணமாக வகுப்புக் கலவர வழக்குகளை விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்க உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஜாதி உணர்வுகளைத் தூண்டும் சுவரொட்டிகள் சுவர் விளம்பரங்கள் ஆகியவற்றுக்குத் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. வேறு பல பரிந்துரைகளின் அடிப்படையில், நீண்ட கால செயல் திட்டத்திற்கான ஆக்கபூர்வமான வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. முழு அறிக்கையும் விரைவில் வெளிவரும்.

எனவே தமிழக அரசு இந்த விஷயத்தில் துளி கூட மெத்தனம் காட்டவில்லை என்பது தான் உண்மை.

ஆங்கிலத்தில் கொடுக்கப்பட்ட அறிக்கையை முதலில் எல்லா மட்டங்களிலும் படித்து, பின்பு தமிழில் மொழி மாற்றம் செய்து வெளியிட வேண்டியிருப்பதால் ஏற்படும் கால தாமதமும் காரணம் என்று சொல்கிறார்கள். என்ன காரணமானாலும் பல விசாரணைக் கமிஷன் அறிக்கைகள் இன்னமும் யாராலும் படிக்கப் படாமலேயே தூங்கிக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மை! உதாரணமாக கொடியங்குளம் சம்பவங்களைத் தொடர்ந்து அமைக்கப்பட்ட விசாரணைக் கமிஷன் அறிக்கை!

— ப்ரியன்

"நீங்க ரஜினியின் தீவிர ரசிகராய் இருக்கலாம். அதுக்காக பாட்சா வந்த போது பாட்சான்னும்; அருணாசலம் வந்த போது அருணாசலம்னும்; இப்ப படையப்பா வருதுங்கறதுக்காக படையப்பான்னும் மாத்தி மாத்தி பேர் வெச்சுக்கிட்டு ஜெஜட்டுல போடணும்னு எங்களை இம்சிக்கிறது நல்லால்லே!"

— ராஜிராதா



சிலை உடைப்பைத் தடுக்க சில டிப்ஸ்!



- சிலையை மிக உயரமான இடத்தில் அமைக்கலாம்

- சிலையை சுற்றி அகழி அமைத்து யாரும் சிலையை நெருங்க முடியாதபடி அதில் அபாயகரமான முதலை போன்றவற்றை விடலாம்.

- சிலையை யாரும் தொட முடியாதபடி அதில் எந்த நேரமும் உயர் அழுத்த மின்சாரம் பாயுமாறு ஏற்பாடு செய்யலாம்.

- தலைவரின் நிஜ தோற்றத்தோடு ஒத்துப் போகாத மாதிரி சிலைகளை வடிவமைக்கலாம். கீழேயுள்ள பெயருக்கும் சிலைக்கும் சம்பந்தமில்லையே என்ற குழப்பத்தில், உடைக்க வருவோர் பின் வாங்கிவிடுவார்கள்!

- இவற்றுக்கெல்லாம் மேலாக எந்தச் சிலையையும் யாரும் உடைக்க முடியாதபடி யாருக்கும் சிலை வைக்காமல் இருக்கலாம்.

— சக்தி. சரவணன்





• அரங்கத்துக்குள்ளே....



முதல் பார்வையில், யாரோ ஒரு செக் போஸ்ட் ஆசாமி தான் இத்தனை கம்பீரமாகக் கால்மேல் கால் போட்டு அமர்ந்து ஸ்நாக்ஸ் கொறித்தபடியே கல்கி படித்துக் கொண்டிருக்கிறார் என்று தோன்றியது. ட்யூட்டியை விட்டுவிட்டு இதென்ன கூத்து என்று சற்று நெருங்கிப் பார்த்தபோதுதான் அவர் ஆசாமி அல்ல; சாமியேதான் என்று தெரிந்தது!

ஆம், கல்கியின் காவல் தெய்வமான விநாயகர்தான் அத்தனை பெரிய மைதானத்தின் நடுவே, படு கம்பீரமாக மேடை போட்டு, அமர்ந்து, கிருஷ்ணா ஸ்வீட்ஸின் 'மைசூர்பா'வை ருசித்தபடியே அந்த வாரக் கல்கி கலெக்‌ஷன் பக்கங்களைப் படித்துக் கொண்டிருந்தார்! அவர் ஒவ்வொரு பக்கத்தையும் படித்து முடித்ததும் வாயு பகவான் அடுத்த பக்கத்தைத் திருப்பித் தரும் ஜோலி பார்த்துக் கொண்டிருந்தார்!

கோவை 'மணி மேநிலைப் பள்ளியின் பிரும்மாண்டமான 'நானி பல்கிவாலா கலையரங்கில்' நடைபெற்ற



கோவையில் திரண்ட வாசகர் படை!

கல்கி நூற்றாண்டு விழா கொண்டாட்டத்துக்கு வந்த ஆயிரக்கணக்கான வாசகர்களும் கல்கி ரசிகர்களும் இந்த 'செட் அப்'பை பார்த்துக் கிரங்கி நின்று விட்டார்கள்!

கோவை ஒரு காலத்தில் தொழிலாளர்களின் நகரமாக இருந்தது. பிறகு குண்டு போடும் குண்டர்களின் நகரமாக மாறியது. எப்போது கல்கி ரசிகர்களின் சாகரமாக மாறியது? என்று கேட்டால், "அமரர் கல்கி எழுதத் தொடங்கியது முதலே இப்படித் தான்!" என்று பதில் சொன்னார் வந்திருந்த ஒரு முதிய வாசகர்.



• சோ



• ....வெளியே

மிகையல்ல – கோலாகலமான நமது விழா, கோவையில் 25.10.98 அன்று மாலை அறிவிக்கப்பட்ட ஆறு மணிக்கு அரை விநாடி கூட முன்பின்னாக இல்லாமல் சரியாகத் தொடங்கியபோது, கோவை நகரமே படைதிரண்டு வந்து குவிந்து விட்டது! இத்தனைக்கும் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் தனது பிரசித்தி பெற்ற 'மைசூர் பா'வை வருபவர்களுக்கெல்லாம் இலவசமாகத் தரும் லாட்டரி எதையும் அறிவிக்கவில்லை. நாளிதழ் விளம்பரங்களில் கூட, தம் நிறுவனத்தை விளம்பரித்துக் கொள்ளாமல், கல்கி விழாவையே focus பண்ணியிருந்தார்கள்! அரங்க இருக்கைகள் நிரம்பி, வழியெல்லாம் ரசிகர்கள் குவிந்து நிற்க, பள்ளி மைதானம் முழுவதும் கல்கி அன்பர்கள் சூழ்ந்து விட, மைதானத்தில் ஒரு ஸ்பெஷல் ஸ்கிரீன் அமைத்து நிகழ்ச்சியை நேரடியாக இன்னர் சர்க்யூட்டில் ஒளிபரப்ப வேண்டியதாகி விட்டது!

"இந்த விழாவுக்கு சுப்புடுவை அழைத்திருக்கும் விஷயம் தெரிந்த

• மாலன், பாலகுமாரன், ராஜேஷ்குமாருடன் கிருஷ்ணன் & முரளி





• கிருஷ்ணா ஸ்வீட்ஸ் அதிபர் மகாதேவ ஐயருக்கு 'சிவகாமியின் சபத'த்தை அன்பளிக்கிறார் கி.ரா.


துமே, இறை வணக்கம் பாட இருந்தவர்கள் துண்டைக்காணோம் துணியைக் காணோம் என்று ஓடியே விட்டார்கள். எனவே இங்கு வந்திருப்போரில் ஒருவரையே இறை வணக்கம் பாட அழைத்தோம்!'' என்று தம் வரவேற்புரையிலேயே கலகலப்பு ஏற்படுத்திக் களை கட்டச் செய்தார், நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்த கோவை ஸ்ரீ கிருஷ்ணா ஸ்வீட்ஸ் நிறுவனத்தின் கிருஷ்ணன்.

கிருஷ்ணன் தொடங்கி வைத்த கலகலப்பு, கடைசி வரை நீடித்தது. ஏ. நடராஜன், கிருஷ்ணராஜ் வாணவராயர், கப்புடு, பாலகுமாரன், மாலன், சோ, ராஜேஷ்குமார் என்று அன்று பேசிய அத்தனைபேர் பேச்சிலும் அர்த்தமும் அழகும் ஆழமும் நகைச்சுவையும் பட்டொளி வீசிப் பறந்தன. பேச்சாளர்களின் ஜீவத் துடிதுடிப்புடன் கூடிய பேச்சில் கிரங்கி, கல்கியின் நினைவோடு ஒன்றிக் கரைந்து போனார்கள் வாசகர்கள்.

நாளைய தலைமுறைக்குக் கல்கியை அறிமுகப்படுத்த நாம் என்ன செய்யலாம்? என்கிற சிந்தனையின் அடிப்படையில் தம் பேச்சைத் தொடங்கினார் தொலைக் காட்சி நிலைய முன்னாள் இயக்குநர் ஏ. நடராஜன்.

"மாமல்லபுரத்துக்குச் சென்றாலே உளிகளின் ஓசை செவியில் கேட்கும். சிவகாமியின் கால் சதங்கை காதுகளில் ஒலிக்கும். கண்முன்னால் ஆயனர் வலம் வருவார்... கல்கியின் எழுத்தால் சிறப்புப் பெற்ற அந்நகரில் கல்கிக்கு ஓர் 'எலக்ட்ரானிக் மியூசியம்' அமைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்!'' என்று அவர் பேசியபோது அதன் அவசியத்தை உணர்ந்து, கரவொலியால் ஆமோதித்தார்கள் ரசிகர்கள்.

அடுத்துப் பேச வந்தவர் வந்தியத்தேவனின் கொள்ளுப் பேரன்! ஆம்! கிருஷ்ணராஜ் வாணவராயர், பஞ்சாலைகள் அமைப்பின் (SIMA) தலைவராக தொழிலதிபராக இன்று வெகு பிரபலமானவர்தான். ஆனாலும் அவர் வந்தியத்தேவன் வம்சம்! பொன்னியின் செல்வனில் அமரர் . கல்கி விவரிக்கும் பழைய வாணர் குலத்தின் இன்றைய கொழுந்து!




• கப்புடு

வாணவராயர் எந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டாலும் கல்கியை மேற்கோள் காட்டிப் பேசுவது அவர் வழக்கம். கல்கி நூற்றாண்டு விழாவுக்கே தலைமை தாங்கும் போது கேட்க வேண்டுமா?



• ஏ. நடராஜன்



• வாணவராயர்

''கல்கியின் லட்சியம் 'எழுத்து' அல்ல! தேசியம், சமூக சீர்திருத்தம், தேச விடுதலை – இவையே அவரது லட்சியமாக இருந்தன. இந்த லட்சியங்களை அடையத் தமது எழுத்தை அவர் ஒரு கருவியாக மட்டுமே பயன்படுத்தினார். இதை இன்றைய இளம் எழுத்தாளர்கள் 'கவனிக்க வேண்டும்'' என்று தொடங்கி, சுமார் அரை மணி நேரம் அவர் நிகழ்த்திய பேருரையில் விவேகானந்தரும் ரமணரும் காந்தியும் கோல்ட் ஸ்மித்தும் சுவாமி ரங்கநாதானந்தரும் இன்னும் பலரும் கருத்து ஊர்வலம் நடத்தினர். ஒரு மனிதர் – அதுவும் காலில் சக்கரம் கட்டிக் கொண்டு பறக்கும் தொழிலதிபர் இத்தனை படிக்க

எப்படிக் கிடைக்கிறது நேரம்? என்று வியப்பில் விழி உயர்த்தாதவர்களே இல்லை.

வாணவராயரின் சொக்க வைக்கும் உரையில் கட்டுண்டு கிடந்த ரசிகர்களை ஒரு மனோதத்துவ மருத்துவர் போல மீட்டு வந்து நிஜ உலகில் கிடத்தியவர் அடுத்துப் பேசிய ராஜேஷ்குமார். மாநிலம் முழுக்கப் பிரபலம் என்றாலும் அவர் உள்ளூர் ஹீரோ அல்லவா? கைதட்டலும் உற்சாகமும் கரை உடைந்த வெள்ளம்தான்!

ஒரு பேருண்மையை, சிதம்பர - அல்ல - கோவை ரகசியத்தை அன்று போட்டு உடைத்தார் ராஜேஷ்குமார்.

"நான் கதைக் கருக்களுக்காகக் கஷ்டப்படுவதே இல்லை. கல்கி தம் நாவல்களில் எத்தனையெத்தனை மர்மங்களை, திடுக்கிடும் சம்பவங்களை, அதிரடித் திருப்பங்களைக் கொடுப்பார்! ஒரு வாசகனாக, மயங்கிப் போய் அவற்றைப் படித்தவன், இன்று ஒரு எழுத்தாளனாக, கல்கி கையாண்ட விஷயங்களுக்குத்தான் பேண்ட் - ஷர்ட் மாட்டி என் நாவல்களில் உலவ விடுகிறேன்" என்றதும் அரங்கம் வெடித்துவிடும் போல ஒரு சிரிப்புப் புயல்!

அந்தப் புயல் கரை கடப்பதற்குள் அடுத்த புயல் வந்து அள்ளிக் கொண்டு போனது; சோ!

"கல்கி காலத்தில் நல்ல விஷயங்கள் கொட்டிக் கிடந்தன. கி.வா.ஜ., தேவன், ஏ.என். சிவராமன் என்று அவரது சமகாலத்தில் பல தரமான எடிட்டர்கள் பத்திரிகைகளை நடத்திச் சென்றனர். அன்று பத்திரிகைகளுக்கு நல்ல பல நோக்கங்கள் இருந்தன. இன்று? சிப்பு, சோப்பு, ஷாம்பு, துடைப்பம் என்று இலவசப் பொருட்களின் ஆட்சி நடக்கிறது!" என்று சாட்டையடியாகத் தொடங்கியவர், "இந்தக் காலத்திலும் தரத்தில் சமரசம் செய்து கொள்ளாமல் வரும் கல்கிக்கு இன்னும் நிறைய நிறைய சர்குலேஷன் கூட வேண்டும்" என்று பேசி, அரங்கின் மூலையில் நின்று கொண்டிருந்த நமது சர்குலேஷன் மானேஜரை முகம் நிறைய சிரிக்க வைத்தார்!

"பாரதியாரின் தொடர்ச்சியாக நான் கல்கியைப் பார்க்கிறேன்" என்று ஒரு புதிய கோணத்தை எடுத்துக் கொண்டு, அற்புதமாக உரை நிகழ்த்தினார் அடுத்துப் பேசிய மாலன்.

பாரதியின் சிறுகதைகளை எடுத்துக்

அடுத்த பக்கம் பாருங்க

காட்டி, கல்கியின் கதைகளைச் சுட்டிக் காட்டி, சிறுகதை பற்றிக் கல்கி வைத்திருந்த அபிப்பிராயத்தின் அடிப்படையில் ஒரு குட்டிக் கதையுடன் தொடங்கி அன்று அவர் நிகழ்த்திய உரை பலரின் சிந்தனையைத் தூண்டும் விதமாக இருந்தது.

"தமிழ் வாத்தியார்னா கேவலம். தமிழ்ப் பாட்டு கேவலம் என்று இருந்த காலத்தில், தமிழிசைக்குக் கல்கி ஆற்றிய தொண்டு அபாரமானது. தமிழிசைக்காக ஓர் இயக்கமே உருவானது அவரது எழுத்தினால்தான்!'' என்று குறிப்பிட்டார் சுப்புடு.

முதல் முதலில் தாம் எழுதிய ஒரு இசை விமர்சனத்துக்குக் கல்கியின் மனமார்ந்த பாராட்டுக் கிடைத்த சம்பவத்தை நினைவு கூர்ந்து, அமரர் கல்கியின் கள்வனின் காதலி நாவலைத் தாம் நாடகமாக நடத்திய சம் பவம் முதல், வரிசையாக அவர் நிகழ்த்திய நினைவுகளின் இனிய ஊர்வலம் கேட் போரைக் கட்டிப் போட்டது.

பள்ளியில், கணக்குப் பாடத்தில் சைபர் வாங்கி, கவலை மறக்கப் பொன்னியின் செல்வன் படித்துவிட்டு, அந்தத் தாக்கத் துடன் தஞ்சாவூருக்குச் சென்று மாட மாளி கைகளையும் மன்னர்குல மக்களையும் யானை, குதிரை பரிவாரங்களையும் ராஜ பாட்டை உலாவையும் கல்கியின் எழுத்தின் மூலமாகவே மானசிகமாகக் கண்டு மயங்கிய அனுபவத்தைச் சொன்னார், அடுத்துப் பேசிய பாலகுமாரன்.

கல்கியின் எழுத்தைப் படித்துப் படித்தே தாம் ஓர் எழுத்தாளராக உருவானதை நெகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுக் கரகோஷத்தை அள்ளிச் சென்றார் பாலகுமாரன்.

நிறைவுரை ஆற்ற வந்த கல்கியின் பதிப் பாளர் கி. ராவால் பேசவே முடியவில்லை. உணர்ச்சிப் பெருக்கில் நெகிழ்ந்து இருந்தார்.

எதைப் பற்றிப் பேசுவது? பேச்சாளர் களின் ஆத்மார்த்தமான உரைகளைப் பற்றியா? அங்கே இங்கே அசையாமல் செதுக்கி வைத்த சிலைகளாக அமர்ந்து கல்கி அமுதம் பருகிக் கொண்டிருந்த ஆயிரக்கணக் கான வாசகர்களின் அன்பைப் பற்றியா? ஸ்வீட் வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்டாலும் கல்கியின் மீது கொண்ட காதலால் விழாவை ஒரு 'மெகா ஹிட்' ஆக்கிய கிருஷ்ணா ஸ்வீட்ஸ் கிருஷ்ணன், முரளி சகோதரர்களின் ஆர்வம் பற்றியா? பள்ளிப் படிப்பு அதிகமில்லாமல் தம் சொந்த முயற்சியாலேயே பாடுபட்டு உயர்ந்து இனிப்பு சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாகி, இலக்கிய தாகம் கொண்டு, தம் மகன்களை யும் அந்த வெள்ளத்தில் இழுத்துவிட்டு ஆனந்தத்துடன் அதைக் கண்டு களித்த கிருஷ்ணா ஸ்வீட்ஸின் அதிபர் மகாதேவ ஐயரின் சாதனைகளைப் பற்றியா?

எல்லாவற்றைப் பற்றியும் கொஞ்சம் பேசி, நிறைய உணர வைத்து விடை பெற்றபோது அத்தனை பேர் விழிகளிலும் சின்னஞ்சிறு ஆனந்தத் துளிகள்!

மிகப் பெரிய விருந்துக்குப்பின் ஆர அமர அமர்ந்து வெற்றிலையைக் கிள்ளி, நீவி விட்டுப் போட்டுச் சுவைத்துக் கிறங்குவது போல கூட்டம் முடிந்து வெகு நேரம் அரங்க வாயிலில் ரசிகர்கள் அரை இருளில் நின்று நினைவுகளில் சுகமாக நீச்சலடித்துப் பேசி மகிழ்ந்து பிரியாவிடை பெற்றது நீண்ட நாள் நினைவில் நிற்கும்.

— கா.சு. வேலாயுதன்

"நான் சுயநல அரசியல்வாதியாம்! உங்கள் இன்ப மான பொழுது போக்குக்காக ஏழு சினிமா தியேட்டர் கள் கட்டியிருக்கிறேன். உங்கள் அவசரப் பயணத்துக் காக நாற்பது பஸ்கள் விட்டிருக்கிறேன். என்னைப் பார்த்தா சொல்வது, சுயநல அரசியல்வாதி என்று...!"

- கு. அருணாசலம்





''பையன் குழந்தை மாதிரின்னு தரகர் சொல்லி யும் பெண் வீட்டார் நம்பல...''

''அப்புறம் என்னாச்சு?''

''மாப்பிள்ளைப் பையன் பொண்ணு மடியில போயி உட்கார்ந்த பிறகுதான் நம்பினாங்க!''

– சந்தியூர் ஏ. கோவிந்தன்

அம்மாவின் சூப்பர் ஐடியா!



''நீ இங்கிலீஷ்ல பேசக் கத்துக்கணும் அவ்வளவுதானே, இந்தா இதைப் படி''ன்னு அம்மா, விவேகானந்தாவோட விளம்பரத்தைக் காண்பிச்சாங்க. சரி, இதையும் ட்ரை பண்ணிப் பார்க்கலாமேன்னு விளம்பரத்துல இருந்த கூப்பனை கட் பண்ணி அனுப்பி, பாடங்களை வரவழைச்சு படித்தேன். **'Really Great!'.**

இந்த அளவுக்கு நுணுக்கமா, தெளிவா பாடங்களை அமைச்சு, அதுவும் தபால் மூலமா இவ்வளவு ஈஸியா புரியற மாதிரி பாடங்கள் இருக்கும்னு நான் கொஞ்சம் கூட எதிர் பார்க்கலை. பாடங்களை சின்சியரா படிச்சு ப்ராக்டிஸ் பண்ணினேன்.

அம்மாவோட ஐடியா வீண் போகலை.

இப்போ நான் தயக்கமில்லாம, தைரியமா, இங்கிலீஷ்ல மட மடன்னு பேச ஆரம்பிச்சுட்டேன்.

'I have to thank my mother for giving me this turning point in my life'.

நீங்களும் இந்த ஐடியாவை 'follow' பண்ணிப் பாருங்க.

என்னை நீங்க நிச்சயம் 'thank' பண்ணுவீங்க.''

— *S. Priyadarshini.*

பயிற்சி விவரத்தைப் படித்துப் பார்த்து, கூப்பனை பூர்த்தி செய்து இன்றே அனுப்புங்கள். பாடங்களை V.P.P. மூலம் அனுப்புகிறோம்.

பயிற்சி விவரம்

LEVEL - 1 (அடிப்படை ஆங்கிலம்) அடிப்படையிலிருந்து தொடங்கி, ஆங்கில வார்த்தைகளை ஸ்பெல்லிங் மிஸ்டேக் இல்லாமல் எழுத, படிக்க எளிய முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ. 175/- மட்டுமே.

LEVEL - 2 (இலக்கணப் பயிற்சி) ஆங்கில இலக்கணத்தை முழுமையாகக் கற்றுக் கொண்டு பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுத முறையாகப் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.225/- மட்டுமே.

LEVEL- 3 (ஸ்போக்கன் இங்கிலீஷ்) தவறாக பேசிவிடுவோமோ என்ற பயமின்றி ஆங்கிலத்தில் சரளமாகப் பேச நவீன முறையில் பயிற்சி பெறலாம். பயிற்சிக் கட்டணம் ரூ.250/- மட்டுமே.

LEVEL - 2 & 3 இரண்டு பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ.375/- மட்டும் செலுத்தினால் போதும்.

LEVEL 1, 2 & 3 மூன்று பிரிவுகளிலும் சேர்ந்து பயிற்சி பெற ரூ.525/- மட்டும் செலுத்தினால் போதும்.

நான் விவேகானந்தாவின் ஹைபவர் இங்கிலீஷ் கோர்ஸில் சேர விரும்புகிறேன். எனக்கு பாடங்களை V.P.P.யில் அனுப்புங்கள். தபால்காரரிடம் பணத்தை செலுத்திப் பாடங்களைப் பெற்றுக் கொள்கிறேன்.

தேவையான கட்டத்திற்குள் ✓ குறியிடவும்

LEVEL 1 ☐ LEVEL 2 ☐ LEVEL 3 ☐

LEVEL 2 & 3 ☐ LEVEL 1, 2 & 3 ☐

பெயர்:.................................

முகவரி:.................................

....

....

.....................பின்கோடு.........

VIVEKANANDA INSTITUTE

9, நடேசன் தெரு, தி.நகர், சென்னை - 600 017.

KLK

கோவையில் காங்கிரஸ் சார்பில் நடந்த முப்பெரும் விழாவுக்கு வந்திருந்த த. நா. காங்கிரஸ் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தியைச் சந்தித்தபோது...

தமிழக காங்கிரஸ் அ.தி.மு.க.விடம் தூது போனதா?

– திண்டிவனம் ராமமூர்த்தி பேட்டி



"அ.தி.மு.க.வுடன் காங்கிரஸ் ஓர் ரகசிய உடன்பாடு வைத்துள்ளதாகவும், அந்த உடன்பாடு கொடுத்த தைரியமே 'ஜெ' பா.ஜ.கவை அடிக்கடி தொந்தரவு கொடுக்கும் போக்கை ஊக்கப்படுத்துகிறது எனவும் பரவலாகப் பேச்சுள்ளதே?"

"ரகசிய உடன்பாடு என்றால்... எந்த மட்டத்தில்...?"

"டெல்லி மட்டத்தில்..."

"அதிலொன்றும் ஆச்சர்யம் கிடையாது. தலைவர் சோனியா காந்திக்கு யாரைப் பத்தின அச்சமும் கிடையாது. அவங்க பேசணும்ன்னா யார் கூட வேண்ணாலும், எந்தக் கட்சி கூட வேணும்ன்னாலும் பேசுவாங்க. பேச வேண்டாம்ன்னு நெனச்சா யாரு கூடவும் பேசாமலும் இருப்பாங்க..."

"அந்தத் தொடர்புக்கு த.நா. காங்கிரஸ் கமிட்டி துணை போகவில்லை; தூது போகவில்லை என்கிறீர்களா?"

"அதற்கு எந்த அவசியமுமில்லை!"

"த.நா. காங்கிரஸ் கமிட்டியில் மரபுக்கு மாறாக இப்போது பல இளைஞர்களுக்குப் பொறுப்புகள் கொடுத்து வருகிறீர்களே...? ஏற்கெனவே கோஷ்டிப் பூசல் உள்ள காங்கிரஸுக்கு இது நெருக்கடியைத் தரவில்லையா?"

"எதற்கு நெருக்கடியைத் தரவேணும்?"

"பழுத்த காங்கிரஸார் எதிர்ப்புக் காட்டலாமே... சமீபத்தில் தங்கபாலுவுக்குக் கூட கமிட்டி நிர்வாகிகள் நியமிப்பில் அதிருப்தி என்று...."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை. இளைஞர்களுக்கு வாய்ப்புக்

கொடுத்தாலும், பெரியவர்களை அரவணைத்துத்தான் செல்கிறேன். அதுக்காக யாரும் இங்கேயிருந்து கோபித்துக் கொண்டு போய் விட்டார்களா? அப்படி யாரும் என்னிடம் எதிர்ப்புக் கூட தெரிவிக்கவில்லை. எனவே, அது மாதிரி இருக்கவே இருக்காது. வீண் கற்பனை..."

"உங்களிலிருந்து பிரிந்து சென்ற த.மா.கா., த.நா ஆளுங் கட்சி கூட்டணியில் இருந்து கொண்டே ஜி.பி. 2001-ல் காமராஜ் ஆட்சி என ஒரு தீர்மானம் போட்டு பிரசார இயக்கங்கள் நடத்தி வருகிறது. அது மாதிரி மக்களிடம் நேரடி உணர்வுகளைத் தூண்ட – மாநில அளவில் புதிய முடிவுகளை த.நா. காங்கிரஸ் எடுத்து வருகிறதா?"

"காங்கிரஸ்காரர்கள் அது மாதிரி என்ன தீர்மானம் போட்டு விட முடியும்? ஒன்று வேண்டுமானால் சொல்ல முடியும். தமிழ் நாட்டில் வரும் காலத்தில் காங்கிரஸ் ஆட்சி அமைகிற முறையில் பாடுபட முடியும். அதைத்தான் வலிமையாக்க முயன்று வருகிறோம். அதை விரைவில் செயல்படுத்துவோம்..."

"த.மா.கா. கூடாரம் காலி, காங்கிரஸுக்கு ரஜினி வருவார், அடுத்தது நாம்தான்' என்கிற போக்கில் ஆங்காங்கே காங்கிரஸின் பிரசாரம் வெளிப்படுகிறதே.. அதற்கு என்ன அர்த்தம்?"

"நாங்கள் என்ன சொல்லுவது? மூப்பனாரே சொன்னாரே! 'எங்க கட்சியிலிருந்து (த.மா.கா.) வருகிற ஆட்களை ஏன் சேர்க்கறீங்க? வேற கட்சியிலிருந்து ஆட்களை சேர்க்கக் கூடாதா?'ன்னு அவர் கேட்டாரே...."

"கடந்த தேர்தலில் காங்கிரஸ் அடைந்த படுதோல்வி இனி வரும் காலங்களில் த.மா.கா.வுடன் இணைந்து செயல்பட வைக்குமா?"

"பலமான கூட்டணி வைத்து அவர்கள் அடைந்தது படுதோல்வியா? தனியாக நின்று கூட்டணி இல்லாமல் தோற்றது படுதோல்வியா? வரும் காலங்களில் காங்கிரஸ் தன்னுடைய நலனைக் காக்கும். அதற்கேற்ற வகையில் செயல்படும்."

"வாழப்பாடி ராமமூர்த்தி (ராஜீவ் காங்கிரஸ்) சத்தியமூர்த்தி பவனை (த.மா.கா விடமிருந்து) மீட்டு இ. காங்கிரஸிடம் கொடுக்கப் போவதாகக் கூறியுள்ளாரே...?"

"அவர் எதற்கு அப்படிச் சொன்னார் என எனக்குத் தெரியாது. ஆனால் காங்கிரஸ் தன்னுடைய சொத்தை தானே மீட்டுக் கொள்கிற – திரும்பப் பெறுகிற வலிமை உடையது. அதை 'யாரும்' மீட்டுக் கொடுக்கிற அளவு நாங்கள் பலவீனப்பட்டும் போகவில்லை."

"நீங்கள் தலைவராக வந்த பின்னால், தமிழக காங்கிரஸ் எப்படியுள்ளது?"

"ஒரு நம்பிக்கையோடு செயல்படுகிற ஆர்வம் எங்கள் தொண்டர்களுக்கு வந்துள்ளது. காங்கிரஸோடு தங்களை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இளைஞர்களிடையே குறிப்பாக மாணவர்களிடையேயும் கூட வந்துள்ளது. அதிலிருந்தே காங்கிரஸ் தலைமையின் மீது – சோனியா காந்தி மீது நம்பிக்கை வந்துள்ளதை பிரகாசமாய் அறிய முடிகிறது!" ●

பேட்டி : **"கேயெஸ்வி"**

துணுக்ஸ்!

பிரபல நடிகை காதரீன் கார்னல், நியூயார்க் நகரில் நடந்த, பெர்னாட் ஷா எழுதிய நாடகத்தில் நடித்தார்.

"பிரமாதம், அருமை, அசத்தல்" என்றவாறு அந்த நடிகைக்கு ஷா ஒரு தந்தியடித்தார்.

நடிகையோ, தன்னடக்கத்துடன் "அவ்வளவு புகழுமளவுக்குத் தகுதியில்லை" என்று பதிலனுப்பினார்.

கிண்டலுக்குப் பெயர் போன ஷா, "நான் சொன்னது என் நாடகத்தைப் பற்றியாக்கும்" என்று தெரிவித்தார்.

"நான் அனுப்பிய தந்தியும் உங்கள் நாடகத்தைப் பற்றித்தான்" என்றவாறு பதிலனுப்பி, ஷாவின் மூக்கை அறுத்து விட்டார். அந்த நடிகை.

நன்றி – ஹிந்து
தகவல் : க. மாரியப்பன்

சுப்ரீம் கோர்ட்டில், புதிய வழக்குகளை ஏற்காமல், பழைய வழக்குகளை முதலில் முடிக்கலாம் என தீர்மானித்தால், அவற்றை முடிக்க எவ்வளவு காலம் ஆகும் தெரியுமா? 324 ஆண்டுகள்!

– இரா. திலீப்

இல்லத்தரசி

ஊதினால் பறந்துவிடக்கூடிய கனம். உயரம் மட்டும் ஒட்டகச்சிவிங்கி மாதிரி! 'பெட்' பாட்டில் கண்டுபிடித்த மேதாவிகளை மனதாரச் சபித்தான் கோபி. இப்படியா விவஸ்தையில்லாமல் வடிவமைப்பார்கள்!

பாட்டில் வாயில் ஒரு ஃபனலைப் பொருத்தி, ஒரு லிட்டர் நல்லெண்ணெய் சாஷேயை அதில் நிரப்ப முயன்று கொண்டிருந்தான். சாஷேயைப் பிரித்தாகிவிட்டது. அதை இரு கைகளாலும் பிடித்தபடி ஃபனலில் இருத்தி இலேசாக சாய்க்கலாம் என்று பார்த்தால், பாட்டில் 'முன்னுக்குச் சரிந்துவிடுவேன்' என்று பயமுறுத்தியது.

தீவிர முயற்சியில் நெற்றியெல்லாம் வியர்த்து, கைகள் குளிர் ஜுரம் வந்தாற்போல் நடுங்கின.

எல்லாம் இந்தக் கல்பனாவால் வந்தது! காலையிலேயே பிரித்துக் கொட்டி வைத்துவிட்டுப் போயிருக்கலாம். இப்போது விளக்கேற்ற வேண்டுமென்று பார்த்தால் பாட்டிலில் சொட்டு எண்ணெய் இல்லை!

பக்கத்து ஃப்ளாட்டில் கடனா கேட்க முடியும்...?

'மாமி! இரண்டு ஸ்பூன் நல்லெண்ணெய் தர்றீங்களா...?'

சே! அதைவிட சாஷேயைக் கொடுத்து, பாட்டிலையும் கொடுத்து, பிரித்து ஊற்றித் தரச் சொன்னால் ஜெயா மாமி மகிழ்ச்சியோடு உதவி செய்வாள். அதைவிட மகிழ்ச்சியோடு சொல்லியும் காண்பிப்பாள் :

''கல்பனா! நேத்திக்கு கோபி நல்லெண்ணெய் பாக்கெட்டோட திண்டாடிக்கிட்டிருந்தானா.... நான்தான் பிரிச்சு கொட்டிக் குடுத்தேன். கார்த்தால உனக்கு அவசரம். மறந்துட்டிருப்பே...''

இதைக் கேட்டுவிட்டு கல்பனா தன் கையாலாகாத்தனத்தை எப்படியெல்லாம் சொல்லிக் காட்டுவாள் என்பதும் கோபிக்குத் தெரியும். அந்தக் கற்பனையில் கை நடுக்கம் அதிகமாயிற்று. மூச்சை இழுத்துப் பிடித்து சாஷேயைச் சரித்தான். சட்டென்று ஃபனலுடன் பாட்டில் முன்னுக்குச் சாய்ந்தது...

1


கல்பனா வந்தபோது குத்துவிளக்கு, குளம் கட்டிய எண்ணெயும் திரியும் குங்குமப் பொட்டுமாகச் சமர்த்தாக முத்துப் போல் எரிந்து கொண்டிருந்தது. தரையிலும் சமையலறை மேடையிலும் கூட சிறு எண்ணெய்க் குளங்கள்! நியூஸ்பேப்பர் தாள்களைப் பிரித்துப் போட்டிருந்தான் கோபி. தாள்களையெல்லாம் நனைத்த பிறகும் எண்ணெய் தரையில் பரவிக் கிடந்தது.

''ஐயோ! என்னங்க இது... திரும்பவும் இப்படிக் கொட்டியிருக்கீங்க...''

மூன்றாம் வகுப்பு கணக்கு டீச்சர் முன் நிற்பது போலிருந்தது கோபிக்கு.

மௌனமாக கல்பனாவை அளந்தான். அவசரத்தில், பின்னாமல் வெறுமே ஹேர்பாண்ட் கட்டிய கூந்தல். முன்நெற்றியில் கலைந்து கிடக்கும் முடி. உதட்டின் மேல் வியர்வைப் பிசுபிசுப்பு. கழுத்தின் வளைவும், தோளின் சரி





வும், ரவிக்கையின் சிவப்புடன் முரண்பட்டு நின்ற சேலையின் மஞ்சளும்.... எல்லாவற்றின் மீதும் பரவிக் கிடந்த இலேசான களைப்பும்...

கோபிக்குள் மூன்றாம் கிளாஸ் மாணவன் காணாமல் போனான்.

உரிமையோடு சிலிர்த்தெழுந்த அவன் கிளர்ச்சியைப் புறங்கையால் ஒதுக்கினான்.

''விடுங்க!.... இதையெல்லாம் யாரு சுத்தம் பண்றது...?''

அவன் பொறுமை காத்தான்.

''இப்படி வந்து உட்காரு. அஞ்சு நிமிஷம்... அப்புறம் பண்ணலாம். நானும் ஹெல்ப் பண்றேன்...''

''போதும் நீங்க ஹெல்ப் பண்ணிக் கிழிச்சது...''

புடைவையைத் தூக்கிச் செருகிக் கொண்டு துணிக் கிழிசல் எடுத்து வந்தாள் கல்பனா.

''போன முறையே சொன்னேனில்ல... நீங்க பாட்டில்ல ஊத்த வேணாம்... ஏதாவது சில்வர் அடுக்குல எண்ணெயைக் கொட்டி வையுங்க... அப்புறமா பாட்டிலுக்கு மாத்திக்கலாம்னு... ஏன் இப்படி...?''

''நானும் போன முறையே சொன்னேனில்ல... பிளாஸ்டிக் கேன்ல எண்ணெய் வாங்கலாம்னு... அதே கேனைத் திருப்பிக் கொடுத்தா விலையில் இரண்டு ரூபாய் தள்ளிடுவான்...''

''கேனைத் திருப்பித் தர ஞாபகம் இருக்க மாட்டேங்குதுன்னு நானும் போன முறையே சொன்னேனில்ல... சாஷேயில எண்ணெய் 'பேக்' பண்றவனெல்லாம் முட்டாளா?...''

– குரல் உயர்த்தாமல்தான் வாதத்தைத் தொடர்ந்தாள்.

டீ.வி. ஓசையால் அதை மூழ்கடித்தான்.


அவள் சொன்னதுபோல் பாத்திரத்தில் ஊற்றியிருக்கலாம். ஆனால் அந்த நேரத்தில் தோன்றவில்லை. யோசிக்காமல் சாஷேயைப் பிரித்தாயிற்று... என்ன செய்ய!

அவனுக்கு இது எதுவும் பழக்கமில்லை. மூன்று சகோதரிகளும் அம்மாவும் சமையலறை சாம்ராஜ்யத்தின் சக்ரவர்த்தினிகளாகப் போட்டி போட்டுக் கொண்டு பரிபாலனம் செய்தார்கள். இவன் அவர்களின் செல்வக் குழந்தை. நல்லெண்ணெய்க்கும் கடலெண்ணெய்க்கும் வித்தியாசம் தெரியாமல் நிம்மதியாக வளர்ந்து ஆளானவன்.

அம்மாவின் கிரீடத்தைத்தான் கல்பனாவுக்கும் சூட்டி அழகு பார்க்க நினைக்கிறான். அவள்தான் அணிய மறுக்கிறாள்.

கலி முற்றி விட்டது. பெண்கள் புதுசு புதுசாக வேஷம் போடுகிறார்கள். எங்கே போனாலும் பயமுறுத்துகிறார்கள். கல்விக் கொள்கையில் அவர்களுக்குச் 'சிறப்புப் பாடத் திட்டம்' என்று அறிவித்தால், எகிறிச் சாடுகிறார்கள். 'எங்களுக்கு விலங்கிடப் பார்த்தீர்களானால் சும்மா விடமாட்டோம்!' என்று சங்கத்துக்காரிகளெல்லாம் கூச்சல் போட்டு ரகளை பண்ணுகிறார்கள்.

நல்லவேளை! கல்பனா எந்த சங்கத்திலும் இல்லை. அந்த அமைப்பு பலமெல்லாம் இல்லாமலே அவள் உக்ரத்தை அவனால் சகிக்க இயலவில்லை.





சீதா ரவி

"பொண்ணு வேலைக்குப் போறா..." என்று அம்மா இழுத்தபோது, "போகட்டும்..." என்றது இவன்தான். அதில் இத்தனை சள்ளையிருக்கும் என்று நினைக்கவில்லை.

"மெட்ராஸுல தனியாத்தான் நீங்க குடித்தனம் போடணும். நாள் கிழமைக்கு இங்க மதுரைக்கு வந்துக்கலாம்..."

"வீடு பார்த்துடறேன்..." என்று ஆசை யாசையாகப் புத்தம் புது ஃப்ளாட்டுக்கு வாடகை பேசி அட்வான்ஸ் கொடுத்தான்.

தேனிலவுக்கு ஊட்டி போனபோதே கொஞ்சம் தகராறுதான்.

"ஆபீசுக்கு எஸ்.டி.டி. போடணுங்க..."

மோகமென்கிற சமுத்திரத்தில் மூழ்கி யிருந்தவனை வெளியே இழுத்துப் போட் டாள்.

"அதெப்படி உனக்கு மட்டும் இந்த நேரத் துல கூட ஆபீஸ் ஞாபகம் வருது...?"

"வருதே..."

"சரி, போன் பண்ணலாம்...."

'கன்ஸைன்மென்ட் வந்ததா? 'டாலி' ஆயிற்றா? மறக்காமல் புதன் கிழமை ஃபேக்ஸ் அனுப்ப வேண்டும்; கும்பகோணத் திலே தம்புசாமிக்கு எஸ்.டி.டி. போட்டுப் பேசு...' என்றெல்லாம் வரிசையாக நினைவூட்டினாள்.

'எவ்வளவு பொறுப்பாக இருக்கிறாள்...?' – அவனுக்குக் கொஞ்சம் பெருமையாகவும் நிறைய பயமாகவும் இருந்தது.

வீட்டுக் கணக்கு மட்டும் டேலி ஆகவேயில்லை!

"முந்நூறு ரூபாய் எப்படிச் செல வாச்சு...?"

"தெரியலைங்க..."

"என்ன தெரியலை...?"

"இதப் பாருங்க... வீட்டுச் செலவுக் குன்னு நாம ஒதுக்கியிருக்கறதுக்கு மேலே ஒரு பைசா கூட செலவாகலை. அப்படி யிருக்கறப்போ இந்த முந்நூறு ரூபாய் என்ன ஆகியிருந்தா என்ன...?"

"எப்படி செலவாச்சுன்னு நமக்குத் தெரிஞ்சிருக்கணும்..."

"சரிதான்! எத்தனையோ சின்னச் சின்ன செலவுங்களை எழுதி வைக்கறதில்லே. தக்காளி வாங்கினது, குடை ரிப்பேர், மலிவா கிடைச்சதுன்னு இரண்டு பிளாஸ் டிக் பக்கெட்... இப்படி முந்நூறு ரூபாய்க்கு ஏதாச்சும் இருக்கும்... விடுங்க...!"

"எல்லாத்தையும் கணக்கெழுதறதுதான் நல்லது..."

"ரொம்பத் தொல்லை பண்ணாதீங்க! எங்க நேரம் இருக்கு?... போனா வந்து சமைக்கவும் சாப்பிடவும் தூங்கவும் சரியாப் போயிடுது.... அனாவசியமா ஏதாச்சும் வாங் கினா கேளுங்க..."

"இல்லைன்னா கேட்கக்கூடாதுன்றியா?"

"நீங்க என்ன வேணும்னாலும் கேட்க லாம். உங்களுக்கு உரிமை இருக்கு... ஆனா, நானும் எட்டாயிரம் சம்பளம் வாங்கறேன். உங்களை மாதிரிதான் கஷ்டப்பட்டு உழைச்சு சம்பாதிக்கறேன். பணத்தோட அருமை எனக்கும் தெரியும்.. அதை நீங்க புரிஞ்சுக்கணும்..."

'என்ன அகந்தை? அலட்டல்!' என் றெல்லாம் சண்டை வலிக்க இடம்தராத பிரதிவாதம். கர்வத்தைத் தொட்டும் தொடா மல் நிற்கிற புத்திசாலித்தனமான பெண்மை!

லா பாயின்ட் கல்பனா! இப்படியே தன்னை அடிக்கடி வைக்கிற இடத்தில் வைத்து, சுற்றியும் ஒரு முள் வேலி கட்டி விடுகிறாள். அதனாலேயே அவள் ஜெயித்து விட்டதாக அர்த்தமா...?

நாற்காலிக்குப் பின்பக்கமாக தோள் மேல் வந்து விழுந்த கையிலிருந்து சீயக்காய் தூள் மணம் வீசியது. நல்லெண்ணெய் அமர்க்களத்தை நேராக்கிவிட்டு வந்திருக் கிறாள்.

"இந்தாம்மா சதா காச்சு மூச்சுனு கத்தி சண்டை போட்டுக் கொண்டிருக்கீங்களே. இதையே நான் எத்தனை நாள் பார்த்துக் கொண்டிருக்கறது? தில்லா அடிச்சுக்கிட்டு சண்டை போடுங்க, பார்க்கலாம்!"

– லலிதா செல்லப்பா



அவன் மடியில் கிடந்த ரிமோட் எடுத்து டீ.வி.யை அணைத்தாள்.

"சாப்பிட வாங்க..."

சில வினாடிகளுக்குக் கைகளை விடாமல் பிடித்துக் கொண்டான்.

"வாங்க...! டயர்டா இருக்கு..."


எழுந்து அவன் முகத்தைப் பார்த்தாள். கண்ணடியில் கருவளையங்கள்.

"சீக்கிரம் சாப்பிட்டுட்டுப் படுத்துத் தூங்கு. கல்பனா..."

சப்பாத்தியும் குருமாவும் சூடாக இருந்தன.

"ரொம்ப நல்லாயிருக்கு... இப்போ வந்து செஞ்சதா...? இவ்வளவு சீக்கிரமா எப்படிச் செய்ய முடிஞ்சது...?"

"காலைலயே பண்ணி வைச்சாச்சு... அதெல்லாம் நீங்க எங்கே கவனிப்பீங்க?... பேப்பரைத் திறந்து வச்சுக்கிட்டு உட்கார்ந்தா, ஒரு மணி நேரத்துக்கு உலகமே தெரியாது. அப்புறம் நீங்க தயாராகிச் சாப்பிட்டுக் கிளம்பத்தான் சரியாயிருக்கும்..."



"ஏங்க இந்த நிலைக் கண்ணாடில ஏதோ குறையிருக்கிற மாதிரி தெரியுதே..."

– ஜோதி ரஞ்சன்

"நான்தான் காயெல்லாம் வாங்கியாந்து குடுக்கறேனில்லே... வேற ஏதாச்சும் வேணும்னா செய்ய மாட்டேனா...?"

"ஆமாம்! இப்போ எண்ணெய் பிரிச்சுக் கொட்டினீங்களே, அது மாதிரி!"

"வில் யூ ஷட் அப்!" – அவன் முகம் கறுத்தது.

'ஆண்டவனே! ஏன் பசியென்று ஒன்றை வைத்தாய்! ஒரு சாண் வயிறு நிறைவதற்குள் புருஷனும் மனைவியும் எத்தனைவிதமாகத்தான் ஒருத்தரை ஒருத்தர் பிறாண்டி வருத்திக் கொள்வது...?'

மிகவும் சோர்ந்து போய் மௌனமாகச் சாப்பிட்டு முடித்தான். கை கழுவி நேராகப் போய்ப் படுத்துக் கொண்டான்.

கண்கள் செருகிய நேரத்தில் விசும்பல் ஒலி எழுப்பி விட்டது.

"கல்பனா!" – தோளைத் தொட்டதும் அழுகை வேகமாயிற்று.

"என்னம்மா ஆச்சு..."

விருட்டென்று எழுந்து உட்கார்ந்து கொண்டாள்.

"எவ்வளவு ஏற்பாடா காலைலயே எல்லா வேலையும் முடிச்சுட்டுப் போறேன்... சாயந்திரம் வந்தா ஒரு மணி நேரம் கால் நீட்டி உட்காரலாம்னு... அதுக்கு வழியில்லாம முதல்ல ஸ்கூட்டர் ரிப்பேர்... அதைக் கொண்டு ஒர்க்ஷாப்பிலே போட்டுட்டு பாதி வழி ஆட்டோ, பாதி பஸ்ஸுல வந்ததுல அரைமணி வீணாச்சு. அப்புறம் அரைமணி நல்லெண்ணெய்யில நீச்சல்..."

"ஸ்கூட்டர்ல வரலியா நீ...?"

"இப்போ கேளுங்க... வரும்போதே கைல ஹெல்மெட்டைக் காணுமே என்ன ஆச்சுன்னு கேக்க தோணிச்சா...?"

சில கணங்கள் ஆடிப் போனான். 'கவனிக்கவில்லைதான். ஆனால் அதுவே அக்கறையின்மைக்கு அத்தாட்சியாகி விடுமா...? அன்பு இல்லை என்று ஆகி விடுமா...? எப்படிப் புரியவைப்பது...?'

"இதோ பாரு... லேடீஸ் மாதிரி எங்களுக்கு அந்த சூசகமெல்லாம் போதாது... இதுக்கெல்லாம் வருத்தப்படலாமா? ரொம்ப சங்கடமாயிருந்தா வேலையை விட்டுட்டு நிம்மதியா வீட்டில ஆறு மாசம் இரு... அப்புறம் பார்க்கலாம்..."

"ஆன்னா ஊன்னா, இந்த ஒரு தீர்வுதான் உங்களுக்குத் தெரியும் – வேலைய விட்ரு... ரொம்ப சுலபமாச் சொல்லிடுவீங்க... உங்களுக்கென்ன..."

திரும்பவும் அழுகிறாள்!

"கடவுளே ப்ளீஸ், நிறுத்து.... இப்படி அழுதா நாளைக்கு ஜுரம்தான் வரும்...."

மறுநாள் ஜுரம் வந்தது – அவளுக்கல்ல; அவனுக்கு!

(தொடரும்)



தேசிய கீதம்

தமிழ் சினிமா கதைகளில் இரண்டு வகை உண்டு:

அ) ராஜா-ராணி கதை- அதிலே ஒரே சமயத்தில் பலரைப் பந்தாடும் கதாநாயகன் போன்ற மனோராஜ்ய சங்கதிகள்.

ஆ) பெரிய மனிதர்களை அல்லது வி.ஐ.பிக்களை அழ வைத்து, தங்கள் தவறை உணரச் செய்யும் நம்ப முடியாத கற்பனைகள்.

தமிழ் சினிமாவுக்கு இரண்டு வர்த்தக இலக்கணங்கள் உண்டு:

அ) சராசரியான கமர்ஷியல் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வது.

ஆ) கமர்ஷியல் விதிகளாகக் கருதப்படுபவற்றை மீறி கதை, கதாபாத்திரங்கள் உருவாக்கத்தில் மட்டும் கவனம் செலுத்துவது.

தமிழ் சினிமாவில் இரண்டு விதமாக 'ரீல்' விடுவதுண்டு!

அ) 'நம்பு, நம்பு', என்று கெஞ்சினாலும் நம்ப முடியாத அளவுக்கு மெகா ரீல்!

ஆ) நம்பமுடியாத ரீல்தான்- ஆனால் நடந்தால் நன்றாயிருக்குமே என்று ஏங்க வைக்கும் ரீல்!

தமிழ் சினிமாவில் இரண்டு விதமான இசையமைப்பு உண்டு.

அ) வெறும் பாடல்களில் மட்டும் கவனம் செலுத்தினால் போதும் என நினைக்கும் ரகம்.

ஆ) பாடல்கள் மட்டுமின்றி பின்னணி இசையிலும் ரீ-ரெக்கார்டிங்கிலும் நுணுக்கமாக உழைக்கும் ரகம்.

தமிழ்சினிமாவில் இரண்டு விதமான நடிப்பு உண்டு.

அ) கிடைத்த பாத்திரத்தில் தங்களைப் புகுத்தும் நடிகர்களின் லொள்ளு!

ஆ) கொடுக்கப்பட்ட பாத்திரமாகத் தங்களை மாற்றிக் கொள்ளும் நடிகர்களின் நல்முயற்சி.


தமிழ் சினிமாவில் இரண்டு விதமான டைரக்டர்கள் உண்டு:

அ) தொழில்நுட்ப முன்னேற்றத்தை வெறும் காதல் காட்சிகளால் தாளித்துப் பரிமாறும் ரகம்.

ஆ) வேறுபட்ட கதையைப் பொறுப்போடு கையாண்டு 'உறைக்கிற' மாதிரி பரிமாறும் ரகம்...

தேசிய கீதம் படத்தைப் பொறுத்தவரை எல்லா பரிமாணங்களுக்குமான விடை ஆ... படம் ஆஹா ஓஹோ இல்லைதான்.. ஆனாலும் ம்ஹூம்...? அப்படியா? என்று புருவம் உயர்த்த வைக்கிறது. ஒரு ஊழல் முதலமைச்சர் மனம் திருந்தும் திருப்புமுனை காட்சியில் பெருமூச்சுடன் ஏங்கவும் வைக்கிறது!

– ஜி.





1998 நவம்பர் 8
வெகுதான்ய ஐப்பசி 22
மலர் : 57
இதழ் : 15

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

தேவே கௌடாவின் சகுனி வேலை!

அரசியல் சுழல் காற்றின் அதிர்ஷ்ட வீச்சினால் கர்நாடக முதல்வராக இருந்த தேவே கௌடா இந்தியாவின் பிரதமர் ஆனார். அதே அரசியல் சுழலின் மற்றொரு வீச்சில் அப்பதவி பறிபோனது!


இந்த வரலாறு இன்னமும் தேவே கௌடாவின் மனத்தில் பசுமையாகவே இருக்கும்.

எனினும் இந்த அனுபவங்களிலிருந்து தேவே கௌடா எதையுமே கற்றுக் கொள்ள வில்லை! பதவி என்பது தாற்காலிகமானது என்பதைப் புரிந்து கொள்ளாமல் இன்னமும் அதிகார பலத்துக்காக அலைகிறார்.

இன்று கர்நாடக அரசியலில் ஓர் அவலட்சணமான நெருக்கடியைத் தோற்றுவிக்க முழுமூச்சுடன் உழைத்திருக்கிறார் முன்னாள் பிரதமர்!

இத்தனைக்கும் ஜே.எச். படேல் தலைமையில் கர்நாடகாவில் நடைபெறுவது கௌடா சார்ந்திருக்கும் ஜனதா தளத்தின் ஆட்சிதான். பெரிய அளவில் குறை கூறுவதற்கு இடமின்றி படேல் அரசு சீராகவே இயங்கி வந்திருக்கிறது.

திடீரென்று நினைத்துக் கொண்டு, 'இந்த ஆட்சி சரியில்லை; முதல்வர் தமது அமைச் சர்களுக்குப் போதுமான அளவு சுதந்தரம் தரவில்லை' என்று கௌடா வதந்தி கிளப்பி யிருக்கிறார். அதோடு, ஐம்பது ஜனதா தள எம்.எல்.ஏக்களின் ஆதரவையும் கேள்விக்



குறியாக்குவதற்கு மிகவும் மெனக்கெட்டு உழைத்திருக்கிறார்!

படேல் தமது பெரும்பான்மையை சட்டசபையில் நிரூபிக்கத் தயார் என்கிறார். ஆனால் ஜனதா தள சட்டசபை உறுப்பினர்களின் கட்சிக் கூட்டத்தில்தான் முதல்வரின் பலம் பரிசோதிக்கப்பட வேண்டும் என்பது கௌடாவின் பிடிவாதம்.

'எப்படியேனும் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிப்பேன்' என்று முதல்வர் கூற, 'பி.ஜே.பி. ஆதரவை ரகசியமாக நாடுகிறார் படேல்' என்று பதில் தாக்குதல் நடத்துகிறார் கௌடா.


இவ்வாறு சின்ன புத்தி அரசியலில் ஈடுபட்டு, கர்நாடக நிர்வாகத்துக்கே முட்டுக் கட்டை போட்டு, ஜனதாதளத்துக்கு அவப் பெயர் தேடித் தந்து, பிரதமர் பதவிக்கே அகௌரவம் இழைத்திருக்கிறார் தேவே கௌடா.

பொதுவாக, அரசு நிர்வாகம், பொது நலன் என்று வரும்போது, தலைவர்கள் கட்சி கடந்த கண்ணோட்டத்துடன் அணுகி, தேச நன்மைக்கு வழி செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஆனால் தேவே கௌடாவின் பார்வையோ கட்சிக் கண்ணோட்டம் என்கிற குறுகிய எல்லைக்குள் கூட அடங்கவில்லை... அதனினும் சிறுத்துப் போன சுயநல வட்டத்துக்குள்ளேயே சுழன்று கொண்டிருக்கிறது.

அமைதியாக நடந்துவரும் ஓர் ஆட்சியைக் குரங்கு கை பூமாலையாகப் பிய்த்துக் குதறுவதற்கு வேறென்ன நோக்கம் இருக்க முடியும்...?

தமது மகன் குமாரசாமி கௌடா சட்டசபைத் தலைமைக்கு வர வேண்டும் என்பதும் அதன் மூலம், தாம் கர்நாடக அரசியலில் ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்பதுதான் தேவேகௌடாவின் இலட்சியங்கள். இதை அவரோ அவரது ஆதரவாளர்களோ வெளிப் படையாக ஒப்புக் கொள்ளப் போவதில்லை. இந்த 'இலட்சியங்களை' அடைய ஜாதி



அரசியல் என்கிற அபாயகரமான ஆயுதமும் ஃப்ரீப்கேஸ் அரசியல் என்கிற கேவலமான குயுக்தியும் பிரயோகிக்கப்படும் என்று நம்புவதற்கு இடமிருக்கிறது.

காவிரி நீர்ப் பகிர்வு தொடர்பான கூட்டத்துக்காக டெல்லி சென்ற கர்நாடக முதல்வர் படேல், தமது தலைமைக்கு அபாயம் எதுவுமில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஜனதா தள சட்டசபை உறுப்பினர்கள் கூட்டத்தை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டு வெற்றியும் பெற்றுள்ளார். சட்டசபையில் நம்பிக்கைத் தீர்மானம் எழுப்பப்பட்டால் முதல்வரை ஆதரிப்பதாக ஜனதா தள சட்டசபை உறுப்பினர்களும் கூறியுள்ளனர். ஆனால், பிற்பாடு நடக்கிற ஜனதா தள சட்டசபை உறுப்பினர்கள் கூட்டத்தில் படேல் தமது பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டும் என்றும் கேட்டுள்ளனர்.

எதிர்க்கட்சிக்காரர்கள்தான் பெரும்பான்மையை நிரூபிக்கச் சொல்லிக் கேட்பார்கள்... சொந்தக் கட்சிக்காரர்களே ஒரு முதல்வரை அவ்வாறு கேட்கும் அளவுக்குக் குட்டையைக் குழப்பியிருக்கிறார் தேவே கௌடா!

லஞ்ச - ஊழல் மலிந்தால், லோக் பால் அமைப்பு நிறுவித் தீர்வு காண வேண்டும் என்று கோரலாம்.

தேர்தல் அநீதிகளை நீக்க, தேர்தல் சீர்திருத்தங்களை வேண்டலாம்.

நிர்வாகத் தேக்கத்தையும் அக்கறையின்மையையும் நீதித்துறை தட்டிக் கேட்கும் என்று நம்பிக்கை கொள்ளலாம்.

ஆனால், அனைத்துக்கும் அடிப்படையான அரசியல் நாகரிகமும் அதற்குத் தேவையான தனிநபர் ஒழுக்கமும் தேய்ந்து, கரைந்து கொண்டே போகுமானால் நிலைமையைச் சீர் செய்வது மிகவும் கடினமாகிவிடும்.

தேவே கௌடா போன்ற பொழுது போகாத தலைவர்கள் சகுனி வேலைகளில் ஈடுபட்டு, நாட்டைச் சீர்குலைக்கக் கூடாது. ●



ஒரு பிரபல திரைப்பட வசனகர்த்தா, இரண்டு மாதங்களுக்கு முன்னர் தி. நகரி லுள்ள மிகப் பெரிய நகைக் கடைக்குச் சென்று, தம் மனைவிக்கு ஒரு தங்க நெக்லஸ் வாங்கிச் சென்றார். ஏகப்பட்ட விலை.

ஆனால் நகை வாங்கப்பட்ட சில நாட்களிலேயே தங்கத்தின் நிறம் மங்கத் தொடங்கியது. முதலில் அவர்கள் சந்தேகப் படவில்லை. அழுக்கோ என்றுதான் எண்ணினர். ஆனால் நாளாக ஆக, நிறம் முற்றிலும் மாறி, வெளேரென்று வெள்ளி போல் ஆகிவிட்டது!

அதிர்ந்து போன வசனகர்த்தா, நகை யைக் கொண்டு போய் சோதித்துப் பார்க்க, அது தங்க நகையே அல்ல; தங்க முலாம் பூசப்பட்ட வெறும் வெள்ளி நகைதான் என் பது தெரிந்து விட்டது.

நகை வாங்கியதோ, மிகவும் புகழ்பெற்ற ஒரு கடை. நகைக் கடை அதிபரும் முக் கியப் புள்ளி; பிரபலமான மனிதர். தினசரி ஆயிரக்கணக்கில் மக்கள் வந்து குவியும் நிறுவனம்; லட்சக்கணக்கில் வியாபாரம் நடக்கும் இடம். ஆனாலும் போலி நகை!

வசனகர்த்தாவின் திரையுலக அந்தஸ்து மற்றும் அவர் தயாராக வைத்திருந்த பில் மற்றும் அந்த நகை வெள்ளிதான் என்பதற் கான வலுவான ஆதாரம் – இவையெல் லாம் அவருக்கு நகையை மாற்றி, ஒரிஜினல் தங்க நகையைக் கிடைக்கச் செய்து விட் டன.

இதுவே ஓர் அப்பாவி, சாமானியப் பொதுஜன

நகைக்

மென்றால்?
வெறும் ஏமாற்றமும்
சோகமும்தான்!

"இது இன்று நேற்று நடக்கிற காரியமில்லை. நகைத் தொழில் என்று ஒன்று ஆரம்பித்த நாளிலிருந்தே செய்யப் பட்டு வரும் ஏமாற்று வேலைதான். தேன் எடுப்பவன் புறங்கையை நக்காமல் இருக்க முடியாது என்பது போல் மிகப்பெரிய பணத் தொழில்களில் மோசடி மிகக் கொஞ்ச அளவிலாவது கட்டாயம் இருக் கும்" என்கிறார் ஒரு நகைத் தொழிலாளி. பல பிரபல நகைக் கடைகளுக்கு பீஸ் ரேட் அடிப்படையில் டிசைன் செய்து தரும் இவர், தமது பெயரை வெளியிட வேண் டாம் என்று கேட்டுக் கொண்ட பின்னர் கூறிய தகவல்கள் மிகவும் அதிர்ச்சி தருபவை. சாம்பிளுக்கு ஒரே ஒரு தகவல் –

"1995-ம் வருடத்திலிருந்து இன்றைய



கடைகள் அடிக்கும் பகல் கொள்ளை!

— பெண்களே உஷார்!

தினம் வரை நகைக் கடைகளில் வாங்கப்பட்ட எந்த ஒரு தங்க நகையும் கட்டாயமாக 22 கேரட் இருக்காது!

"அதாவது, 22 கேரட் தங்கத்துக்கான விலையைக் கொடுத்து விட்டு, சுமார் பதினெட்டிலிருந்து இருபது கேரட் வரையிலான தங்கத்தை மட்டுமே நாம் வாங்கிச் செல்கிறோம்" என்கிறார் இவர்.


"இந்த வகையில் சென்னை போன்ற நகரங்களில் இருப்பவர்களை விட மொஃப்பஸல் பகுதிகளில் ஏமாற்றுபவர்கள் அதிகம். குறிப்பாக, சிறிய மற்றும் புதிய கடைகளில் நகை வாங்கும் போது மிகவும் கவனமாக இருக்க வேண்டும்" என்கிறார் இவர்.

'கவனமாக' என்றால் என்ன?


நாம் வாங்கும் தங்கம் சுத்தமானதுதானா, 22 கேரட்தானா என்று கண்டறிய உருக்கிப் பார்ப்பதைத் தவிர வேறு வழியில்லை. சுரண்டிப் பார்த்தும் (உரசுதல்) கண்டுபிடிப்பதுண்டு. ஆனால் இந்த முறைகளினால் நகையின் தரம் புலப்படுமே தவிர நகையின் சேதாரம் தவிர்க்க இயலாத விஷயமாயிருக்கும்.

நகை வியாபாரிகளுக்கு இதுவே ஒரு சாதகமான விஷயமாக இருந்து வந்தது; இனி அப்படி முடியாது! 'டைடன்' நிறுவனம், 'கேரட் மீட்டர்' என்கிற நகையின் தரத்தைத் துல்லியமாகக் கணித்துச் சொல்லும் கருவியைக் கொண்டு வந்திருக்கிறது.


"இப்படியொரு கருவியை டைடன் கொண்டு வருகிறது என்றால் நான் அதை வரவேற்கிறேன். தங்கத்தின் தரத்தை மதிப்பிட இது வரை கையாளப்பட்டு வந்த முறைகள் யாவும் மிகத் துல்லியமானவை என்று சொல்ல முடியாது. இந்த கேரட் மீட்டர் அத்



• இந்தர் ஜெயின்



• சையது அகமது



• ராஜேந்திரன்

தனை துல்லியமாகத் தரம் கண்டுபிடிக்கக் கூடியது எனில் அதை இங்கே நிறுவுவதை யாரும் ஆட்சேபிக்க முடியாது. எங்கள் கடையில் விற்கப்படும் நகைகள் யாவும் சுத்தமான 22 கேரட் நகைகள்தாம் என்று என்னால் உறுதியாகச் சொல்ல இயலுமாகையால் இதை இங்கே வாடிக்கையாளர் வசதிக்காக நிறுவுவதில் சந்தோஷமே அடைவேன்'' என்கிறார் ஜி.ஆர். தங்க மாளிகையின் அதிபர் இராஜேந்திரன்.

பத்து லட்சம் ரூபாய் மதிப்புள்ள இந்த கேரட் மீட்டர் என்னும் கருவியை முன்னதாக பெங்களூர், கல்கத்தா, இந்தூர், அகமதாபாத் நகரங்களில் உள்ள தன் 'தனிஷ்க்' (நகைப் பிரிவு) ஷோ ரூம்களில் அறிமுகப்படுத்தி வெற்றி கண்டிருக்கிறது டைடன். இம்மாதம் இது சென்னைக்கு வருகிறது.

தரத்தைக் கண்டுபிடிக்க....

தங்கத்தின் தரத்தைக் (எத்தனை கேரட் என்று) கண்டுபிடிக்க நம் நாட்டில் பல நூறு வருடங்களாக இருந்து வரும் முறை - 'பொடி போட்டுப் பார்த்தல்'.

பொடி என்பது தங்கம், வெள்ளி, செம்பு ஆகிய உலோகங்களின் கலவை. ஒரு நகை 22 கேரட் தங்கத்தால் ஆனதா என்று தெரிய வேண்டுமானால், அந்த நகையின் மேல் - (ஒரு கிராம் தங்கத்துக்கு ¼ கிராம் வெள்ளி, ¼ கிராம் தங்கம், ¼ கிராம் செம்பு) பொடி வைத்து உருக்குவார்கள்.

இப்படி உருக்கப்பட்ட தங்கத்தின் மீது நைட்ரிக் அமிலம் மற்றும் கந்தக அமிலம் சேர்த்தால் அதிலுள்ள வெள்ளியும் செம்பும் ஆவியாகி விடும். மிச்சமிருப்பதுதான் சொக்கத் தங்கம்! பிறகு இந்த சுத்தத் தங்கத்தை எடைபோட்டு, சதவீத அடிப்படையில் அது எத்தனை 'கேரட்' என்று கண்டுபிடிப்பார்கள்.

இந்த 'பொடி வைத்துப் பார்க்கும் முறை' கூட அத்தனை துல்லியமானதல்ல என்று தெரியவந்த பிறகு 'Cadmium' என்கிற உலோகத்தை, வெள்ளி, செம்பு, தங்கக் கலவைப் பொடிக்குப் பதிலாக உபயோகிக்க ஆரம்பித்தார்கள். இந்த உலோகம், பொடியை விட ஓரளவு கூடுதலாகத் 'துல்லியம்' காட்டுவதாகச் சொல்கிறார்கள், நகைத் தொழிலாளர்கள்.

எப்படி இயங்குகிறது இந்த கேரட் மீட்டர்?

எந்த ஒரு தங்க நகையானாலும் அதை இந்த கேரட் மீட்டரில் வைத்து மூன்று நிமிடங்கள் எக்ஸ்ரே கதிர் பாயச் செய்தால், எதிரேயுள்ள கம்ப்யூட்டர் திரையில், குறிப்பிட்ட நகையில் எத்தனை சதவீதம் தங்கம் உள்ளது? வெள்ளி, செம்பு போன்ற உலோகங்கள் எத்தனை சதம் கலந்துள்ளன? என்கிற புள்ளி விவரத்தைக் காட்டி விடுவதோடு, நகையிலுள்ள தங்கம் எத்தனை கேரட் என்பதையும் சொல்லிவிடும்!

இதில் விசேஷம் என்னவென்றால், இந்த முறையில் தங்கத்தைப் பரிசோதிப்பதில் இம்மியளவு சேதாரம் கூடக் கிடையாது!

சில மேற்கத்திய நாடுகளில் மட்டுமே புழக்கத்திலிருக்கிற இக்கருவி இப்போது சென்னைக்கு வருவதில் பல நகைக் கடை அதிபர்கள் ஆட்டம் கண்டிருக்கிறார்கள்.

''எல்லா நகைக் கடைகளிலும் இந்தக் கருவி கட்டாயம் வைக்கப்பட வேண்டும் என்று சட்டமாகி விட்டால் பலர் இந்தத் தொழிலையே மூடிவிட்டுப் போய் விடுவார்கள்'' என்றார் ஒரு பிரபல நகைக்கடை அதிபர்.

''இந்த இயந்திரத்தை நான் லண்டனில் பார்த்திருக்கிறேன். இதே மாதிரி தங்கத்தைப் பரிசோதிக்கும் வேறு சில கருவிகளும் அங்கே இருக்கின்றன. தண்ணீரில் நகையைப் போட்டு, அடர்த்தியைக் கணித்து, அதன் மூலம் தரம் பார்க்கும் கருவி ஒன்று உண்டு. இன்றுவரை நாம் தரப் பரிசோதனை செய்ய காட்மியம் என்கிற ஓர் உலோகத்தைத்தான் (பொடி போட்டுப் பார்க்கிற முறைக்கு பதிலாகப்) பயன்படுத்துகிறோம். (காண்க - பெட்டிச் செய்தி) அதற்கு மாற்றாக வந்துள்ள இந்த கேரட் மீட்டர் மிக வசதியாகவே இருக்கும் என்று நம்புகிறேன். முக்கியமாக, வாடிக்கையாளர்களிடமிருந்து, பழைய நகைகளை வாங்கும் போது அதைப் பரிசோதிக்க இது மிகவும் சுலபமான வழியாக இருக்கும்'' என்றார் எல்.கே.எஸ். நகைக்கடை உரிமையாளர் சையது அகமது.

ஆனால், இந்த கேரட் மீட்டரின் துல்லியத்தின் மீதே சந்தேகம் இருக்கிறது என்றும் சொல்கிறார்கள் வேறு சில

விலை ஏற்ற இறக்கங்களை எப்படிச் சமாளிக்கிறார்கள்?



தங்கம் என்பது காய்கறி மாதிரி அல்ல தினசரி வாங்க! நம் தங்க நகை வியாபாரிகள் எல்லோருமே மும்பையிலிருந்து மொத்தமாகத்தான் (கிலோ கணக்கில்) வாங்கி வந்து உருக்கி, வேண்டிய டிசைனில் நகைகள் செய்து விற்கிறார்கள்.

தங்கத்தின் விலை என்பது நாளுக்கு நாள் மாறும் தன்மை கொண்டது. இன்றைக்கு ஒரு கிராம் தங்கம் ரூ 450 என்றால் நாளையே அது 470 அல்லது 480 என்று உயரலாம். அல்லது வெறும் 410 அல்லது 420க்குக் குறைந்தும் விடலாம்.

ஒரு தங்க நகை வியாபாரி (உதாரணத்துக்கு) ஒரு கிராம் 450 என பத்து கிலோ தங்கம் வாங்குகிறார் என்று வைத்துக் கொள்வோம். மறுநாள் மார்க்கெட் ரேட் என்னவோ அதன்படிதான் அவர் விற்றாக வேண்டும். தாம் அதிக விலைக்கு வாங்கியதால், அதே விலைக்குத்தான் விற்பேன் என்று 'அடம்'பிடிக்க முடியாது!

இந்த வகையில் ஏற்படக்கூடிய நஷ்டத்தை எப்படிச் சமாளிக்கிறார்கள்?

நகை உலகில் இதற்கு இரண்டு விளக்கங்கள் தரப்படுகின்றன.

மிக அதிகமாக வியாபாரம் நடக்கிற கடைகளில், அன்று அன்றைக்கு எத்தனை கிலோ தங்கம் விற்கிறதோ அதே அளவு தங்கத்தை அன்றைய மார்க்கெட் ரேட் அடிப்படையில் – அன்றே மும்பையிலிருந்து தம் ஏஜெண்ட் மூலம் வாங்கி விடுகிறார்கள்.

ஆக, விலை அதிகமானாலும் குறைந்தாலும் இழப்பு என்பது இருக்காது. ஒருநாளைக்கு ஐந்து கிலோ தங்கம் வாங்கினால், ஐந்து கிலோ தங்கம் அன்று விற்றுவிடும் என்று உறுதியாகச் சொல்ல முடிபவர்களுக்குத்தான் இந்த விதி பொருந்தும்.

ஜி.ஆர்.டி., எல்.கே.எஸ்., லலிதா போன்ற நகை மாளிகைகளில் இந்த முறைதான் பின்பற்றப்படுவதாகச் சொன்னார்கள்.

ஆனால் சிறு வியாபாரிகளின் அதிகம் பிரபலமாகாத கடைகளின் நிலை சற்றுக் கஷ்டம்தான். இவர்கள் கையாளும் முறை சற்று 'நிழலானது'.

அது என்ன 'நிழலான' முறை?

சுத்தமான தங்கம் என்பது 24 கேரட். ஆனால் 24 கேரட் தங்கத்தில் நகை செய்ய முடியாது. 22 கேரட் (அதாவது 91.6 சதவீத தங்கம் கொண்டது) தங்கத்தில் 8.4 சதவீதம் வெள்ளி மற்றும் செம்பு கலந்து நகை செய்வார்கள்.

இப்படிக் கலக்கும் போது 91.6 சதவீத தங்கம் என்பதற்குப் பதிலாக 91.4, 91.2, 91, 90.8 என தங்கத்தின் சதவீதத்தைத் 'தேவைக்கேற்ப' குறைத்துக் கொண்டு வெள்ளி, செம்பு சதவீதத்தை ஏற்றி விடுவார்கள்.

இதனால் 'சேமிக்க'ப்படும் தங்கத்தின் மூலம் தினசரி தங்க மார்க்கெட் விலை ஏற்றத்தாழ்வுகளைச் சமாளித்து விடுவார்கள்!

அதிக லாபத்துக்கு ஆசைப்படும் பல பிரபல, பெரிய நிறுவனங்கள் கூட இக்காரியத்தில் இறங்குவது வழக்கமாகி விட்டதால்தான் 'கேரட் மீட்டர்' வருவதைக் கண்டு பலர் அஞ்சுகிறார்கள்.

நகைக்கடை அதிபர்கள்.

"நமது நகைகளெல்லாம் 'கன்வென்ஷனல்' பாணியில் – அதாவது இயந்திர சம்பந்தமில்லாமல் கைத்தொழிலாகச் செய்யப்படுபவை. ஒவ்வொரு நகையிலும் பல இணைப்புகள் (ஜாயிண்ட்ஸ்) இருக்கும். கேரட் மீட்டரில் இப்படிப்பட்ட ஜாயிண்ட்கள் உள்ள நகையை வைத்தால் அதனால் துல்லியமாகத் தரம் கணிக்க இயலாது. கோயமுத்தூரில் இந்தக் கருவியை 'டைடன்' அறிமுகப்படுத்த, அது பெரிய தோல்வியைச் சந்திக்க வேண்டியதாகி விட்டது. அந்தக் கருவியின் கணிப்பில் துல்லியமே (accuracy) இல்லை!" என்றார் தனலட்சுமி ஜுவல்லர்

ஸின் அதிபர் இந்தர் ஜெயின்.

இதுகுறித்து டைடன் நிர்வாகத்தின் நகைப் பிரிவு (தனிஷ்க் ஷோரூம்) பொறுப்பாளர்களிடம் விசாரித்தபோது இக்குற்றச்சாட்டை அவர்கள் கடுமையாக மறுக்கிறார்கள்.

"கேரட் மீட்டரில் எக்ஸ்ரே கதிர் படும் இடத்தில் எந்த மாதிரியான நகையையும் வைக்கலாம். ரவுண்ட் பீஸோ, ஜாயிண்ட்டுகள் உள்ள நகையோ, அல்லது தட்டையான நகையோ – எதுவானாலும் சரி. மூன்று நிமிடங்கள் அந்த நகையின் மேல் கதிர் செலுத்தப்படுமானால், நகையில் எத்தனை கேரட் தங்கம் உள்ளது என்பது துல்லியமாகத் தெரிந்துவிடும். நாங்கள் பரீட்சார்த்தமாக இதை அறிமுகப்படுத்திய எல்லா இடங்களிலுமே வெற்றிதான்! கோவையில் நாங்கள் இதை அறிமுகப்படுத்தியதாகவும் தோல்வியடைந்து விட்டதாகவும் சொல்வது தவறு. காரணம், கோவையில் எங்களுடைய நகைப் பிரிவுக்கான ஷோ ரூமே கிடையாது!'' என்றார்கள்.

டைடன் இப்படியொரு கருவியை இப்போது இங்கே கொண்டு வர முயற்சிப்பது பற்றிப் பலருக்கு மிகவும் 'வருத்தம்'. 'தங்க மோகம்' என்பது நம் நாட்டின் ஆதார குணங்களில் ஒன்று. உலக தங்க நகை வியாபாரத்தைக் கணக்கெடுத்துப் பார்த்தால், மொத்தத்தில் 20 சதவீத வியாபாரம் (சுமார் இருபத்தையாயிரம் கோடியிலிருந்து முப்பத்திரண்டாயிரம் கோடி வரை!) இந்தியாவில்தான் நடக்கிறது என்று கண்டு பிடித்திருக்கிறார்கள்.

மக்கள் ஏராளமான பணத்தைத் தங்கத்தில் முதலீடு செய்யும்போது, அது நம்பகமான முதலீடு அல்ல என்று தெரியவந்தால் அதிர்ச்சியும் ஏமாற்றமும்தானே மிச்சம்?

இனி அத்தகைய ஏமாற்றத்துக்கு வழியில்லாமல் டைடன் அறிமுகப்படுத்தும் கேரட் மீட்டரில், தாம் வாங்கும் நகைகளை வைத்து அதன் தரத்தை அறிந்து கொள்ளலாம்!

22 கேரட் என்று சொல்லி விற்கப்பட்ட நகையில் 22 கேரட்டுக்குக் குறைவான தங்கம் இருக்குமானால் சம்பந்தப்பட்ட நகைக் கடையின் மீது வழக்குத் தொடுக்கலாம்!

''மக்களுக்கு இதனை நன்கு அறிமுகப்படுத்தும்விதமாக, நவம்பர் இரண்டாம் வாரத்தில் சென்னைக்குக் கொண்டு வரப்படும் இந்த கேரட் மீட்டரைக் கொஞ்ச நாள் இலவசமாக உபயோகித்துக் கொள்ள வழி செய்யவிருக்கிறோம். கதீட்ரல் சாலையிலுள்ள டைட்டனின் 'தனிஷ்க்' ஷோரூமில் இந்தக் கருவி மக்களுக்காகக் காத்திருக்கும். யார் வேண்டுமானாலும் வந்து தம் நகைகளை இதில் பரிசோதித்துக் கொள்ளலாம்'' என்றனர் டைடன் அதிகாரிகள்.

— ஔரங்கசீப்

அட்டை வண்ணப்படம், படங்கள் : **ஸ்ரீஹரி**

அட்டையில் மாடலாக : **மதுரம்**

"இந்தாப்பா 301, காலையிலே அந்த கிழவியிடம் என்ன தகராறு?"

"பஸ் ஸ்டாண்டில் இவளை ஈவ் டீஸிங் பண்றாராம் ஒரு கிழவர்!"





''என்ன சார், காலையில் வாசலில் 'தபால்'னு சத்தம் கேட்டதே, யாராவது விழுந்துட்டாங்களா?''

''ஆமாம். 'தபால்'காரர்தான்!''

– டி. பூவராகன்



• ரேவதி சங்கரனின் ஹரிகதை!

'சுருதி'-'15

"இரண்டு இஷ்யூக்கு மேல, சங்கீதத்தைப் பத்தி எழுத என்ன இருக்கு?" என்று '83ல் 'சுருதி' மாத இதழ் தொடக்க விழாவில் செம்மங்குடி சீனிவாசய்யர் சொன்னார்.

அவரைப் பற்றியே இரண்டு ஸ்பெஷல் இஷ்யூக்கள் வெளியிட்டு அவரிடமே பாராட்டையும் பெற்ற 'சுருதி', 15 வருடங்களைக் கடந்து, 16ஆம் ஆண்டில் அடி எடுத்து வைத்ததற்கு, போன வாரம் அகடமி மினி அரங்கில் ஒரு விழா நடந்தது.

"சுருதியில் எல்லாம் நன்றாக இருக்கிறது. வெளிநாடுகளில் நல்ல மதிப்பு இருக்கிறது... இந்த 'விஸ்பரிங் காலரி' மட்டும் வேண்டாமே?" என்றார் தலைமை வகித்த டி.டி. வாசு. ("ஆனால், அந்தப் பகுதிக்குத்தான் நல்ல வரவேற்பு. கிடைத்த 'கிசுகிசு'வை ஒரு தடவைக்கு நாலு தடவை கிராஸ் செக் செய்த பிறகே வெளியிடுகிறோம்!" என்றார் 'சுருதி' பட்டாபிராமன்.)

விழாவின் ஹைலைட் ரேவதி சங்கரனின் ஹரிகதைதான் – சாரி 'சுருதி' கதைதான். 'சுருதி' பிறந்து வளர்ந்த கதையை ஹரிகதைப் பாணியில் (ஹரிகதை டிரஸ் அணிந்து வந்து) தமிழிலும் இங்கிலீஷிலுமாகச் சிரிக்கச் சிரிக்கச் சொன்னார் ரேவதி. நல்ல குரல் வளம். பட்டம்மாள், எம்.எஸ்., எம்.எல்.வி., வசந்த கோகிலம், மதுரை மணி என்று எல்லாரையும் மிமிக்ரி பண்ணின போது அரங்கமே அதிர்ந்தது. (ஒரு இந்துஸ்தானி பிட் கூட த்சொ த்சொ சொல்ல வைத்தது!)

"நான் டான்ஸ் ஆடவே லாயக்கில்லை. மேடையைக் காலி செய்வதுதான் நல்லது என்று ஆரம்பத்தில் 'சுருதி' எழுதியது. அதே 'சுருதி' இந்த இதழில் என் கவர் ஸ்டோரியை வெளியிட்டிருக்கிறது. 'சுருதி'க்குப் பாரபட்சமில்லாத பார்வை இருக்கிறது என்று இதிலிருந்தே தெரியும்!" என்றார் சுதாராணி ரகுபதி.

'சுருதி'யின் வருங்காலத் திட்டங்களுக்காக, நடனக் கலைஞர் தனஞ்சயன் பத்தாயிரம் ரூபாய் நன்கொடை அறிவித்தார். அது அவருக்கே ஆபத்தாக முடிந்தது.

"நான் தனஞ்சயன் ஸ்கூல் பற்றி ஒரு ஸ்பெஷல் கட்டுரை விரிவாக எழுதுவதாக இருந்தேன். தனஞ்சயன் டொனேஷன் அறிவித்து விட்டதால், அதை ட்ராப் பண்ணி விட்டேன்!" என்றார் 'சுருதி' பட்டாபிராமன்!

"சுருதி'யின் ஆதார சுருதிகளாக ஆரம்பத்திலிருந்து இருந்து வரும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு மாலை போட்டு மரியாதை செய்தார்கள். நல்லி குப்புசாமி செட்டி யாருக்கும்தான். (எந்த சங்கீத - நடன விழாவில் கலந்து கொண்டு பேச ஒப்புக் கொண்டாலும், காலையிலேயே 'சுருதி'க்கு போன் செய்து குறிப்பிட்ட கலைஞர் பற்றிய தகவல்கள், செய்திகள் எந்த இதழில் வெளியாகி இருக்கிறது என்று கேட்டுத் தெரிந்து கொள்வாராம். தமது லைப்ரரியிலிருந்து அந்த இதழை எடுத்து வைத்துக் கொண்டு குறிப்புகள் தயாரித்துக் கொண்டு விடுவாராம் நல்லி!)

இன்றைய பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல், பஞ்சாப் போராட்டத்தின் போது சிறையில் இருந்தார். சிறையில் அவர் விரும்பித் தருவித்துப் படித்த பத்திரிகை – 'சுருதி'!

— சாருகேசி



15

"சொந்தக் குழந்தைக்கு அம்மாவாக இருந்தால் மட்டும் போதாது!"

"நீங்கள் அம்மாவாயிருந்தால் என்ன செய்வீர்கள் – எப்படிக் குழந்தைகளை வளர்ப்பீர்கள்?" என்று திருச்சி தேசியக் கல்லூரி மாணவ – மாணவியரிடம் கேட்டோம்....

1. ஏ. ஜோதி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : குழந்தைகளுக்குச் சுதந்தரம் கொடுப்பேன். அவங்க கேட்கறத நிறைவேத்தற அம்மாவா இருக்கணும். கண்டிக்கறதால அவங்க மனசுதான் வெறுப்பாகும். பரீட்சையில ஃபெயிலாயிட்டா கூட 'அடுத்த முறை பாஸ் பண்ணிடணும்னு' சொல்லி தட்டிக் கொடுப்பேன்.

2. எஸ். ஜெயந்தி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : குழந்தைகளை நல்ல பாதைகளில் போகும்படி பராமரிப்பேன். பொருளாதார ரீதியா நான் வசதி இல்லாதவளா இருந்தாலும் என் குழந்தைகள் அவர்கள் விருப்பப்படி நல்ல துறைகளில் ஈடுபட்டு முன்னேறுவதற்காக எந்தக் கஷ்டத்தையும் தாங்கிக் கொள்வேன்.

3. வி. வசந்தா (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : அம்மான்னு சொல்லும் போதே எனக்கு குழந்தைகளை வளர்ப்பதைச் சுமைன்னு நினைக்காம சுகம்னு நினைக்கிற அம்மாவா இருப்பேன்.

4. பி. குழந்தை தெரசா (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : முதல்ல அம்மா ஆவதற்கு முன் நம்ம குடும்பத்தோட நிலை என்னன்னு தெரிஞ்சுக்கணும். ஒண்ணு... கூட்டுக் குடும்பமா இருந்தா பெரியவங்களோட, ஆசை என்ன, எதிர்பார்ப்பு என்னங்கறத பார்க்கணும். அவங்க விருப்பப்படியும் குழந்தைங்க கிட்ட நடந்துப்பேன். குழந்தைகளோட விருப்பமும் முக்கியம். எனவே, என் விருப்பு, வெறுப்புகளுக்கு இடம் தராமல் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு நடப்பேன்.

5. எம். முத்துலட்சுமி (எம்.ஏ. ஆங்கிலம், இரண்டாம் ஆண்டு) : அறிவாளியா ஒரு குழந்தையை உருவாக்குவதைவிட எல்லாவிதத்திலும் ஒழுக்கமான நல்ல குழந்தையை உருவாக்குவதுதான் முக்கியம். அதுதான் என் லட்சியமாக இருக்கும்.

6. எஸ். மைதிலி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : அன்பை மட்டும்தான் காட்டுவேன். அன்பால எதையும் சாதிக்க முடியும்னு என் குழந்தைகள் மூலம் மத்தவங்களுக்கு நிரூபிப்பேன்.

7. ஏ. உமாராணி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : கண்டிக்காம இருந்தா குழந்தைங்க மட்டுமல்ல நாமே கூட உருப்பட மாட்டோம்னு நினைக்கிறேன். ஜாலியா இருக்க வேண்டியதுதான். அதே சமயம் எப்ப வேணும்னாலும் துன்பம் துரத்திக்கிட்டு வரும், ஜாக்கிரதையா இருன்னு மனசை பக்குவப்படுத்தி வைப்பேன்.

8. எஸ். ரேவதி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : குழந்தைகளோட ஆசை முக்கியம். என் விருப்பத்தைத் திணிக்க மாட்டேன். குழந்தைகளுக்கு ரொம்ப ரொம்பப் பிடிச்ச அம்மாவாக இருப்பேன்.

9. ஜெ. சாந்தி (எம்.ஏ. தமிழ் இலக்கியம்) : நல் வினை, தீய வினை இரண்டையும் சின்ன வயசுல எடுத்துச் சொல்லணும். குழந்தைங்க என்னவா வரணும் கிறத முதல்லே தீர்மானிச்சு, அவங்க மனசுல அதைப் பதிய வைத்து அப்படியே ஆக்கிக் காட்டுவேன்.

10. எம். வீரக்குமார் (பி.எஸ்ஸி, விலங்கியல், இரண்டாம் ஆண்டு) : ஒரு பில்டிங் நல்லபடியா மேலே உசந்து உறுதியா நிக்கணும்னா அடித்தளம் முக்கியம். அம்மாவும் அப்படித்தான். நல்ல வழிகாட்டியா இருப்பேன்.

11. சி. இளையராஜா (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : 'அம்மா என்றால் அன்பு'ன்னு பாட்டே இருக்குது. அம்மான்னா அன்பா மட்டுமே இருக்கணும். தீய வழியில போகாதேன்னு சொல்லாமல்; இதுதான் நல்ல வழின்னு சொல்ற அம்மாவா இருப்பேன்.


12. எம். காளிமுத்து (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : அம்மாவா இருக்கறது என்பது கம்பி மேல நடக்கற வித்தை. கொஞ்சம் தவறினால் போச்சு. தவறாம பார்த்துக்குவேன்.

13. ஏ. நடராஜன் (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : 'தாயிற் சிறந்த கோயிலும் இல்லை'ங்கிறதுக்கு உதாரணமாக இருப்பேன்! எந்தக் காரணம் கொண்டும் பயமறியாத குழந்தைகளாக



1



9


2


10


8



3


14


11


7


4


13


12


6


5



16

வளர்ப்பேன்.

14. ஆர். மோகன் (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : ராஜா - ராணி, கணவன் - மனைவி, ஆண் - பெண், மாணவர் - மாணவியர், சகோதர - சகோதரியர் – இப்படித்தான் சார் வார்த்தை பிரயோகத்தில் கூட பெண்ணை ஆண் ஆதிக்கம் செலுத்தறான். நல்ல அம்மாவா இருந்து, குந்தைகள் கிட்ட இந்த பேதத்தை ஒழிப்பேன். ஜாதி, மத உணர்வுகள் இல்லாம வளர்ப்பேன்.

15. எஸ். நல்லதம்பி (பி. எஸ்ஸி வேதியல், இறுதியாண்டு) : சயின்ஸ்படி பார்த்தா வயித்துல இருக்கற குழந்தை வெளியே பேசறத கிரகிக்குது. அம்மாங்கிறவ அப்போதிலிருந்தே நல்லதையே நினைக்கணும். அம்மாவாகும் முன்பே என் எண்ணம் எல்லாம் குழந்தையின் நலத்தைப் பற்றியதாகவே இருக்கும். இன்றைய போட்டி நிறைந்த உலகில் என் வாரிசு தனியாகத் தெரிய என்ன செய்யணுமோ அதைச் செய்வேன்.

16. கே.பி. முருகேசன் (பி.ஏ. ஆங்கிலம், முதல் ஆண்டு) : அன்பை மட்டுமல்ல, பண்புகளையும் இயல்பா கத்துத் தருவேன்.

17. எம். பழனியாண்டி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : என் குழந்தைகளுக்கு மட்டும் அம்மாவா இருந்தா போதாது. இன்னொரு அம்மாவால் அன்போடும் பாசத்தோடும் வளர்க்கப்பட்டு என் வீட்டிற்கு வரும் மருமகளுக்கும் அம்மாவா இருப்பேன். இப்படி எல்லாரும் இருந்துட்டா மாமியார் மருமகள் கொடுமையெல்லாம் நடக்காது.

18. பி. மந்திரி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே... அவை நல்லவர் ஆவதும், தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே'ன்னு புரட்சித் தலைவர் படத்தில் ஒரு பாட்டு வருது. அகங்காரம், அலங்காரம், படாடோபம்... இவற்றைக் கற்றுத் தராத தன்னம்பிக்கை ஊட்டக்கூடிய தாயா இருப்பேன்.

19. எம். சின்னத்துரை (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : அம்மா'ன்னு என் குழந்தை என்னைக் கூப்பிடறதை விட முக்கியமா, 'இந்தியாதான் என் தாய்'ன்னு தன் மழலையில பேசறதைத்தான் நான் விரும்பறேன். அப்துல் கலாம் போல இந்தியாவிற்கு ஏதாவது ஒரு விதத்தில் பயன் படுகிற மாதிரி குழந்தைகளை உருவாக்குவேன்.

20. ஏ. மன்சூர் (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : ஜாதி, மதம் என்கிற குறுகிய வட்டத்துக்குள்ளேயே சிக்கித் திணறும்படியா குழந்தைகளை வளர்க்க மாட்டேன். இந்த உலகமே உன்னோடதுதான்னு சொல்லிப் பரந்த மனசுடைய சந்ததிகளாய் வளர்ப்பேன்.

21. எம். மோகன் (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : குழந்தைகள் கிட்ட என் கஷ்டங்களைச் சொல்லி புலம்ப மாட்டேன். அவை, குழந்தைகளின் வருங்காலத்தை பாதிக்கும். அவங்க போக்குலயே போய் விட்டுப் பிடிப்பேன்.

22. டி. விஜயபாரத் (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : கல்விக் கண்ணை பிள்ளைகளிடத்தில் திறக்க வைப்பது அவசியம். பள்ளிக் கல்வி மட்டுமல்ல; உலக நடப்பையும் தெரிய வைக்கணும். வேலைக்குப் போற அம்மாவாக நானிருந்தாலும் வேலையே கதின்னு இருக்க மாட்டேன்.

23. எம். தமிழ்வாணன் (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : அம்மா'ன்னாலே இப்பல்லாம் அது ஜெயலலிதாவைத்தான் குறிக்குது. நான் அந்த அம்மாவாக இருந்தால் கட்சியில் இருக்கும் ஊழலை முதலில் ஒழிப்பேன். அரசியல் என்றால் சாக்கடை அல்ல; அது நன்னீர் ஓடும் ஓடை என்று சொல்ல வைப்பேன். ஊழலுக்குச் சாவு மணி அடிப்பேன். முதல்ல என் ஆடம்பரத்தை ஒழிப்பேன்.

24. பி. முருகானந்தம் (எம்.ஏ., தத்துவம், முதல் ஆண்டு) : ஒவ்வொரு தாயும் ஒவ்வொரு விதம். நகரத்துத் தாயை விட கிராமத்துத் தாயால் வளர்க்கப்படும் குந்தைகள்தான் சுயக் கட்டுப்பாடு மிக்கவர்களாக இருப்பது போல் எனக்குப்படுது. நான் எப்படி இருப்பேன்னு தெரிஞ்சுக்கணும்னா... நான் பெண்ணா மாறினதும் சொல்றேன்.

25. சி. சக்தி சரவணன் (பி.எஸ்ஸி, நிலத் தியல்) : இப்போதைய உலகில் மனித நேயம்னா என்ன, தமிழ்ப் பண்பாடுன்னா

என்னனு கேட்கற நிலை வந்து டுச்சு. அடுத்தவருக்கு உதவும் மனித நேயம் கொண்ட குழந்தையா வளர்ப்பேன்!

26. டி. தாமரைக் கண்ணன் (எம். ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : அம்மாவா மட்டுமில்லாம ஒரு நண்பனாகவும் இருப்பேன். 'கடைக்குப் போயிட்டு வந்தா சாக்லேட் தருவேன், நல்லா படிச்சு முடிச்சா ட்ரெஸ் வாங்கித் தருவேன்'ன்னு குழந்தைகளிடம் சொல்லி, சின்ன வயசுலயே லஞ்சம் வாங்கற புத்தியை வளர்க்க மாட்டேன்!

27. ஏ. கணேஷ் (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : குழந்தைகளும் என்கிட்டே அன்பா இருக்கணும்னு எதிர்பார்ப்பேன்.

28. பி. ரவிச்சந்திரன் (எம்.ஏ. தமிழ், இரண்டாம் ஆண்டு) : கோபப்படும் அம்மாவாக நானிருக்க மாட்டேன்னாலும், குழந்தைகளின் எதிர்காலத்தை மட்டும் நான்தான் தீர்மானிப்பேன். நல்ல தமிழ் அறிவைத் தரும் தாயா இருப்பேன்.

29. டி. சந்திரசேகரன் (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : குழந்தைங்க மனசுல ஜாதி, மத பேதங்களை வளர்க்க என்னென்ன வழிகள் இருக்கோ... அந்த வழிகளை ஃபாலோ பண்ணாத அம்மாவா இருந்து, நல்லதை மட்டுமே ஊட்டி வளர்ப்பேன்.

30. எம். ரவி (எம்.ஏ. தமிழ், முதல் ஆண்டு) : என் குழந்தைகளுக்கு மட்டுமல்லாது... என் கிராமத்தில் உள்ள குழந்தைகளுக்குப் அம்மாவா இருக்க ஆசைப்படறேன். அனாதைக் குழந்தைகளையும் அரவணைக்கும் தாயாக இருப்பேன். ⊙

படங்கள், பேட்டி : **ஞானசேகர்**



30



25



29


21



24



28



18


20



23


27


17


19


22


26

த.மா.கா.வுக்குப் பிடித்த த.ப.க!

நீங்கள் தி.மு.க.வா? இல்லை! அ.தி.மு.க.வா? இல்லை! காங்கிரஸா? இல்லை! பா.ஜ.க.வா? இல்லை! த.மா.கா.வா? இல்லை!

பின்னே?

த.ப.க!

அப்படியென்றால்?

தஞ்சாவூர் பட்சணக் கடை!

– இப்படி மூணு வருஷங்களுக்கு முன்பு வித்தியாசமாய் பிட் நோட்டீஸ் அடித்து விநியோகித்து, தமது புதிய பட்சணக் கடையைத் துவக்கினார் தஞ்சாவூர்க் காரரான சுப்ரமணியன்.

பத்துப்பேர் உட்காரும் சின்ன இடம் என்றாலும், சுவரில் சுமார் முப்பது பிர பலங்கள் உட்கார்ந்திருக்கிறார்கள்! பட்சணக் கடையின் சுவர் முழுக்க, காந்தி, நேருவில் தொடங்கி, வாசன், கல்கி, நா. பார்த்தசாரதி என்று இலக்கிய கர்த்தாக்களும், சிவாஜி, எம்ஜிஆர், எம்.கே. தியாகராஜ பாகவதர் என்று சினிமா ஸ்டார்களும் பிரேம் போட்ட படங் களில் இருக்கிறார்கள். ஆமாம். சுப்ரமணியன் ஆழமான தமிழ் வாசகர்; தேச பக்தர்.

திருவல்லிக்கேணியிலுள்ள இந்த தஞ்சாவூர் பட்சணக் கடையின் வாடிக்கையாளர்களில் மூப்பனார், எஸ்.ஆர். பாலசுப்ரமணியம், உட்பட பல தமாகா. பிரமுகர்களும் நக்கீரன் கோபாலும் அடங்குவர். தமாகாவில் ஏதாவது விசேஷ கூட்டம் என்றால் இங்கிருந்துதான் பட்சணங்கள் செல்லுகின்றன.

ஆரம்பத்தில் ஜெமினி கேண்டீனில் பணியாற்றியவர் சுப்ரமணியன். அப்போது ஏற்பட்ட அனுபவங்களைச் சொல்வதில் ஒரு சுவாரஸ்யம் இவருக்கு!

●● ஜெமினி கேண்டீன் சாப்பாடு என் றால், கே.பி.சுந்தராம்பாளுக்கு ரொம்பப் பிடிக்கும். ஒரு நாள் மாலை ஆறு மணி யுடன் ஷூட்டிங் முடிந்து அவர் வீட்டுக்குப் போனபின், ஒருவரை கேரியருடன் கேண் டீனுக்கு அனுப்பி இரண்டு சாப்பாடு வாங் கிக் கொண்டு வரச் சொன்னார். கேண்டீன் பொறுப்பாளர், 'ஆபீசிலிருந்து சீட்டு வாங்கிக் கொண்டு வந்தால்தான் சாப்பாடு தரமுடியும்' என்று சொல்லி விட்டார். ஆபீசுக்குப் போனால், 'ஷூட்டிங் முடிந்து விட்டது. எனவே சீட்டு தர இயலாது' என்று சொல்லிவிட்டார்கள். வந்தவர் வெறும் கையுடன் திரும்பிப் போக நேர்ந்தது.

இரண்டு மாதம் கழித்துத்தான் மறுபடி



• சுப்ரமணியன்

ஷூட்டிங். அப்போது வந்த கே.பி.எஸ். தாம் சாப்பாடு கேட்டு அனுப்பியதையும், கேண் டீனில் சாப்பாடு தர மறுத்ததையும் கதை இலாகாவிலிருந்த கொத்தமங்கலம் சுப்பு விடம் சொல்ல, அதிபர் வாசன் காதுக்கு விஷயம் எட்டிவிட்டது.

சம்பந்தப்பட்ட கேண்டீன், மற்றும்

புரொடக்ஷன் பொறுப்பாளர்களைக் கூப்பிட்டு, "இரண்டு சாப்பாடு என்பது, ஒண்ணரை ரூபாய் விஷயம் (அப்போது ஒரு சாப்பாடு விலை முக்கால் ரூபாய்) சாப்பாடு தர முடியாது என்று சொன்னதால் கே.பி.எஸ். கோபித்துக் கொண்டு விட்டால் முப்பது லட்சம் ரூபாய் போட்டு எடுக்கும் படம் என்ன ஆகும்? என் கணக்கில் எழுதிக் கொண்டு சாப்பாட்டை அனுப்பியிருக்க வேண்டியதுதானே!" (அப்போது வாசனுக்கென்று தனிக் கணக்கு கேண்டீனில் உண்டு. 'அய்யர் கணக்கு' என்று அதற்குப் பெயர்) என்று சத்தம் போட்டது மட்டுமின்றி, அவர்களின் கணக்கை செட்டில் செய்து, வீட்டுக்கு அனுப்ப உத்தரவிட்டு விட்டார்!

விஷயத்தைக் கேள்விப்பட்ட கே.பி.எஸ். பாதி மேக்அப்பில் இருந்தாலும், பரவாயில்லை என்று உடனடியாக வாசனைச் சந்தித்து, என் பொருட்டு, இரண்டு பேர் குடும்பம் பாதிப்புக்குள்ளாவதை நான் விரும்பவில்லை. தயவு செய்து அவர்களை வேலையை விட்டு எடுக்காதீர்கள் என்று கேட்டுக் கொண்டார். சம்பந்தப்பட்ட இருவரும், கே.பி.எஸ்.சிடம் மன்னிப்புக் கேட்க, பிரச்னை சுமுகமாக முடிவுக்கு வந்தது!

●● எஸ்.ஜி.கிட்டப்பா, மறைந்த பின்னரும், அவருடைய அண்ணா, சினிமாக்களில் சின்னஞ்சிறு வேடங்களில் நடித்துக் கொண்டிருந்தார். ஒரு நாள் ஷூட்டிங்கிற்கு சிவாஜி வந்திருந்தார். அவரிடம் ஆஜானுபாகுவாய் நின்றிருந்த மனிதர் ஒருவரைச் சுட்டிக்காட்டி, "கிட்டப்பாவின் அண்ணா!" என்றதும், சிவாஜி என்ன நினைத்தாரோ தெரியவில்லை. அவரைக்கிட்டே அழைத்து, நூறு ரூபாய் நோட்டு ஒன்றைக் கொடுத்து, "நல்லா இருங்க!" என்றார். கிட்டப்பாவின் அண்ணன் மட்டுமின்றி, அங்கிருந்த அனைவரது முகத்திலும் ஆச்சரியம்.

●● ஒரு தடவை எம்.ஜி.ஆருக்கு ஜெமினி ஹவுசில் விருந்து ஒன்று அளித்தார், அய்யர். ஜெமினி கேண்டீனின் தலைமை குக்தான், சமையல். உணவு பரிமாற என்னையும், இன்னொருவரையும் அனுப்பினார். அன்றைக்குத்தான், எம்.ஜி.ஆரை கிட்டத்தில் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. பலவித ஐட்டங்கள் பரிமாறினாலும், பைன் ஆப்பிள் ரசம் ஊற்றியபோது, எம்.ஜி.ஆர். கை நீட்டி ரசம் வாங்கிக் குடித்தார். அடுத்து, கரண்டியால், பைன் ஆப்பிள் துண்டுகளை மட்டும்



எடுத்து, அவர் கையில் போட்டேன். அதை வாயில் போட்டுக் கொண்டு என்னை லேசாய்த் தலையைத் தூக்கி, ஒரு பார்வை பார்த்தார். லேசாய் ஒரு புன்னகை. அந்தப் பார்வையும், புன்னகையும் எனக்கு ஆயுசுக்கும் மறக்காது.

●● எந்தப் படம் எடுத்தாலும், பத்துப் பன்னிரண்டு ரீல் ரெடியானதும், விகடன் ஊழியர்களுக்கென்று அதை ஸ்பெஷலாய்த் திரையிடுவார். ஒவ்வொருவரிடமும் ஒரு துண்டுச் சீட்டைக் கொடுத்து படம் பற்றின தங்கள் அபிப்ராயத்தை எழுதச் சொல்லுவார். அன்று இரவு அனைவருக்கும் ஸ்வீட்டுடன் சாப்பாடு.

●● சந்திரலேகா ஷூட்டிங்கின்போது, கிளைமாக்ஸ் டிரம்ஸ் நடனக் காட்சி எடுக்கப்பட்டதை மறக்கவே முடியாது. சென்னையிலிருந்து அத்தனை துணை நடிக, நடிகையரையும் ஏற்பாடு செய்து விட்டு தஞ்சாவூர், கும்பகோணம் என்று சுற்றி, நடனமாடத் தெரிந்தவர்களை அழைத்துக் கொண்டு வந்தார்கள். ஷூட்டிங்கிற்கு இரண்டு நாள் முன்னர், கணக்கிட்டுப் பார்த்தபோது நாலு பேர் இன்னமும் தேவைப்பட்டனர். கடைசியில் வேறு வழியில்லாமல், ஜெமினியில் வேலை பார்த்த நாலுபேரைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்குப் பெண் வேடமிட்டு, கடைசி வரிசையில் நிற்க வைத்துச் சமாளித்தார்கள். படம்

பார்க்கிறபோது அதைக் கண்டுபிடிக்கவே முடியாது.

●● ஜெமினியில் வேலை பார்க்கிறவர்களில் நல்ல பர்சனாலிடி, கொண்டவர்களைப் பட்டியல் எடுத்து வைத்திருப்பார்கள். படங்களில் ஓரிரு காட்சிகளில் தோன்ற ஆட்கள் தேவைப்பட்டால், அவர்களுக்கு வாய்ப்புத் தருவார்கள். அய்யரிடம் ஒரு நல்ல குணம். ஜெமினியிலேயே வேலை பார்த்தாலும் சினிமாவில் வாய்ப்புத் தந்தால், அதற்கென தனியே சம்பளம் தந்து விடுவார்.

●● ஒருநாள் திடீரென்று கேண்டீனுக்கு வந்த ஒரு இளைஞர் குடிக்கத் தண்ணீர் கேட்டார். நான்தான் தண்ணீர் கொடுத்தேன். தம்ளரை வாங்கிக் கொண்டு, பக்கத்தில் புரொடக்ஷன் ஆபீஸ் அருகே இருந்த மாடிப்படி பக்கம் போனார். சிறிது நேரத்தில் அந்த இளைஞர் திடீரென மயங்கி விழுந்து விட்டதாய்ச் சொல்ல ஓடிப் போய்ப் பார்த்தேன். ஜெமினி ஸ்டுடியோவின் டாக்டருக்குத் தகவல் போனது. போலீசுக்கும் புகார் செய்யப்பட்டது.

மயில் துத்தம் சாப்பிட்டு, தற்கொலை செய்து கொள்ள முயற்சித்தார் அந்த இளைஞர் என்பது தெரிய வந்தது. அவர் பையில், தமது உடலை பி.எஸ்.ராமையா (மணிக்கொடி எழுத்தாளர், அப்போது சினிமாவிலும் பிரபலம்)விடம் ஒப்படைத்து விடும்படி எழுதப்பட்ட சீட்டு இருந்தது. கோர்ட்டில் தற்கொலை முயற்சி என்று வழக்கு தொடரப்பட்டபோது அந்த இளைஞர் ஜட்ஜ் முன்னால் மடமடவென்று, ஆங்கில நாடக வசனங்களைப் பேசி ஆச்சரியத்தில் மூழ்கடித்தார். வழக்கில் தண்டனை ஏதும் தரப்படவில்லை. அந்த இளைஞர்தான் சந்திரபாபு!

●● புதுக்கோட்டையிலிருந்து ஓர் இளைஞரை ஜெமினியின் முக்கிய பொறுப்பிலிருந்த ஒருவர் வரவழைத்து, மேக்-அப் டெஸ்ட் எடுத்தார். ஆனால் அவர் தேர்வாக வில்லை. எனினும் அவருக்கு ஜெமினியில் காஸ்ட்யூம் டிபார்ட்மெண்ட்டில் வேலை தரப்பட்டது. பின்னர் அவர் சினிமாவில் நுழைந்து இன்றளவும் வெகு பிரபலம். அவர் தான் ஜெமினி கணேசன்!

சந்திப்பு: **எஸ். சந்திரமௌலி**

படங்கள்: **ஸ்ரீஹரி**



"இந்தாங்க, காபி!"

"இருடீ, இந்தப் பேய்க்கதை பயங்கர இன்ட்ரஸ்ட்டா போயிட்டிருக்கு..."

— ஜோதி ரஞ்சன்

சினிமா பாணியில் ஒரு கல்யாணம்



இன்டர் காலேஜ் மீட் ஒன்றில் தற்செயலாகச் சந்தித்தது இப்படித் தொடரும் என்று ரமேஷும் ராதாவும் எதிர்பார்க்கவில்லை.

பி.ஈ. முடித்த கையோடு ஒரு தனியார் கன்ஸ்ட்ரக்ஷனில் இன்ஜினியராக வேலைக்குச் சேர்ந்தான் ரமேஷ்.

ஒரு 'த்ரீ ஸ்டார்' ஓட்டல் கன்ஸ்ட்ரக்ஷன்... அப்போது ராதா அவனைப் பார்த்தாள்...

"அட ஏது இந்தப் பக்கம்..." அவன் கேட்டான்.

"இந்த ஓட்டல் கட்டுவதே எங்கப்பாதான்..."

"உங்கப்பாவா...? பெயர்..."

"தனசேகரன்..."

"தனசேகரனா... கேள்விப் பட்ட பெயரா இருக்கே..."

"எங்கப்பா சினிமா புரொடியூசரும் கூட...."

"அடேயப்பா... பெரிய பட அதிபரின் மகளா நீங்க..."

"இதோ பாரு ரமேஷ்... எங்கப்பா யாராயிருந்தா என்ன...? நாம ரெண்டு பேரும் ஒருத்தரையொருத்தர் மனமார விரும்பறோம்... கல்யாணமும் பண்ணிக்கப் போறோம்..." இறுதியாகச் சொன்ன ராதா, அதை உறுதி செய்வது போல, அவனை ஒருநாள் தன் பங்களாவிற்கு அழைத்துச் சென்றாள்!

"அப்பா... இவர் ரமேஷ்..." - தன் அப்பாவிடம் நேரடியாக அறிமுகப்படுத்தினாள்...

ரமேஷை ஏற இறங்கப் பார்த்தார் தனசேகரன்.

"சரி... சொல்லுமா..."

"அப்பா இவர் நேற்று என்னை ஒரு பெரிய ஆபத்திலிருந்து காப்பாற்றினார்... இவர் மட்டும் நேற்று இல்லாதிருந்தால், ஆட்டோ ஏறி நான் செத்தே போயிருப்பேன்..."

பதறிப் போனார் தனசேகரன்.

"என்னம்மா சொல்றே...? விபத்தா... இவர் காப்பாற்றினாரா...?"

"ஆமாம்ப்பா... ஷாப்பிங் முடித்து நான் என் கார்கிட்டே போயிக்கிட்டிருந்தேன்... சட்டென்று

க. ஒப்பிலியப்பன்

குறுக்கே வேகமாக ஓர் ஆட்டோ வந்தது... ஸ்கூட்டரில் வந்து கொண்டிருந்த இவர் சட்டென்று என்னைத் தள்ளி விட்டார்.... இல்லாதிருந்தால் என் மீது ஆட்டோ ஏறியிருக்கும்..."

"அப்படியா...?" என்ற தனசேகரன் ரமேஷ் பக்கம் திரும்பி, "ரொம்ப ரொம்ப நன்றி சார்..." என்றார்.

இதற்குள் டெலிபோன் மணி அலறவே, "எக்ஸ்கியூஸ் மீ... நீங்க பேசிக்கிட்டிருங்க, இதோ வரேன்" என்று அறைக்குள் நுழைந்தார்.

ஹாலில் தனித்து விடப்பட்ட நிலையில் ரமேஷ் ராதாவிடம் கேட்டான்...

"என்ன ராதா... உங்கப்பாவிடம் ஏதோ விபத்து, ஆட்டோ, நான் காப்பாற்றினேன் என்றெல்லாம் ரீல் விட்டிருக்கே. எனக்கு ஒன்றுமே புரியலே. நீ ஏன் இப்படிப் பேசினே..."

"உங்களுக்கு இதெல்லாம் சட்டென்று புரியாது.... எங்கப்பா சினிமா படத் தயாரிப்பாளர்.... எத்தனையோ மசாலாப் படங்களை எடுத்தவர்... எல்லாப் படங்களிலும் கதாநாயகன் நாயகியை ஏதாவது விபத்துலேர்ந்து காப்பாற்றி விட்டுத்தான் காதலிக்க ஆரம்பிப்பான்... நம்ம காதலுக்கும் இப்படியொரு சம்பவம் நடந்த மாதிரி சொன்னாத்தான் எங்கப்பா நம்ம காதலை ஏற்பார்..."

"என்னங்க... உங்களுக்கு பத்திரிகை ஆசிரியர்கிட்ட இருந்து ஒரு பத்திரிகை வந்துருக்கு!"

"அட... நான் அனுப்பின கதை பிரசுரமான இதழா?"

"நீங்க வேற... எந்த பத்திரிகையைப் பார்த்து காப்பியடிச்சீங்களோ அந்தப் பழைய இதழை அனுப்பியிருக்காங்க!"

— அம்பை தேவா



"சபாஷ்... மகளே சபாஷ்..."

ரமேஷ் ராதா இருவருக்குமே தூக்கி வாரிப் போட்டது. "உங்கப்பாவைப் பற்றி இவ்வளவு நல்லா புரிஞ்சு வச்சிருக்கிற உன்னோட சாமர்த்தியத்தைப் பாராட்டறேன். ஒத்துக்கறேன். கதாநாயகன் நாயகியை ஆபத்துலேர்ந்து காப்பாத்தின பிறகுதான் காதலிப்பான். அதன்படி ஆபத்துலேர்ந்து உன்னை ரமேஷ் காப்பாத்திட்டான். ஆனா ஒன்ன நீ மறந்துட்டயே. எந்தக் காதலுக்கும் ஒரு வில்லன் உண்டு. சரிதானே... இப்ப உங்க காதலுக்கும் ஒரு வில்லன் வரப் போறான். என்னோட நண்பன் ராஜலிங்கத்தின் மகன் சேகருக்கு உன்னைக் கல்யாணம் பண்றதா நான் ஏற்கெனவே முடிவு பண்ணிட்டேன். வர்ற தையில கல்யாணம். சேகர்... அதாவது உன்னோட வில்லனை எப்படிச் சமாளிக்கப் போறே... பார்த்துடறேன்..." தனசேகரன் போய் விட்டார்...

ரமேஷூம் ராதாவும் ஒன்றும் புரியாமல் குழம்பித் தவித்தனர்!

"ராதா... என்னை மன்னிச்சுடு. பிரபல பட அதிபரோட பணபலம், படைபலம் இதுக்கு முன்னாடி எதிர்த்துப் போராட எனக்கு சக்தி கிடையாது...."

"இதோ பாருங்க ரமேஷ்... நான் உங்களை மனமார நேசிக்கிறேன். கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்களைத்தான் பண்ணிப்பேன்... இல்லேன்னா தற்கொலை பண்ணிப்பேன்... இது சினிமா வசனம் இல்லே... நிஜமான வார்த்தைகள்...'

தை பிறந்து விட்டது...! ஆனால் தப்பிக்க ராதாவுக்குத்தான் வழி தெரியவில்லை!

கல்யாண நாள் நெருங்க நெருங்க அவளுக்குத் தற்கொலை உணர்வுதான் அதிகமானது...

கல்யாண நாளும் வந்து விட்டது...!

முகூர்த்தத்திற்கு இன்னும் ஒரு மணி நேரமே பாக்கி.

கட்டாய அலங்காரத்தில் களையிழந்து காணப்பட்டாள் ராதா...!

அப்போதுதான் அந்தக் கல்யாண ஹாலில் திபுதிபுவென்று போலீஸ்

நுழைந்தது...

தனசேகரன் பதறிப் போனார்.

"இன்ஸ்பெக்டர்... என்ன இது...?"

"சார்... உங்க மகள் பெயர் ராதாவா... அவங்கள நான் அரெஸ்ட் பண்ண வந்திருக்கேன்..."

"ஏன் சார்... ஏன்...? அவள் என்ன தப்புப் பண்ணினாள்...?"

"தற்கொலை பண்ணிக் கொள்ள முயற்சி செய்யறதும் சட்டப்படி குற்றம்தான்..."

"தற்கொலையா...? சார்... என் மகளுக்கு இன்னிக்குக் கல்யாணம்... இருந்து பார்த்து ஆசீர்வதித்து விட்டு, விருந்து சாப்பிட்டு விட்டுப் போங்க..." தனசேகரின் பேச்சில் ஏளனம் எக்காளமிட்டது...

"சார் இந்த வாய்ஸ் யாருது சொல்லுங்க...?" இன்ஸ்பெக்டர் டேப்பை போட்டார்.

ராதாவின் குரல் அந்த மண்டபம் முழுவதும் கேட்டது.

"இதோ பாருங்க ரமேஷ்... நான் உங்கள மனமார நேசிக்கிறேன்... கல்யாணம் பண்ணிக்கிட்டா உங்களத்தான் பண்ணிப்பேன். இல்லேன்னா தற்கொலை பண்ணிப்பேன்.. இது சினிமா வசனம் இல்லே. நிஜமான வார்த்தைகள்..."

அடுத்த ஐந்தாவது நிமிடம் பிள்ளை வீட்டார் சத்திரத்தை காலி செய்து விட்டிருந்தனர்!

சரியான நேரத்தில் ரமேஷ் உள்ளே நுழைந்தான். "இவர்தான் எங்களிடம் உங்க மகளோட பேச்சு அடங்கிய கேசட்டை கொடுத்து புகாரும் கொடுத்தார்...." - இன்ஸ்பெக்டர் சொன்னார்...

"சார்... உங்க பொண்ணு ஒரு மேஜர்... கட்டாயப்படுத்தி அவங்கள கல்யாணம் செய்து கொள்ள நீங்க நிர்ப்பந்தப்படுத்தறது தப்பு... நீங்க சொன்ன மாதிரி வில்லனை விரட்டியாச்சு... இதுல இன்னொரு விசேஷம்... படத்தில் கடைசி நேரத்துலதான் போலீஸ் வருவாங்க... எங்க காதலிலும் அப்படித்தான்... ஆனா ஒரு சின்ன வித்தியாசம்... இவங்களோட உதவியினாலதான் நான் உங்க மகளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேன்... வணக்கம்...!" ●



புல்லாங்குழல்

இசைக்கான லிபிகளின்
சூட்சுமம் மட்டும்
இன்னும் புரியவில்லை.

ஊன்றிக் கவனித்தும்
டோல்கி தபேலாவை
இனம் பிரிக்க
இயலவில்லை

பாப், டிஸ்கொதே
பேதம் பிரிப்பது
எப்படி?

அனுப்ஜலோடா
ஐஸ்ராஜ்
இருவரும் ஒருவரோ
என்கிற ஐயம்
இன்றுவரை தீரவில்லை

நித்யஸ்ரீ
ஜெயஸ்ரீ
மேதைமை புரியவில்லை

மிருதங்கத்தைவிட தவிலும்
வீணையை விட புல்லாங்குழலும்
வேறு எந்த இசையையும் விட
திரை இசையும் அதிகம் கேட்பதால்
ரசனையில் கீழெனப்படுவேன்.

விவிதபாரதியில் அவ்வப்போது
ஒலிக்கிற பி. சுசீலாவின்
பழைய பாடல்களுக்கு மட்டுமே
பரம ரசிகன் நான்.

— கே. பாலசுப்ரமணியன்



சோமசேகரின் நடத்தை தொடர்ந்து வினோதமாகவே இருந்தது. சங்கர் அவன் விரல் ரேகைகளைப் பதிவு செய்ய அனுமதி கேட்டபோது, உடனே சம்மதித்தான். சங்கரின் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டு, உடனே சிஐடியின் விரல்ரேகைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டது. ஆனந்தைக் கொன்ற துப்பாக்கியில் ஏற்கெனவே சில விரல் அடையாளங்கள் இருந்தன. அவை இதுவரை சந்தேகப்பட்ட சோமசுந்தர், சோனாலி, ஜமதக்னி எவருடனும் பொருந்தவில்லை என்பது ஒரு கேள்விக் குறியாகவே இருந்து வந்தது. அதனால்தான் தீர்மானமாக எவரையும் கைது செய்ய முடியவில்லை. இப்போது சேகரின் பிரதிகளும் பத்தோடு பதினொன்றாகச் சேர்ந்து கொள்ளப் போகின்றன என்றுதான் சங்கர் எதிர்பார்த்தார்.

லாபிலிருந்து வந்த ரிப்போர்ட் அவருக்கு அதிர்ச்சியளித்தது. சேகரின் விரல் ரேகைகள் அந்த துப்பாக்கியில் பதிந்திருந்த ரேகைகளுடன் பொருந்தின.

சங்கர் இந்தச் செய்தியை ரியாஸிடம் சொன்னபோது அவரும் முதலில் தடுமாறிப் போனார்.

"சேகர் சொன்னது நிஜம்னு ஆய்டுச்சு. அவன்தான் கொன்னிருக்கான்."

"ஆமாம் ரியாஸ். அவனைக் கைது பண்ணிட வேண்டியதுதான். இவனை எப்படி சந்தேக லிஸ்ட்ல சேர்க்காம விட்டோம்? தெரியலை. போலீஸ் முகத்திலே கரி பூசிட்டான், உங்களால நான்தான் கொன்னேன்னு கண்டுபிடிக்க முடியலை. நானா முன்வந்து குற்றத்தை ஒப்புக்கறேன்னு! இந்த மாதிரி கேஸ் இந்திய போலீஸ் சரித்திரத்திலேயே முதல் தடவைன்னு நினைக்கிறேன்."

ரியாஸ் ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார். "இவன் ஏன் ஒத்துக்கிட்டான்ங்கறது இன்னும் உறுத்துது சங்கர்?"

"பயம்தான். அவன் சொன்ன காரணம் ஏற்றுக் கொள்ளும்படியா இருக்குது. ரியாஸ், போலீஸ் ஒண்ணும் அவ்வளவு முட்டாள்களில்லை. எப்படியும் கண்டுபிடிச்சுருவாங்க. அதனால நாமே ஒத்துக்கிட்டா மேன்ஸ்லாட்டர்ல கொஞ்ச நாளில் வெளிய வந்துரலாம்னு!"

"அவன் ஏதும் வக்கீலைக் கலந்து பேசினதா தெரியலையே?"

"பண்ணிருப்பான். நம்மகிட்ட சொல்லியிருக்க மாட்டான். நிச்சயம் ஒரு தேர்ந்த வக்கீலின் உதவியோடதான் இந்த கன்ஃபெஷனுக்கு ஒத்துக்கிட்டு இருக்கான்னு நினைக்கிறேன்."

"கேஸ் முடிஞ்சு போச்சுங்கறிங்க?"

"நிச்சயமா" என்றார் சங்கர்.

"அப்ப அரஸ்ட் வாரண்ட்டுக்கு ஏற்பாடு பண்ணிருங்க. சேகர் வீட்டிலதானே இருக்கான்?"

"இல்லை, நம்ம அலுவலகத்திலேயே பழி கெடக்கான்!"

"ஆச்சரியம்! ரொம்ப ஆச்சரியம்!"

சேகர் ஷேவ் பண்ணாத முகத்துடன் - சங்கரின் அலுவலகத்தில் காத்திருந்தான்.

"என்ன சார் அரஸ்ட் பண்ணப்



போறீங்களா, இல்லையா?''

''ஆமாங்க. உங்க விரல் ரேகை துப்பாக்கில இருக்குது. சேகர், நான் உங்ககூடக் கொஞ்சம் பேசணும்.''

''பேசுங்க'' என்றான்.

''உண்மையைச் சொல்லுங்க – நீங்கதான் இந்தக் குற்றத்தைச் செய்தீங்களா... அல்லது...''

''அல்லது?''

''எவனாவது மற்றொரு ஆசாமி செய்த குற்றத்தை மறைக்கறீங்களா?''

''இல்லை. நான் எதையும் யாரையும் மறைக்கலை. என் மனசில முதல்ல தப்பிச்சுக்கலாம்னு யோசிச்சிட்டுருந்தேன். எப்படியும் நான் மனச்சாட்சி– கடவுள்கிட்டருந்து தப்பிக்க முடியாதுன்னு தெளிவு வந்தப்புறம்...''

''அதையே திருப்பி திருப்பிச் சொல்றீங்க. ஆனந்த் ஏதாவது சட்ட விரோதமான காரியம் செய்றதுக்காக அவரை யாரும் அணுகினார்களா வெளிநாட்டிலிருந்து – உள்நாட்டிலிருந்து? இது விஷயம் ஏதாவது தெரியுமா உங்களுக்கு?''

''தெரியாது. என் காரணம் ரொம்ப எளிய காரணம் சார். பாரதியை அவன் கொடுமைப்படுத்தினதுக்காக...''

''சொன்னீங்க.''

''பாரதிகிட்ட இதை சொல்லிட்டிங்களா?''

''எதை?''

''குற்றத்தை ஒப்புக்கிட்டதை...''

''இல்லை.''

''சொல்லிடாதீங்க...''

''ஏன்?''

''அந்த ஷாக்கை அவ தாங்கிக்க மாட்டா. தயவு செய்து அதை மட்டும் செய்யாதீங்க. இதை அவகிட்ட இப்ப சொல்லாதீங்க'' என்று





''ஏன் நம்ம வசனகர்த்தா டென்ஷனா உட்கார்ந்திருக்காரு?''

''டைட்டில்ல, 'கதை, திரைக்கதை வசனம்'னு எழுதறதுக்குப் பதிலா 'கதை, 'திருட்டுக்கதை' வசனம்'னு எழுதிட்டாங்களாம்!''

– பா. ஜெயக்குமார்

கெஞ்சினான்.

சேகரை பாதுகாவலுடன் அருகாமை காவல் நிலையத்தில் இருக்குமாறு செய்துவிட்டு, ரியாஸ் , "சங்கர், வாங்க. ஒரே ஒரு விஷயம்தான் இந்த கேஸ்ல பாக்கி."

"என்ன பாக்கி? எல்லாம்தான் தெளிவாயிருச்சே?"

"சட்டுனு ஞாபகம் வரலை" என்றார் ரியாஸ். "வாங்க பாரதியைப் போய் பார்த்துரலாம்."

சங்கர் அவரை தயக்கத்துடன் பார்த்தார். ரியாஸ், அவங்ககிட்ட சொல்ல வேண்டாம்னானே சேகர்! அதுக்கு மதிப்புக் கொடுக்க வேண்டாமா?"

"வேண்டாம். வாங்க. எனக்கென்னவோ இவன் யாரையோ ப்ரொட்டக்ட் பண்றான்கற சந்தேகம். இவனே கொன்னிருந்தா இவன் சொல்ற காரணம் சரியில்லை. வேற யாரோ நியமிச்சுத்தான் கொன்னிருக்கணும்."

"அதை பாரதிகிட்டருந்து எப்படி...?"

"வாங்க, பார்க்கலாம்."

பணசங்கரி வீடு பூட்டியிருந்தது. எதிர் வீட்டில் விசாரித்தபோது, 'அவங்கள்ளாம் வேற வீட்டுக்குப் போய்ட்டாங்களே!" என்று சொன்னார்கள்.

"அட்ரஸ் இருக்குமா?"

"லெட்டர்ஸ் வந்தா ரிடைரக்ட் பண்ண கொடுத்துட்டுப் போயிருக்காங்க."

ராஜேஸ்வரி நகரில் கோவில் பக்கத்தில் தனியான இரண்டு கிரவுண்ட் இடத்தில் விஸ்தாரமாகக் கட்டிய பெரிய வீடு. மாடியும் கீழுமாக நவீன முறையில் கட்டப்பட்டு உறை பிரிக்காத பரிசுப் பொருள் போல இருந்தது. ரியாஸும் சங்கரும் வராந்தாவில் காத்திருக்க, சற்று நேரத்தில் பாரதியின் தந்தை வந்தார்.

"கோவிலுக்குப் போயிருக்கிறாள். இருங்க வந்துருவா. என்ன விஷயம்? எதாவது கண்டு பிடிச்சிங்களா? நாட் தட் வி கேர்."

"இந்த வீடு உங்களுதா?"

"இல்லை. ஆனந்த் வாங்கின வீடு. செத்துப் போறதுக்கு ஒரு மாசம் முன்னாடிதான் பதிவாச்சு. என்ன சோகம் பார்த்திங்களா."

"பெரிய வீடு!"

''மொத்தம் இரண்டாயிருத்து ஐநூறு சதுர அடி வரை கட்டிருக்கு. மாடில ரெண்டு பெட்ரூம். கீழ பெரிய ஹால் இத்தனை பெரிய வீட்டில என் மக எப்படித் தனியா இருப்பா? டிஸ்போஸ் பண்ணிடறதுன்னு தீர்மானிச்சாச்சு."

"உங்க மக வர நேரமாகுமா?"

"இங்கதான் ராஜேஸ்வரி கோவிலுக்குப் போயிருக்கா, நிம்மதி தேடி. வந்துருவா. எங்க கிளம்பிட்டிங்க?"

"அங்கயே பாத்துர்றேன்."

"ஏதாவது முக்கியமா சொல்லணுமா?"

"இல்லை. நான் சொல்லிக்கறேன். சேகர் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க?"

"உங்ககிட்ட சொல்லிட்டானா?" என்றார் சந்தேகப் பார்வையுடன்.

"என்ன?" என்றார் ரியாஸ் வியப்புடன்.

"பாரதியை அவன் கல்யாணம் செய்துக்க விரும்பறான். எனக்குச் சம்மதம்தான். இவதான் குழப்பத்தில இருக்கா!"

"அது அவ்வளவு சீக்கிரம் நடக்காதுனு நினைக்கிறேன்" என்றார் சங்கர்.

"ஏன்?"

"இதோ அவங்களே வந்துட்டாங்க."

பாரதி கோவிலிலிருந்து வந்திருந்ததற்கான குங்கும அடையாளங்கள் இருந்தன. "வாங்க வாங்க" என்றாள். "அப்பா அவங்களுக்கு காப்பி கொடுத்திங்களா? இப்பத்தான் மூவ் பண்ணிருக்கோம். சாரி. எல்லாம் போட்டது போட்டபடி இருக்குது."

''பாரதி, உங்ககிட்ட கொஞ்ச நேரம் தனியா பேசணும்."

"இதோ டிரஸ் மாத்திக்கிட்டு வந்துர்றேன், ப்ளீஸ்."

ஹாலில் டி.வி ஓடிக் கொண்டிருந்தது. தெலுங்குப் படம். கணவன் காலில் விழுந்து மனைவி கதறி அழுது கொண்டிருந்தாள். அவன் காலைப் பற்றிக் கொண்டு, கண்ணீர் பூட்சை நனைக்க, அவன் கவனியாமல் வேறு திசையில் பார்த்துக்கொண்டு காலை

இழுக்க இழுக்க அவள் தரையில் தேய்த்துக் கொண்டே வந்தாள்.

"செண்டிமெண்டல் ட்ராஷ்" என்றார் ரியாஸ். "இந்தக் காட்சியை சினிமாவிலிருந்து தடை செய்யப் பெண்கள் இயக்கம் போராடணும்!" என்றார்.

பாரதியின் தந்தை வந்து ரிமோட்டை எடுத்து அதை அணைத்தார். பாரதி மாடியிலிருந்து வந்தாள். நீல நிற சுடிதாருக்கு மாற்றிக் கொண்டிருந்தாள். கலைந்திருந்த தலையைத் திருத்தி வாரிக் கொண்டு ஒரு புதிய புஷ்பம் போலத் தோன்றினாள். அவளை விதவை என்று நினைப்பதே கஷ்டம் என்று சங்கர் எண்ணிக் கொண்டார்.

எதிரே உட்கார்ந்து கன்னத்தில் கை வைத்துக் கொண்டு 'சொல்லுங்க' என்றாள் கதை கேட்பவள் போல.

"இந்த வீட்டைப் பற்றிக் கேக்கலாமா?"

"என்ன கேக்கணும்?"

"இதை ஆனந்த் - எப்ப வாங்கினார்?"

"சமீபத்திலதான், எங்க கல்யாண தினத்துக்குப் பரிசாக அளிக்கிறதா இருந்தார். அதுக்குள்ள..." அவள் தொண்டை அடைத்தது. "காலி வீட்டை எங்கிட்ட காட்டினப்ப எவ்வளவு பெருமைப்பட்டார் தெரியுமா?"

அவள் மனதில் அந்த ஆச்சரிய தினம் ஓடியது.

"என்ன சாவிக் கொத்து?"

"நம்ம வீடு மாத்தறோம்."

"புது வீடா?"

"ஆமாம். ராஜேஸ்வரி நகர்ல புதுசா ஒரு வீடு."

"எத்தனை வாடகை?"

"வாடகையா? வாங்கிட்டேண்டி என் பொண்டாட்டி!"

"வாங்கிட்டிங்களா? புளுகு!"

"மெய்யாலும் பாரதி. நமக்கே நமக்கு ஒரு வீடு!"

"பணம்?"

"பணம் வரும் போகும்!"

"என்ன வெலை?"

"இதெல்லாம் பத்தி என்ன கவலை. வீட்டை வந்து பாரு."

வீட்டைப் பார்த்ததும் பிரமித்தாள். அதே சமயம் **இவருக்கு ஏது இவ்வளவு பணம்?**

பாரதி நினைவுகளிலிருந்து கலைக்கப்பட்டாள். "மிஸஸ் ஆனந்த், உங்க கணவருக்கு இந்த வீடு வாங்கப் பணம் எப்படிக் கிடைச்சதுன்னு சொல்ல முடியுமா?

(தொடரும்)

நூற்றுக்கு ஒரு கல்கி தீபாவளி மலர்!



❖ 'தூரிகைப் பிரார்த்தனைகள்', 'கடவுளைக் குழந்தையாக்கும் கவிதை ரசாயனம்', 'வண்ணம் சேர்க்கும் வன தேவதைகள்', குடகு நாட்டுக் குபேர செல்வம்' போன்ற வண்ண ஓவிய, புகைப்பட மடல்கள் கல்கி தீபாவளி மலரின் பெருமைக்கு ஒரு அற்புத எடுத்துக்காட்டு.

மங்கை நல்லூர். சின்னஞ்சிறுகோபு.

❖ தீபாவளி அன்று கண்ணனே நேரில் வந்தது போல இருந்தது அட்டைப்படம். மணியன் செல்வனுக்கு திருஷ்டி சுற்றிப் போடுங்கள்!

குறிஞ்சிப்பாடி. எஸ். முரளி.

❖ ஸ்ரீ காஞ்சிப் பெரியவர் புகைப்படம் ம.செ. ஓவியத்தில் மலர்ந்து மணம் பரப்பி, மனத்தில் அழியா இடம் பெற்றது. மண்ணில் மறைந்த மடாலயங்கள் நாலந்தா... இப்படி அரிய கலைப் புகைப்படங்கள் கண்ணைக் கவர்ந்தன. தாய்லாந்து பாணி புத்தர் காணக்கிடைக்காத படம்!

சென்னை – 5. பா. அச்சுதன்.

❖ தீபாவளி மலரைப் படித்தேன். ராஜாஜியின் கட்டுரை இக்காலத்திற்கும் பொருந்தும்படி இருந்தது ஆச்சரியம் தான். அமரர் கல்கியின் தனகோடியின் மனோரதம் கதை பழைய காலகட்டத்தை எடுத்துக் காட்டியிருந்தது. என்ன ஒரு அமைதியான நடை, திருப்பங்களுடன் கூடிய அருமையான கதை! ஆச்சரியமேற்படுகிறது. பா. ராகவனின் கதையும் சுவாரஸ்யம்தான். மரபுக் கவிதைகள் நயமாக இருந்தன. தரத்தை மட்டுமே நம்பி கல்கி தீபாவளி மலரை ஒவ்வொரு வருடமும் வெளியிடுகிறீர்கள். என்னைப் போன்ற கல்கி வாசகன் இதனால் பெருமை அடைகிறான்.

மொரட்டுப்பாளையம். சு.நா. இராஜேஸ்வரன்.

❖ அழகான அட்டைப் படத்துடன் வழுவழு பேப்பரில் அமையப் பெற்ற கல்கி தீபாவளி மலர், கண்ணுக்கும், அறிவுக்கும் விருந்து.

பாளையங்கோட்டை. ஏ. குமாரவேலு.

❖ கோடிக் கணக்கில் பரிசுகளை அறிவித்து, புற்றீசல் போல் வெளிவந்த தீபாவளி மலர்களுக்கிடையே, நல்ல அம்சங்களை மட்டுமே தாங்கி வந்த "கல்கி" மலரை வாங்கியதால் வாசகர்களுக்கு எந்தவித ஏமாற்றமும் இல்லை!

பெங்களூர் – 16. அ. சங்கரன்.

Ruchi

ருசி ஊறுகாய்கள்
வீட்டில் செய்த
சுவை போல



RUCHI AGRO PRODUCTS PRIVATE LIMITED

50, GIRIAPPA ROAD, CHENNAI - 600 017. PH. 8269290, 8269438, 8241348

GRAND SALE

CHURIDHARS, NIGHTIES, SHIRTS, T-SHIRTS, BERMUDAS, BABA SUITS, FROCKS, BEDSHEETS CUTWORK ITEMS, CURTAIN CLOTHS, ETC.,

November 1st to 25th only

Curtain Cloth Mtr. ~~125~~
Now for Rs. 48/- Per Mtr.

UPTO 50% OFF

BRING THIS AD CUTTING & GET

ONE CHURIDHAR FOR RS. 52/- ONLY

WITH YOUR EVERY PURCHASE OF RS. 500 AND ABOVE.

PANCHALI HALL

173, PURASAI HIGH ROAD, (NEAR ABIRAMI THEATRE),
KELLYS, CHENNAI - 600 010. TEL : 5327026

ET COMMUNICATION



இருபத்தொன்பதாம் அத்தியாயம்

யானைப் பாகன்

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் – இந்தக் கதை நடந்த காலத்துக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், – வலஹம்பாஹு என்னும் சிங்கள அரசன் ஒருவன் இருந்தான். அவனுடைய காலத்திலும் தமிழர் படை இலங்கையின் மீது படையெடுத்துச் சென்றது. அப்போது வலஹம்பாஹு என்பான் தலைநகரிலிருந்து தப்பி ஓடித் தம்பளை என்னுமிடத்திலிருந்த மலைக்குகையில் ஒளிந்து கொண்டிருந்தான். பிறகு அவன் மீண்டும் படை திரட்டிக் கொண்டு சென்று அநுராதபுரத்தைக் கைப்பற்றினான். அவனுக்கு அபயமளித்திருந்த மலைக் குகையை மேலும் குடைந்தெடுத்துக் கோயிலாக்கினான். புத்தர் பெருமானிடம் தன் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுவதற்காக அந்தக் குகைக்குள்ளே பெரிதும் சிறிதுமாய்ப் பல புத்தர் சிலைகளை நிர்மாணிக்கச் செய்தான். நூற்றுக்கணக்கான புத்தர் சிலைகளை நிர்மாணித்த சிற்பிகளுக்குத் தங்கள் சிற்பத் திறனை முழுதும் காட்டி விட்டோம் என்ற திருப்தி ஏற்படவில்லை. எனவே ஹிந்து தெய்வங்களின் படிமங்கள்



சிலவற்றையும் புத்தர் சிலைகளுக்கு இடையில் நிர்மாணித்து வைத்தார்கள். அந்த அற்புதமான சிற்பக் கலை அதிசயங்களை இன்றைக்கும் தம்பளை என்னும் ஊரில் உள்ள குகைக் கோயிலில் காணலாம்.

வந்தியத்தேவன் அந்தப் புண்ணிய ஸ்தலத்துக்குள் பிரவேசித்த போது ஒரு புது உலகத்துக்குள் வந்து விட்டதாகவே அவனுக்குத் தோன்றியது. புது மலர்களின் நறுமணம் அவனுக்கு மயக்கத்தை அளித்தது. வீதி முனைகளில் தாமரை மொட்டுகளும் செண்பக மலர்களும் குப்பல் குப்பலாகக் குவிக்கப்பட்டிருந்தன. பக்தர்கள் அம்மலர்களை வாங்கி அழகிய ஓலைக் கூடைகளில் எடுத்துக் கொண்டு கோயிலை நோக்கிச் சென்றார்கள். ஸ்திரீகளும் புருஷர்களும் அடங்கிய அந்தப் பக்தர் கூட்டங்கள் தெருக்களை அடைத்துக் கொண்டு சென்றன. காவித் துணி அணிந்த புத்த சந்நியாசிகளும் அங்கங்கே காணப்பட்டார்கள். ''சாது சாது'' என்ற பெருங் கோஷம் பக்தர் கூட்டத்திலிருந்து எழுந்தது.

இவையெல்லாம் வந்தியத்தேவனுக்கு மிக்க வியப்பை அளித்தன. ஆழ்வார்க்கடியானைப் பார்த்து, ''நாம் யுத்த கேந்திரத்துக்கு வருவதாக எண்ணினோம். இது புத்த க்ஷேத்திரமாகவல்லவா இருக்கிறது?'' என்றான்.

''ஆம். அப்பா! ஆயிரம் வருஷமாக இது பிரசித்தி பெற்ற புத்த க்ஷேத்திரமாயிற்றே?'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

''ஆனால் இது சோழ சைன்யத்தின் வசத்திலுள்ளது என்று சொன்னீரே?''

''ஆமாம்; இப்போதும் அப்படித்தான்



சொல்கிறேன்."

"சோழ வீரர்கள் யாரையும் இங்கே காணோமே?"


"ஊருக்கு வெளியில் படை வீடுகளில் இருக்கிறார்கள். அப்படி இளவரசருடைய கட்டளை."

"எந்த இளவரசர்?"

"ஏன்? நாம் யாரைத் தேடிக் கொண்டு வந்திருக்கிறோமோ, அந்த இளவரசர்தான்!"

"அதைப் பற்றி உம்மைக் கேட்க வேண்டுமென்று இருந்தேன். இளவரசரை இங்கே தேடிவிட்டு, 'இல்லை' என்று கண்டு பார்த்திபேந்திரன் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறானே? அவரை நாம் இங்கே மறுபடியும் தேடுவதில் என்ன பயன்?"

"அந்தப் பல்லவன் 'இல்லை' என்று சொன்னதனால் நான் நம்பி விடுவேனா? நானே தேடிப் பார்த்துத்தான் தெரிந்து கொள்வேன். இரணியன் 'ஹரி' என்கிற தெய்வம் இல்லை என்று சொன்னான். அதைப் பிரஹலாதன் நம்பி விட்டானா?"



"ஓ வீர வைஷ்ணவரே! நம்முடைய நாட்டில் சைவர்களுடன் ஓயாமல் சண்டை பிடித்துக் கொண்டு வந்தீரே? இங்கே இத்தனை புத்த சந்நியாசிகள் போகிறார்கள். நீர் பாட்டுக்குச் சும்மா வருகிறீரே? என்ன காரணம்? எதிரிகளின் கூட்டம் அதிகமாயிருப்பதைக் கண்டு பயந்து போய் விட்டீரா?"

"தம்பி! பயம் என்பது என்ன? அது எப்படியிருக்கும்?"

"கறுப்பாய், பூதாகாரமாய். யானை எவ்வளவு பெரிதாக இருக்கும். நீர் பார்த்ததேயில்லையா?"

"இல்லை" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிவிட்டு, வீதி ஓரத்தில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த இரண்டு மனிதர்களை அணுகினான். அவர்கள் தமிழர்கள் போல் தோன்றினார்கள். அவர்களிடம் சிறிது நேரம் ஏதோ பேசிவிட்டு ஆழ்வார்க்கடியான் திரும்பி வந்தான்.

"வைஷ்ணவரே! அவர்களிடம் என்ன கேட்டீர்? விஷ்ணு பெரியவரா, புத்தர் பெரியவரா என்று கேட்டீரா? இந்த ஊரில் யாரைக் கேட்டாலும் 'புத்தர் பெரியவர்' என்றுதான் சொல்வார்கள். ஒவ்வொரு புத்தர் சிலையும் எவ்வளவு பிரம்மாண்டமாய் இருக்கிறது. பார்க்கவில்லையா?"

"தம்பி! என்னுடைய வீர வைஷ்ணவத்தையெல்லாம் இராமேசுவரத்தில் மூட்டை கட்டி வைத்து விட்டு இங்கே ராஜ காரியமாக வந்திருக்கிறேன். தெரிகிறதா?"

"பின்னே அந்த மனிதர்களிடம் என்ன கேட்டீர்? இளவரசரைப் பற்றி விசாரித்தீரா?"

"இல்லை; இந்த ஊரில் இன்றைக்கு என்ன விசேஷம் என்று கேட்டேன்."

"அவர்கள் என்ன சொன்னார்கள்?"

"இன்றைக்கு இங்கே சீன யாத்திரீகர்கள் இரண்டு பேர் வரப் போகிறார்களாம்; அதை முன்னிட்டுப் புத்த விஹாரத்தில் உற்சவம் நடக்கிறதாம்; அதனாலேதான் ஊரில் இந்தக் கோலாகலம் என்று தெரிவித்தார்கள்."

"சீன யாத்திரிகர்கள் எங்கிருந்து வருகிறார்களாம்?"

"நேற்று இங்கு வந்து விட்டுச் சிம்மகிரிக்குப் போனார்களாம். சிம்மகிரியிலிருந்து இப்போது வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் இன்னும் சற்று நேரத்தில் இங்கே வந்து விடுவார்கள் என்றும் தெரிவித்தார்கள்."

"சிம்மகிரி எங்கே இருக்கிறது?"

"இங்கிருந்து காத தூரத்தில் இருக்கிறது. இன்னும் சிங்களவர் வசத்தில் இருக்கிறது. பகல் வேளையாயிருந்தால் இங்கிருந்தே பார்க்கலாம். சிம்மகிரி குன்றின் உச்சியில் ஒரு பலமான கோட்டை இருக்கிறது. அங்கேயுள்ள ஒரு குகையில் அற்புதமான அழியா வர்ணச் சித்திரங்கள் இருக்கின்றன. அந்தச் சித்திரங்களைப் பார்க்கத்தான் சீன யாத்திரிகர்கள் அங்கே போயிருக்க வேண்டும். குன்றில் ஏறி இறங்குவதற்குப் பெரிதும் கஷ்டப்பட்டிருப்பார்கள்... அதோ பார்!"

ஆழ்வார்க்கடியான் சுட்டிக் காட்டிய இடத்தில் அலங்கரித்த பெரிய யானை ஒன்று வந்து கொண்டிருந்தது. அதன் அம்பாரியில் இரண்டு பேர் உட்கார்ந்திருந்தார்கள். அவர்களுடைய தோற்றமும் உடையும் அவர்கள்தான் சீன யாத்திரிகர்கள் என்று புலப்படுத்தின. யானைப் பாகன் ஒருவன் கையில் அங்குசத்துடன் யானையின் கழுத்தின் மீது வீற்றிருந்தான். யானையைச் சுற்றி சூழ்ந்து வந்த ஜனங்கள் பலவித ஆரவார கோஷங்களைக் கிளப்பினார்கள்.

"பார்த்தாயா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பார்த்தேன். பார்த்தேன்! அம்மா! எவ்வளவு பெரிய யானை? பக்கத்திலே எங்கேயாவது பள்ளமிருக்கிறதா என்று பார்க்கலாமா?"

"வேண்டாம், வேண்டாம். வீதியில் சற்று ஒதுங்கி நின்றால் போதும்."

அவ்விதமே அவர்கள், யானை நெருங்கி வந்ததும் வீதி ஓரமாக ஒதுங்கி நின்றார்கள்.

யானை அவர்களைக் கடந்து சென்றது; ஜனக் கூட்டமும் யானையைத் தொடர்ந்து சென்றது.

வந்தியத்தேவன் அம்பாரியில் வீற்றிருந்த யாத்திரிகர்கள் மீதே கண்ணாயிருந்தான். புத்தர்களின் புண்ணிய க்ஷேத்திரங்களைத் தரிசிப்பதற்காக எவ்வளவோ தூரம் பிரயாணம் செய்து, எத்தனையோ கடல்களைக் கடந்து வந்த அந்தச் சீனர்களின் பக்தியை நினைத்து வியந்தான். அவர்களுக்கு இங்கே இவ்வளவு உபசாரங்கள் நடப்பது நியாயமான காரியந்தான். ஆனால் யுத்தம் நடந்து கொண்டிருக்கும் காலத்திலும் இவர்கள் யாத்திரைக்குப் பங்கமில்லாமல் நடப்பது எவ்வளவு அதிசயமானது? இளவரசர் அருள்மொழி வர்மரின் ஏற்பாடாகத்தானிருக்க வேண்டும். இவ்வளவு பெருந்தன்மையான காரியங்களைச் செய்யக் கூடியவர் அவர்தான். ஆனால் இப்போது அவர் எங்கே இருப்பார்? அவரைத் தேடிப் பிடிப்பது சாத்தியமா? இந்த வைஷ்ணவனோடு இவ்வளவு கஷ்டத்துடன் பிரயாணம் செய்து வந்தது வீணாகி விடுமோ?...

"தம்பி! பார்த்தாயா?" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"பார்த்தேன்."

"என்ன தெரிந்தது?"

"சீன யாத்ரீகர்களின் முகம் சப்பையாகத் தெரிந்தது. அவர்களுடைய உடை விசித்திரமாயிருந்தது..."

"யாத்ரீகர்களைப் பற்றி நான் கேட்கவில்லை."

"பின்னே?"

"யானைப் பாகனைக் கவனித்துப் பார்த்தாயா என்று கேட்டேன்."

"யானைப் பாகனையா? நான் கவனிக்கவேயில்லையே?"

"அழகாயிருக்கிறது. அந்த யானைப் பாகனுடைய பார்வை தற்செயலாக நம் பேரில் விழுந்ததும் அவனுடைய கண்களில் ஜொலித்த ஒளியைக் கவனிக்கவில்லையா?"

"அது என்ன? யானைப் பாகனுடைய கண்களில் தீவர்த்தி போட்

டிருக்கிறதா ஜொலிப்பதற்கு?''

''நல்ல ஆள் நீ! உன் அஜாக்கிரதையை நினைத்து ஆச்சரியப்படுவதா அல்லது இவ்வளவு முக்கியமான காரியத்தை உன்னை நம்பி ஒப்புவித்து அனுப்பினானே, அந்த இளையபிராட்டியின் காரியத்தைக் குறித்து ஆச்சரியப்படுவதா என்று தெரியவில்லை. போனாற் போகட்டும். என்னோடு வா!''

யானைக்கும் யானையைச் சூழ்ந்து நின்ற கூட்டத்துக்கும் பின்னால் சற்று தூரத்தில் இவர்களும் தொடர்ந்து போனார்கள்.

புத்தவிஹாரத்தின் வாசலில் வந்ததும் யானை நின்றது. பிறகு யானைப்பாகன் ஏதோ சொல்லவும் யானை மண்டியிட்டுப் படுத்தது. யாத்திரீகர்கள் இறங்கினார்கள். புத்தவிஹாரத்தின் வாசலில் கும்பலாக நின்ற புத்த பிக்ஷுக்கள் சில யாத்திரீகர்களை வரவேற்றார்கள். சங்குகள் முழங்கின. ஆலாட்ச மணிகள் ஒலித்தன. விஹாரத்தின் மேல்



மாடத்திலிருந்து மலர் மாரி பொழிந்தது. "புத்தம் சரணம் கச்சாமி" என்ற கோஷம் வானளாவியது. சீன யாத்திரீகர்கள் இருவரும் விஹாரத்துக்குள் சென்றார்கள். கூட வந்தவர்களிலும் பெரும்பாலோர் அவர்களைத் தொடர்ந்து விஹாரத்துக்குள்ளே சென்றார்கள்.

யாத்திரீகர்கள் இறங்குவதற்கு முன்பே யானையின் கழுத்திலிருந்து இறங்கிவிட்ட யானைப் பாகன், யானையை எழுப்பி நடத்திக் கொண்டு சென்றான். சற்று தூரத்தில் நின்றிருந்த நாலு பேரைப் பார்த்தான். அவர்களில் ஒருவனிடம் யானையை ஒப்புவித்தான். இன்னும் ஒருவனிடம் ஆழ்வார்க்கடியானைச் சுட்டிக் காட்டி ஏதோ சொன்னான். மற்ற இருவரையும் அழைத்துக் கொண்டு சென்று சிறிது நேரத்தில் வீதியின் ஒரு திருப்பத்தில் திரும்பி மறைந்தான்.

யானைப் பாகன் எந்த ஆளுக்கு ஆழ்வார்க்கடியானைச் சுட்டிக் காட்டினானோ அவன் இவர்கள் நின்ற இடத்தை நோக்கி வந்தான். ஆழ்வார்க்கடியானிடம் மெல்லிய குரலில் "ஐயா! என்னுடன் வருவதற்குச் சம்மதமா?" என்று கேட்டான்.

"அதற்காகவே காத்திருக்கிறோம்" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"அடையாளம் ஏதாவது உண்டா?"

சேநாதிபதி கொடுத்திருந்த கொடும்பாளூர் முத்திரை மோதிரத்தை ஆழ்வார்க்கடியான் காட்டினான்.

"சரி, என் பின்னால் வாருங்கள்" என்று சொல்லிவிட்டு அவன் முன்னால் செல்ல, இவர்கள் பின் தொடர்ந்து சென்றார்கள். ஊரைத் தாண்டி அப்பால் சென்றதும் குறுகிய காட்டுப் பாதை ஒன்று தென்பட்டது. அதன் வழியே சிறிது தூரம் சென்றதும் பாதையிலிருந்து சற்று விலகியிருந்த ஒரு பாழும் மண்டபத்தை அடைந்தார்கள். அதில் சிறிது நேரம் காத்திருக்க வேண்டும் என்று அவர்களை அழைத்து வந்தவன் தெரிவித்தான். பிறகு அவன் ஒரு மரத்தின் மேலேறி அவர்கள் வந்த வழியைக் கூர்ந்து கவனிக்கத் தொடங்கினான்.

"இதெல்லாம் என்ன மர்மம்? எனக்கு ஒன்றும் புரியவில்லையே?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"எல்லாம் சீக்கிரத்தில் புரிந்துவிடும். கொஞ்சம் பொறுத்திரு!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

அந்தப் பாழும் மண்டபத்தின் பின்னால் இரண்டு குதிரைகள் கட்டப்பட்டிருந்தன. குதிரைகள் இரண்டுதான் என்பது வந்தியத்தேவனுக்குக் கொஞ்சம் கவலையை உண்டாக்கியது.

யானைப் பாகனைப் பற்றிய மர்மம் என்னவாயிருக்கும்? அவனுடைய முகத்தை ஒரே ஒருகணம் வந்தியத்தேவனுடைய கண்கள் ஏறிட்டுப் பார்த்திருந்தன. அப்புறம் சீன யாத்திரீகர்களிடம் அவன் கவனம் சென்று விட்டது. யானைப் பாகனுடைய முகத்தை நினைத்துப் பார்க்க ஆன மட்டும் முயன்றான். ஒன்றும் நினைவுக்கு வரவில்லை.

"வைஷ்ணவரே! அந்த யானைப் பாகன் யார்? எனக்குச் சொல்லக் கூடாதா?"

"யாராயிருக்கும்? நீயே ஊகித்துப் பார், தம்பி!"

"யானைப் பாகன்தான் பொன்னியின் செல்வரா?"

"அவருடைய கண்களில் ஒருகணம் ஜொலித்த பிரகாசத்திலிருந்து அப்படித்தான் தோன்றியது."

"உம்மைப் போல் மற்றவர்களும் அவரைத் தெரிந்து கொண்டிருக்க மாட்டார்களா?"

"மாட்டார்கள். சீனத்திலிருந்து வந்த யாத்திரீகர்களுக்கு இளவரசர் யானைப் பாகராயிருப்பார் என்று யார் எதிர்பார்ப்பார்கள்? மேலும் இந்த ஊரிலுள்ள ஜனங்கள் இளவரசரைப் பார்த்ததும் இல்லை."

"சீன யாத்திரீகர்கள் சிம்மகிரியிலிருந்து வந்தார்கள் என்று சொன்னீர் அல்லவா?"

"ஆமாம்."

"சிம்மகிரி இன்னும் சிங்களவர் வசத்தில் இருக்கிறது என்று நீர் சொல்ல

வில்லையா?''

"சொன்னேன்."

''பின்னே, எதிரிகளுக்கு மத்தியில் போய்விட்டா இளவரசர் திரும்பி வருகிறார்?''

''சிம்மகிரி மட்டும் என்ன? பகை வருக்குட்பட்ட பிரதேசத்தின் மத்தியில் உள்ள மாஹியங்கானா, சமந்தகூடம் முதலிய க்ஷேத்திரங்களுக்கும் இளவரசர் சில யாத்திரீகர்களுடன் போய்த் திரும் பியிருக்கிறார்.''

"எதற்காக அவ்வளவு பெரிய அபா யத்துக்கு உட்பட்டார்?''

''அந்த க்ஷேத்திரங்களையும் அங்கே யுள்ள சிற்ப சித்திர அதிசயங்களையும் பார்ப்பதில் உள்ள அளவு கடந்த ஆசை யினால்தான்!''

''நல்ல ஆசை! நல்ல இளவரசர்! இத் தகைய விளையாட்டுப் புத்தியுள்ள வரையா முடி மன்னர் வணங்கும் ஏக சக்ராதிபதியாவார் என்று அந்தக் குடந்தை ஜோசியர் சொன்னார்?''

''அவ்வாறு குடந்தை ஜோசியர் சொன்னாரா, தம்பி''

''நீரும் அதை நம்புகிறீரா?''

''நான் ஜோசியத்தை நம்பவில்லை. ஜோசியம் பார்க்க வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை?''

''பின்னே என்ன?''

''ஜோசியம் பார்க்காமலேயே எனக்கு நிச்சயமாய்த் தெரியும்......''

திடீரென்று குதிரைகளின் குளம்புச் சத்தம் கேட்டது. அவர்கள் இருந்த இடத்தை நோக்கிச் சத்தம் நெருங்கி வந்து கொண்டிருந்தது. மரத்தின் மேலிருந்து பார்த்துக் கொண்டிருந்தவன் அவசரமாகக் கீழே இறங்கினான். இரண்டு குதிரைகளையும் பிடித்துக் கொண்டு வந்தான். ஒன்றில் தான் ஏறிக் கொண்டான். ஆழ்வார்க்கடியானை இன்னொன்றின் மேல் ஏறிக் கொள்ளச் சொன்னான். ''சற்று நேரத்தில் இந்தப் பாதையுடன் சில குதிரைகள் போகும். அவற்றின் பின்னோடு நாமும் தொடர்ந்து போக வேண்டும்'' என்றான்.

வந்தியத்தேவன் ''எனக்குக் குதிரை?'' என்று கேட்டான்.

''இவரை மட்டுந்தான் அழைத்து வரும்படி எனக்குக் கட்டளை!''

''யாருடைய கட்டளை?''

''அதைச் சொல்ல எனக்கு அதிகாரம் இல்லை.''

''இளவரசரை நான் உடனே பார்த்தாக வேண்டும். மிக முக்கியமான செய்தி கொண்டு வந்திருக்கிறேன்.''

''அதைப் பற்றி எனக்கு ஒன்றும் தெரியாது, ஐயா!''

ஆழ்வார்க்கடியான் ''தம்பி! கொஞ்சம் பொறுமையாயிரு! நான் போய் இளவரசரிடம் சொல்லி உன்னையும் அழைத்து வருவதற்கு ஏற்பாடு செய்கிறேன்'' என்றான்.

''வைஷ்ணவரே! நான் கொண்டு வந்திருக்கும் செய்தி மிக முக்கியமானது. மிக அவசரமானது என்று உமக்குத் தெரியாதா?''

''அந்த ஓலையை என்னிடம் கொடு; நான் கொடுத்து விடுகிறேன்.''

''அது முடியாது.''

''அப்படியானால் கொஞ்சம் பொறுத்திரு; வேறு வழி இல்லை!''

''வேறு வழி இல்லையா?''

''இல்லவே இல்லை!''

வந்தியத்தேவனுடைய உள்ளம் குமுறியது. ஆழ்வார்க்கடியானை இளவரசரிடந்தான் அழைத்துப் போகிறார்கள் என்பதில் சந்தேகமில்லை. ஆழ்வார்க்கடியான் அவரிடம் என்ன சொல்கிறான் என்பதைச் சேநாதிபதி கவனிக்கச் சொல்லியிருக்கிறார். அது முடியாமற் போய் விடுமே?

குதிரைகள் நெருங்கி வந்தன; அவர்கள் இருக்கும் இடத்தைக் கடந்து சென்றன; மின்னல் மின்னும் வேகத்தில் பறந்து சென்றன.



மண்டபத்தில் குதிரைகள் மீது ஆயத்தமாயிருந்த இருவரும் குதிரையின் முகக் கயிற்றை இழுத்துக் குலுக்கிப் புறப்படத் தூண்டினார்கள். அச்சமயத்தில் யாரும் எதிர்பாராத ஒரு சம்பவம் நிகழ்ந்தது. குதிரை மேலிருந்த மனிதனுடைய ஒரு காலை வந்தியத்தேவன் பிடித்து ஒரு எத்து எத்தித் தள்ளினான். அந்த மனிதன் தடால் என்று கீழே விழுந்தான். வந்தியத்தேவன் குதிரை மீது தாவி ஏறினான். குதிரை பறந்தது. தொடர்ந்து ஆழ்வார்க்கடியானுடைய குதிரையும் பறந்தது. கீழே விழுந்த வீரன் கூச்சலிட்டு விட்டு உறையிலிருந்த கத்தியை எடுத்து எறிந்தான். வந்தியத்தேவன் தலை குனிந்து குதிரையின் முதுகோடு ஒட்டிப் படுத்துக் கொண்டான். வீரன் எறிந்த கத்தி வேகமாகச் சென்று ஒரு மரத்தில் ஆழமாகப் பாய்ந்தது. குதிரைகள் இரண்டும் காற்றாய்ப் பறந்து சென்றன.

முன்னால் சென்ற மூன்று குதிரைகளையும் பின் தொடர்ந்து ரொம்பவும் நெருங்காமலும் ரொம்பவும் பின் தங்காமலும் இந்த இரண்டு குதிரைகளும் சென்றன. "நல்ல வேலை செய்தாய், தம்பி!" என்று ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை உற்சாகப்படுத்தினான். ஆனால் வந்தியத்தேவன் மறுமொழி ஒன்றும் கூறவில்லை. இதன் முடிவு என்ன ஆகப் போகிறதோ என்று அவன் உள்ளம் கவலையில் ஆழ்ந்திருந்தது. ஒரு பெண்ணின் வார்த்தையின் பொருட்டு எதற்காகக் கடல் கடந்து இந்தத் தூர தேசத்தில் வந்து, இத்தகைய சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டோம் என்ற சிந்தனையும் உதித்தது.

குதிரைகள் வாயுவேக மனோவேகமாய்க் குறுகிய காட்டுப் பாதையில் போய்க் கொண்டிருந்தன.

(தொடரும்)



"தமிழ் மகன்" என்ற புனை பெயரில் அமரர் கல்கி எழுதியது...

ஹிந்தி ஏகாதிபத்தியம்!

"மெள்ள மெள்ள வந்தானாம்-மிளகு என்றானாம் சுக்கு என்றானாம்" என்பதாக ஒரு பழமொழி உண்டு. "இடத்தைக் கொடுத்தால் மடத்தைப் பிடுங்கினான்" என்பதாக இன்னொரு பழமொழியும் கேட்டிருக்கிறோம்.

ஹிந்தி பாஷையைத் தேசிய பாஷையாக்கும் விஷயம் ஏறக்குறைய அம்மாதிரி நிலைமைக்கு இப்போது வந்திருக்கிறது.

அதிகார ஆசையும் ஏகாதிபத்திய வெறியும் ஒரு தேசத்தார்- ஒரு இனத்தாருக்குத்தான் உண்டு என்பது இல்லை. உலகமெங்கும் சர்வ வியாபகமாக நிறைந்திருக்கின்றன. அந்த ஆசையும் வெறியும் இப்போது வடநாட்டிலுள்ள ஹிந்தி பாஷைப் பண்டிதர்களையும் அரசியல்வாதிகளையும் பிடித்து ஆட்டுகின்றன.

ஹிந்தி பாஷை இந்தியாவின் தேசிய பாஷையாவதோடு அவர்கள் திருப்தியடையத் தயாராயில்லை.

இந்தியாவில் ஹிந்தி ஏகாதிபத்தியத்தையே நிலை நாட்டிவிடப் பிரியப்படுகிறார்கள். மற்ற பாஷைகளையும் மற்ற பாஷைக்காரர்களையும் ஹிந்தி பாஷைக்கு அடிமையாக்கிவிடவே எண்ணுகிறார்கள்.

இதை நாம் ஒப்புக் கொள்ள முடியாது. தாய் மொழிப் பற்றுள்ள யாருமே ஒப்புக் கொள்ள முடியாதுதான்.

சில நாளைக்கு முன்பு தினப்பத்திரிகைகளில் திடுக்கிடும் செய்தி ஒன்று வெளியாயிற்று. அகில இந்தியக் கல்வி மகா நாடு ஒன்று கூடியதாம். அதில் இந்தியாவின் பற்பல மாகாணங்களையும் சேர்ந்த கல்வி மந்திரிகளும் சர்வகலாசாலை வைஸ்சான்ஸ்லர்களும் வந்திருந்தார்களாம். பற்பல யோசனைகள் சொல்லப்பட்டனவாம்; பற்பல விஷயங்களைப் பற்றி விவாதித்தார்களாம்.

அந்த அபூர்வமான யோசனைகளில் ஒன்று- மகாநாட்டில் விவாதிக்கப்பட்ட விஷயங்களில் ஒன்று-இந்தியாவில் உள்ள எல்லாக் காலேஜ் வகுப்புகளிலும் எல்லா விஷயங்களையும் ஹிந்தி பாஷையில் போதிக்க வேண்டும் என்பதுதான்!

எப்படி இருக்கிறது கதை? அதாவது இத்தனை நாளும் நமது கல்வி முறையில் இங்கிலீஷ் வகித்த ஸ்தானத்தை இனி மேல் ஹிந்தி வகிக்கட்டும்!" என்கிறார்கள் ஹிந்தி ஏகாதிபத்தியவாதிகள்.

"இவ்வளவு நாளும் கழுத்தில் புல்லைக் கட்டிக் கொண்டு மென்று தின்றீர்களே! அதற்குப் பதிலாக இனிமேல் கல்லைக் கட்டிக் கொள்ளுங்கள்!" என்கிறார்கள்.

சென்னை மாகாணத்துக் கல்வி மந்திரி கனம் மாதவமேனன் மேற்படி யோசனையை எதிர்த்தாராம். "இப்படி நீங்கள் விதி செய்தால் அதை நாங்கள் மாகாணத்தில் மீறும்படியாகவே இருக்கும்" என்று எச்சரித்தாராம்.

அத்துடன் மேற்படி யோசனை

கைவிடப்பட்டதாம். ''முடிவாகக் கைவிடப்பட்டது'' என்று சொல்லுவதற்கில்லை. மறுபடியும் சந்தர்ப்பம் வரும்போது அதே யோசனையை ஹிந்தி ஏகாதிபத்தியவாதிகள் கிளப்பிக் கொண்டுதானிருப்பார்கள். மற்ற பாஷைக்காரர்கள் விழிப்புடனிருந்து அத்தகைய முயற்சிகளை எதிர்க்கும்படிதானிருக்கும்.

ஏன் இப்படிச் சொல்கிறோமென்றால், மேற்கண்ட யோசனையானது ஒரு தனிப்பட்ட நிகழ்ச்சி அல்ல; ஒரு பெரிய ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரசார திட்டத்தின் சிறிய அறிகுறியேயாகும்.

ஹிந்தி ஏகாதிபத்தியப் பிரயத்தனம் தற்சமயம் பல இடங்களில் பல உருவங்களில் தலை தூக்கித் திருவிளையாடல் புரிவதைப் பார்த்து வருகிறோம்.

காசி சர்வகலாசாலையில் முன்னெல்லாம் வெளி மாகாணங்களிலிருந்து வரும் மாணாக்கர்களுக்கு இடங் கொடுத்து வந்தார்கள். வகுப்புகளுக்குரிய தகுதியை மட்டும் கவனித்தார்கள்.

பிறகு, ஹிந்தி தெரிந்த மாணாக்கர்களை மட்டும் எடுத்துக் கொள்வோம் என்று சொன்னார்கள்.

அதற்குப் பிறகு, ஹிந்தியை நன்றாய்ப் படித்துத் தேறியவர்களையே எடுத்துக் கொள்வோம் என்றார்கள்.

இப்போது, ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களையே சேர்த்துக் கொள்வோம் என்று சொல்லத் தொடங்கியிருக்கிறார்கள்.

இன்னும் சில தினங்கள் போனால், "போன ஜன்மத்திலும் ஹிந்தியைத் தாய் பாஷையாகக் கொண்டவர்களையே எடுத்துக் கொள்வோம்!" என்று நிபந்தனை போடுவார்கள் போலும்.

இம்மாதிரி வடநாட்டுக் கல்வி ஸ்தாபனங்களில் ஏற்படும் முட்டுக்கட்டைகள் ஒருபுறமிருக்க, இந்திய சர்க்கார் உத்தியோகங்களிலும் ஹிந்தியின் ஏகாதிபத்தியம் கொடுமையுடன் ஆட்சி செலுத்தத் தொடங்கியிருக்கிறது.

எவ்வளவு நன்றாகத் தென்னிந்தியர்கள் ஹிந்தியைக் கற்றுக் கொண்டாலும் ஹிந்தியைத் தாய்பாஷையாகக் கொண்டவர்களைப் போல் அந்தப் பாஷையை லாகவமாக வழங்க முடியுமா?

ஏதோ ஆங்கிலேயர்களாவது, "இண்டியன் இங்கிலீஷ்'' என்று தங்களுக்குள் சிரித்துவிட்டு, ஏதோ காரியம் நடந்தால் சரி என்று இருந்தார்கள். ஆனால் ஹிந்தி ஏகாதிபத்திய வாதிகளோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்ற பாஷைக்காரர்களை மட்டந்தட்டவும், அதைக் காரணமாகக் கொண்டு கீழே அமுக்கி வைக்கவும் பார்க்கிறார்கள். இந்த நிலைமை கொஞ்சமும் நல்லதல்ல; நியாயமும் அல்ல.

தாய் மொழியை யன்றி வேறொரு மொழியின் உதவி நமக்கு அவசியம் என்று ஏற்படும் பட்சத்தில், ஹிந்தியைக் காட்டிலும் ஆங்கிலத்தையே நாம் ஒப்புக் கொள்ளலாம். ஆங்கிலத்தை ஒப்புக் கொள்வதில் பலன் அதிகம் உண்டு. காலேஜு வகுப்புகளில் தமிழ் மொழியில் பாடங்கள் கற்பிப்பதற்குக் காலம் வரும் வரையில் ஆங்கிலத்தில் கற்பிப்பதே உண்மையில் பயனுள்ளதாயிருக்கும்.

ஆங்கில மொழியிலுள்ள அறிவுக் களஞ்சியங்களுக்கு அளவு சொல்ல முடியாது. ஆங்கில மொழியில் உள்ள இலக்கியச் செல்வம் ஏழு சமுத்திரங்களையும் விடப் பெரியது. அந்தப் பாஷையிலேயே எழுதப்படும் நூல்களையல்லாமல் உலகில் எந்த மூலையில் எந்தப் பாஷையில் ஒரு உபயோகமுள்ள புதிய நூல் எழுதப்பட்டாலும் அது அக்கணமே ஆங்கிலத்தில் வந்து விடுகிறது.

தமிழ்நாட்டைப் பற்றிய விவரங்களைச் சொல்லும் புத்தகங்கள் தமிழில் உள்ளவற்றைக் காட்டிலும் ஆங்கிலத்தில் அதிகம் என்பது உங்களுக்குத் தெரியுமா?

எழும்பூரில் மியூஸியத்தை அடுத்துள்ள 'கனிமரா லைப்ரரி' என்று சொல்லப்படுகிற புத்தக சாலைக்குச் சென்று பாருங்கள். அதில் தமிழ்நாட்டுப் பிராணிகள், பட்சிகள், விருட்சங்கள் முதலியவற்றைக் குறித்து எழுதப்பட்டிருக்கும் ஆங்கிலப் புத்தகங்களைக் கேட்டு வாங்கிக் கொஞ்சம் புரட்டிப் பாருங்கள்.

தமிழ்நாட்டில் எத்தனைவிதமான

அமரர் கல்கி

மரங்களும் செடி கொடிகளும் இருக்கின்றன, அவற்றிற்குத் தமிழ்ப் பெயர் என்ன; தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஆங்கிலம், லத்தீன் ஆகிய மொழிப் பெயர்கள் என்ன ஆகிய விவரங்கள் அப்புத்தகங்களில் அடங்கியிருக்கின்றன. ஆகா! இத்தனை ஆயிரம் வகை மரஞ் செடி கொடிகளும் பிராணிகளும் பறவைகளும் நம் தென்னாட்டில் இருக்கின்றன என்று ஆச்சரியப்பட்டுப் போவோம். ஒவ்வொரு வகை மரஞ் செடி கொடிக்கும் இலை எப்படியிருக்கும் என்று சித்திரம் போட்டும் காட்டியிருக்கிறது.

இவ்வாறே உலகத்தில் எந்த மூலையில் எந்தப் பகுதியில் எந்தவிதமான விசேஷம் இருந்தாலும் அதைப்பற்றி ஆங்கில பாஷை மூலம் தெரிந்து கொள்ளலாம்.

ஆஸ்திரேலியா தேசத்தையடுத்த கடல்களில் எத்தனை ஆயிரம் வகை மீன்கள் இருக்கின்றன என்பதைப் படங்களுடன் விவரமாகக் கூறும் பெரிய புத்தகங்கள் ஒன்பது இருக்கின்றன.

இன்னும், ஆங்கில பாஷையில் இது வரை அச்சாகி வெளியாகியிருக்கும் புத்தகங்களைப் பற்றி ஒரு கணக்குச் சொல்லுகிறார்கள். இரண்டு (2) என்னும் இலக்கத்தைப் போடுங்கள். அதற்குப் பின்னால் இருபது பூஜ்யங்களைப் போடுங்கள். இப்படிப் போட்ட எண்ணிக்கை எவ்வளவு என்று சொல்வதற்குச் சாதனம் ஒன்றும் கிடையாது. கற்பனை செய்து பார்த்துக் கொள்ள வேண்டியதுதான்! அத்தனை புத்தகங்கள் ஆங்கில பாஷையில் வெளி வந்திருக்கின்றன! வேறொரு பாஷையின் மூலம் நமது பிள்ளைகள் காலேஜுப் படிப்புக் கற்றுக் கொள்வது என்று ஏற்பட்டால், அதற்குரிய பாஷை உலக பாஷையாகிய ஆங்கிலமேயாகும்.

ஹிந்தி பாஷையை வளர்ப்பதற்கென்று இன்றைக்கு ஆரம்பித்துப் பெரும் பிரயத்தனம் செய்தால் ஒரு வேளை இன்னும் நூறு வருஷங்களில் ஆங்கில பாஷைக்கு நிகரான அறிவுச் செல்வங்களையும் இலக்கியச் செல்வங்களையும் உண்டாக்கலாம். ஆனால் அதற்குள்ளே ஆங்கில பாஷை இன்னும் எவ்வளவு முன்னேற்றம் அடைந்திருக்குமோ தெரியாது!

நம்முடைய காலேஜுகளில் ஆங்கில மொழியை அகற்றிவிட்டுத் தமிழைக் கொண்டு வருவதென்றால், தாய்மொழி அபிமானங் காரணமாக அதை நாம் ஒப்புக் கொள்ளலாம். தமிழை வளர்ப்பதற்கு அது ஒரு சாதனமாகும் என்று எண்ணித் திருப்தியடையலாம்.

ஆனால் ஆங்கிலத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக ஹிந்தியை உபயோகிப்பது என்பது முழு மடமையேயாகும்.

இந்தியாவுக்கு ஒரு தேசிய பாஷை வேண்டும் என்பதை நாம் ஒத்துக் கொள்கிறோம். அந்தத் தேசிய பாஷை ஹிந்தி பாஷையாகத்தான் இருக்க முடியும் என்பதையும் ஒத்துக் கொள்கிறோம்.

தேசிய பாஷை எந்தெந்தக் காரியத்துக்கு அவசியமோ அந்தக் காரியங்களுக்கு மட்டுமே அதை வைத்துக் கொள்வோம். அரசியல் வாழ்க்கையில் ஈடுபடுவதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். இந்திய சர்க்காரில் உத்தியோகம் பார்ப்பதற்கு ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். வியாபாரிகளுக்கும் யாத்திரீகர்களுக்கும் ஹிந்தி தெரிந்திருக்க வேண்டும். சில சமயம் வரும் நல்ல ஹிந்தி சினிமாக்களைப் பார்ப்பதற்கும் ஹிந்தி தெரிந்திருக்கலாம். இதற்கெல்லாம் தெரிந்திருக்க வேண்டிய ஹிந்தி மிகவும் சொற்பம்.

மற்றப்படி அறிவைத் தேடுவதற்கோ இலக்கியச் சுவையை அநுபவிப்பதற்கோ பண்பாட்டை வளர்ப்பதற்கோ ஹிந்தி பாஷையினால் பயன் ஒன்றும் இல்லை.

தமிழிலும் ஸமஸ்கிருதத்திலும் உள்ளவை போன்ற பழம் பெரும் இலக்கியங்களை ஹிந்தியில் காண முடியாது.

தற்காலத்தில் வெளியாகும் சுமாரான ஹிந்தி இலக்கியங்கள் தமிழில் வெகு சீக்கிரத்திலேயே வந்து விடுகின்றன.

ஹிந்தி பாஷைக்காரர்கள் அந்தப் பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்க விரும்புகிறார்கள் என்று நாம் சொல்லுவது விளையாட்டல்ல; வெறும் பயமுறுத்தலும் அல்ல. வடநாட்டு அரசியல்வாதிகள்– ஹிந்தி பண்டிதர்களுக்கிடையே இத்தகைய ஏகாதிபத்திய வெறி வளர்ந்து வருகிறதென்பதற்குப் பல அறிகுறிகள் காணப்பட்டு வருகின்றன. வடநாட்டுக்

குச் சென்று வரும் தமிழ் நாட்டுப் பிரதிநிதிகள் பலரும், வடநாட்டில் வாழ்க்கை நடத்தி வரும் தமிழர்கள் பலரும் ஏற்கெனவே இதைப் பற்றிப் புகார் செய்து வந்திருக்கிறார்கள்.

அதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல, "காலேஜுகளில் ஹிந்தி மூலம் பாடம் போதிக்க வேண்டும்'' என்ற யோசனை வெளியாகியிருக்கிறது.

எனவே, ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சி வெறும் பூச்சாண்டி அல்ல; நமக்கு ஏற்பட்டுள்ள உண்மையான அபாயம் என்றே முடிவு கட்ட வேண்டியிருக்கிறது.

தமிழ்நாட்டில் ஒரு கூட்டத்தார் சில காலத்துக்கு முன்பு "ஹிந்தி ஒழிக!" என்ற கூச்சலைக் கிளப்பினார்கள். இந்தக் குறுகிய துவேஷ மனப்பான்மை கொண்ட கூச்சலைத் தமிழ்ப் பெருமக்கள் எதிர்த்து ஒழித்துக் கட்டினார்கள்.

அதுபோலவே ஹிந்தி பாஷையின் ஏகாதிபத்தியத்தை ஸ்தாபிக்கும் முயற்சியையும் தமிழ்ப் பெருமக்கள் எதிர்த்து ஒழிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

"இந்தியாவின் தேசிய பாஷையாக ஹிந்தியைக் கொள்ளுங்கள்'' என்று காந்தி மகாத்மா கூறிய உபதேசத்தை நாம் என்றும் சிரமேற்கொண்டு நடக்கச் சித்தமாயிருக்கிறோம்.

அதே மாதிரி, "தாய் மொழியைப் போற்றி வளருங்கள்'' என்று காந்தி மகான் அருளிய உபதேசத்தையும் நமது இதயத்தில் பதித்து வைத்துக் கொண்டு அதன் படியே நடப்போம்.

(கல்கி, மே 7, 1950)

ஓ! அன்னபூரணி!

(சென்னை மாகாணத்தில் எட்டு அவுன்ஸ் அரிசியில் ஒரு அவுன்ஸ் குறைத்து இனி ஏழு அவுன்ஸ் அரிசி கொடுக்கப்படும் என்று சென்னை சர்க்கார் தெரிவித்திருக்கிறார்கள். குறைக்கப் போகிறது எட்டில் ஒன்றுதான். ஆயினும் அநேகம் பேர் இப்போதே வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொள்கிறார்கள். பிரச்னை இவ்வளவு முக்கியமானதாயிருப்பதால் இதைப் பற்றி இந்தியா தேசத்தின் பல பிரமுகர்களுடைய அபிப்பிராயங்களையும் திரட்டிக் கீழே வெளியிடுகிறோம்.)



பிரதம மந்திரி ஜவாஹர்லால்: இந்த நூற்றாண்டின் முக்கியமான பிரச்னை ஆசியா கண் விழித்திருப்பதுதான். அதிலும் கிழக்காசியப் பிரதேசங்கள் வரப் போகும் யுத்தத்தில் மிக முக்கியம் பெற்று விளங்கும் என்பதில் சந்தேகமில்லை. கிழக்கு ஆசியப் பிரதேசங்களில் முக்கியமான உணவுப் பொருள் அரிசி. ஆகையால் நம்முடைய கிழக்காசிய நாட்டுச் சகோதரர்களை உத்தேசித்து நாம் எந்தவிதத் தியாகமும் செய்யப் பின்வாங்கக் கூடாது. எட்டு அவுன்ஸ் அரிசியில் ஒரு அவுன்ஸ் குறைத்தது பிரமாதம் அல்ல. எட்டு அவுன்ஸ் அரிசியில் ஒன்பது அவுன்ஸ் அரிசியைக் குறைத்தாலும் நாம் அந்தத் தியாகத்துக்குத் தயாராயிருக்க வேண்டும். எட்டு அவுன்ஸில் ஒன்பது அவுன்ஸை எப்படிக் குறைக்க முடியும் என்றா கேட்கிறீர்கள்? நல்ல கேள்வி. மனமிருந்தால் எல்லாம் முடியும்! சுதந்திர

இந்தியாவில் நாம் நம்முடைய கடமையை 100க்கு 105 பங்கு செய்வது என்று தீர்மானித்துக் கொண்டோமானால் எட்டு அவுன்ஸ் அரிசியில் ஒன்பது அவுன்ஸ் அரிசியைக் குறைத்துக் கொள்வதுதானா பிரமாதம்? நான் இந்தியா திரும்பி வந்ததும் 'பிளானிங் கமிஷன்' வேலை ஆரம்பிக்கப்படும். 'பிளானிங் கமிஷன்' மட்டும் வேலை செய்யத் தொடங்கி விட்டால் இம்மாதிரியான எல்லாப் பிரச்னைகளையும் ஒரேயடியாகத் தீர்த்து விடலாம்!



சர்தார் வல்லபாய் படேல்:- இந்தியாவின் அறுநூற்றுச் சொச்சம் சுதேச மன்னர்களின் தியாகங்களை எண்ணிப் பாருங்கள். அவர்கள் எவ்வளவு விஸ்தாரமான ராஜ்யங்கள், அதிகாரங்கள், பொங்கிஷங்கள், அந்தப்புரங்கள், பட்டத்து யானைகள், பந்தயக் குதிரைகள் எல்லாவற்றையும் தியாகம் செய்திருக்கிறார்கள்? அவர்களுடைய தியாகத்தை நினைக்க ரோமாஞ்சலி உண்டாகிறது!

அப்படியிருக்க,ஒரு அவுன்ஸ் அரிசியைத் தியாகம் செய்வது ஒரு பெரிய காரியமா! மேலும் சென்னை மாகாணத்தில் உங்கள் காங்கிரஸ் தலைவர்கள் போடும் சண்டைகள் சகிக்க முடியவில்லை. எத்தனை சமரசம் செய்து வைத்தாலும் மறுபடியும் பொத்துக் கொண்டு சண்டை மூண்டு விடுகிறது. அடிக்கடி என் பிராணனை வந்து வாங்குகிறார்கள். ஒரு அவுன்ஸ் அரிசி குறைந்தாலாவது கொஞ்சம் புத்தி வந்து சண்டை போடாமல் இருப்பார்களா என்று பார்க்கலாம். அவ்வளவு தான், கப்சிப்! கபர்தார்!

உணவு மந்திரி கே.எம். முன்ஷி:- நான் இந்திய அரசாங்கத்தின் உணவு மந்திரியாயிருக்கும் வரையில் யாரும் எதற்காகவும் கவலைப்பட வேண்டியதில்லை. ஒரு அவுன்ஸ் அரிசிக்குப் பதிலாக இரண்டு அவுன்ஸ் பழமும் மூன்று அவுன்ஸ் கறிகாய் கிழங்குகளும் உற்பத்தி செய்து கொள்ள உடனே முயற்சி தொடங்குங்கள். ஜூலை முதல் வாரத்தில் மொத்தம் ஒரு கோடியே இருபத்தைந்து லட்சம் பழ மரங்களை நடுங்கள். அத்துடன் பத்து கோடியே முப்பது லட்சம் நெல்லுக் காய்ச்சி மரங்களையும் நடுங்கள். அரிசியை மறந்து ஆடுங்கள்; பாடுங்கள்! வன மகோத்ஸவம் கொண்டாடுங்கள்!

குடியரசுத் தலைவர் பாபு ராஜேந்திர பிரஸாத்:- காந்தி மகாத்மாவின் ஆவி நம்மை ஆட்கொள்ளட்டும். அனைவரும் சர்வோதய சமாஜத்தில் அங்கத்தினராகச் சேருங்கள். ஒரு அவுன்ஸ் அரிசி குறைந்ததற்குப் பதிலாக மற்ற ஏழு அவுன்ஸ் அரிசியைத் தவிட்டோடும் உமியோடும் சேர்த்துச் சாப்பிடுங்கள். தவிடும் உமியும் தின்னும் மாடுகள் எவ்வளவு செழிப்பாயிருக்கின்றன? அவற்றுக்கு இருமல், சுரம், ஆஸ்த்மா, மார்ச்சளி ஏதாவது வருவதுண்டா? தவிடும் உமியும் இல்லாத அரிசியை மட்டும் வேக வைத்துச் சாப்பிடும் மனிதர்கள் எவ்வளவு துர்ப்பலமாயிருக்கிறார்கள்! காந்தியடிகளின் திருவடிகளே சரணம்! வாழ்க வர்தாவின் ஜோதி! ஜே ஹிந்த்!

மேற்கு வங்காள முதன் மந்திரி டாக்டர் பிதன் சந்திர ராய்:- ஒரு அவுன்ஸ் அரிசி குறைந்ததற்காக மதராஸிகள் இவ்வளவு தடபுடல் படுத்துவது எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்குகிறது. வங்காளத்தில் நாங்கள் சில சமயம் தினம் நாலு அவுன்ஸ் அரிசியுடன், இரண்டு பவுண்டு ரஸகுல்லாவும், மூன்று பவுண்டு மீனும் மட்டும் சாப்பிட்டு விட்டு வயிற்றைக் கட்டி வாழ்ந்து வந்திருக்கிறோம். அடேயப்பா! ஏழு அவுன்ஸ் அரிசி போதாது என்கிறீர்களே? கிழக்கு வங்காள அகதிகளின் மீது கருணை வைத்து அதில் இரண்டு அவுன்ஸ் அரிசியை எங்களுக்கு அனுப்பி வையுங்கள்.

மாஜி முதன் மந்திரி ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார்:- தேசத்தில் பாபகிருத்யங்கள் அதிகமாகிப் போய் விட்டன. ஆகையினாலே மழை பெய்யவில்லை என்று நான் அப்பொழுதே எச்சரிக்கை செய்தேன். யாரும் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆகையினாலே இன்றைக்கு இந்தக் கதி நேர்ந்திருக்கிறது. சர்க்கார் இலாகாக்களில் ஊழல்கள் அதிகமாகி விட்டன. முக்கியமாக விவசாய இலாகா குட்டிச் சுவராய்ப் போய்க் கொண்டிருக்கிறது என்று எடுத்துக் காட்டினேன். அதையும் அப்போது யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. ஆகையினாலே இன்றைக்கு எல்லாரும் கஷ்டப்பட வேண்டியதுதான். நான் சென்னை முதன் மந்திரியாயிருந்தபோது இந்த மாகாணத்தில் ஐந்து லட்சம் கிணறுகள் கட்டுவதற்குத் திட்டம் போட்டிருந்தேன். அந்தத் திட்டத்தைச் சிவப்பு நாடாவில் கட்டிப் போட்டு விட்டார்கள். ஆகையினாலே இன்றைக்கு முட்டிக் கொள்கிறார்கள். நன்றாய் முட்டிக் கொள்ளட்டும். விதியை வெல்ல யாரால் முடியும்? ஆகையினாலே...

காங்கிரஸ் அக்கிராசனர் டாக்டர் பட்டாபி சீதாராமய்யா:- எத்தனையோ பேர் காங்கிரஸ் அக்கிராசனர்களாக இருந்திருக்கிறார்கள். நானுந்தான் காங்கிரஸ் அக்கிராசனர் பதவி வகிக்கிறேன். வகித்து என்ன பிரயோஜனம்? யார் வந்து என்னிடம் யோசனை கேட்கிறார்கள்? மற்றவர்கள்தான் ஒன்றும் கேட்கிறதில்லையென்றால், சென்னை மந்திரிகளாவது கேட்கக் கூடாதா? வேறு ஒன்றும் கேட்காவிட்டாலும் அரிசி ரேஷனைக் குறைக்கிற விஷயமாகவாவது என்னிடம் யோசனை கேட்கக் கூடாதா? கேட்டிருந்தால், இப்போது ஒரு அவுன்ஸூம் இன்னும் கொஞ்ச நாள் கழித்து இன்னொரு அவுன்ஸூம் குறைப்பதற்குப் பதிலாக ஓரேயடியாய் மூன்று அவுன்ஸ் குறைத்துவிடுங்கள் என்று சொல்லியிருப்பேன். 1923-ம் வருஷத்தில் காக்கினாடா காங்கிரஸில் மௌலானா முகம்மது அலி அக்கிராசனப் பிரசங்கம் செய்து கொண்டிருந்த போது, நான் பக்கத்திலிருந்தவரிடம் என்ன சொன்னேன் தெரியுமா? இவர் எந்தக் கடையில் அரிசி வாங்கிச் சாப்பிடுகிறார் என்று கேட்டேன். அதே கேள்வியை இன்றைக்கு நம் முதன் மந்திரி குமாரஸ்வாமி ராஜா விஷயத்தில் கேட்க வேண்டியதாயிருக்கிறது!

ஸ்ரீ ராமகிருஷ்ண டால்மியா:- இந்த உலகத்தையே காப்பாற்றுவதற்கு நான் ஏற்பாடு செய்து கொண்டிருக்கும் போது, கேவலம் ஒரு அவுன்ஸ் அரிசி விஷயத்தைப் பற்றி என்னிடம் வந்து கேட்பது ஆச்சரியமாயிருக்கிறது! எனக்கும் என் கம்பெனிகளுக்கும் என் பந்துக்களுக்கும் எட்டு வருஷத்துக்கு வருமான வரி இல்லை என்று சொல்லி விட்டால், உங்களுடைய ஒரு அவுன்ஸ் அரிசிப் பிரச்னையை அந்த க்ஷணமே நான் தீர்த்து வைத்து விடுவேன். என் ஒருவனால்தான் அது முடியும். வேறு யாராலும் முடியாது. சர்தார் வல்லபாய் படேலினால்கூட முடியாது. அரிசி போதவில்லை என்று சொல்லுகிறவர்கள் ஒவ்வொருவருடைய வாயிலும் ஒரு அவுன்ஸ் சிமெண்டைப் போட்டு இரண்டு அவுன்ஸ் தண்ணீரை விட்டுவிட வேண்டியது. அப்புறம் அவர்கள் ஏன் அரிசி கேட்கப் போகிறார்கள்?

(கல்கி, ஜூன் 25, 1950 இதழில் அமரர் கல்கி எழுதியது)

கல்கி
கலெக்ஷன்

பொன்னம்மாள் பொல்லாதவள்



பொன்னம்மாள் ரொம்பப் பொல்லாதவள் – அவள்
பொய் என்ற வார்த்தையே சொல்லாதவள்
சொன்னதைச் சொல்லும் கிளியினைப் போல் – என்றும்
சொன்னதையே அவள் சொல்லிடுவாள்!

மன்னர் குலம் தந்த கன்னியவள் – இந்த
மாநிலத்தில் நிகர் இல்லாதவள்
அன்னம் அவள் நடை அழகு கண்டால் – அது
அக்கணமே தலை கவிழ்ந்திடுமே!

பாடும் குயில் அவள் குரல் கேட்டால் – அது
பாட்டை மறந்து பறந்திடுமே!
மாடும் மரங்களும் – அவளுடைய – உயர்
மாட்சிமைக்கு வலம் வந்திடுமே!


கூந்தல் முடிப்பிலே சொகுசுடையாள் – விழிக்
கோணத்திலே குறு நகையுடையாள் – அவள்
மாந்தளிர் மேனியைக் கண்டவர்கள் – அந்த
மாமரம் போலவே நின்றிடுவர்!

கற்பக மலர்களோ அவள் கரங்கள் – அந்தக்
கண்களில்தான் என்ன மந்திரமோ?
அற்புதமோ ஒரு சொப்பனமோ? – இங்கு
ஆர் அறிவார் அவள் நீர்மையெல்லாம்!

பொன்னம்மாள் மிகப் பொல்லாதவள் – அவள்
பொய் சொல்லக் கொஞ்சமும் அஞ்சாதவள்
அன்னம் படைக்கவே வந்திடுவாள் – எனில்
அமுது படைத்து மகிழ்ந்திடுவாள்!

ஆனதால் என் அரும் தோழர்களே – நீங்கள்
அவளை மணந்திட வந்திடாதீர்!
ஏனென்று கேளுங்கள் இயம்பிடுவேன் – இங்கு
யானே அவளை மணந்து கொண்டேன்.

– 'சோலைமலை இளவரசி'யில்
அமரர் கல்கி எழுதியது



ஸ்ரீ சாரதா சக்தி பீடம்

16, காமராஜ் சாலை, பழைய பெருங்களத்தூர்,
சென்னை- 600 063. தொலைபேசி : 2376129



ஏழை மாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! . வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 50 மாணவர்களும் 20 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

காலை சிற்றுண்டி (70 பேருக்கு)	ரூ.	500/-
மதிய உணவு (இனிப்புடன்)	ரூ.	1,000/-
இரவு சிற்றுண்டி	ரூ.	750/-
இனிப்பு மற்றும் பால் வழங்குதல்	ரூ.	300/-
ஒரு மாணவனுக்கு ஓராண்டிற்கு கல்வி உதவித் தொகை	ரூ.	1,000/-
ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு (உணவு, உடை, கல்வி)	ரூ.	6,000/-
குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு	ரூ.	40,000/-

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

வருமான வரி விலக்கு (Section 80 G) உண்டு

ADCHOICE



• போக்ரானில் குண்டு வெடிக்கப்பட்ட இடம்...

மூன்று வாரங்களில் 15 ஷூட் அவுட்டுகள்; இந்த வருடத்தின் 95வது கொலையான, யாரி ரோட் பில்டர் ஸொஹைல் ஹுசைனின் பட்டப் பகல் படுகொலை, காவல் துறையை பல் பிடுங்கிய பம்பாய் பரிகசிக்க, வெலவெலத்துப் போன அரசுக்கு நிலைமையை சமாளிக்க ஏதாவது செய்ய வேண்டியிருந்தது. கிரிமினல் குழுக்களுக்கு முடிவுகட்ட 'மினி தடா'வை அறிமுகப்படுத்தப் போவதாக மிரட்டியது. லைசென்ஸ் இல்லாமல் கொலைக் கருவிகளை வைத்திருப்பவர்கள், கணக்கில்லாமல் சொத்தை அபகரித்திருப்பவர்கள் எல்லோரையும் வளைத்துப் போடும் சாதனமாக மினி தடாவை உருவமைக்கப் பார்த்தது அரசு. அப்பம் வடை சுடுவது போல் ஆட்களைச் சுட்டுவிட்டு, காலார நடந்து பஸ் பிடித்து வீட்டுக்குச் செல்லும் 'குளிர்விட்ட' கிரிமினல்களுக்கு, கொஞ்சமாவது ஜுரத்தை கொடுக்க இது பயன்படும் என, தொடர் கொலைகளால் வெறுத்துப் போன காவல்துறை சந்தோஷித்தது. ஆனால் 'தடா' என்றாலே, ஜட்ஜிலிருந்து ஜடாமுடி தரித்தவர் வரை 'தடால்' என்று விழுந்துவிடுகிறார்களே? 'மினி தடா' என்றால் அப்பாவிகளை 'பலிகடா'வாக்கும் மினி லைசன்சாக நினைத்து நடுங்குகிறார்கள்! 'மினி தடா' என்ற பெயருக்குப் பதிலாய், மக்களுக்குப் பிடித்த பெயராய் ஏதாவது வைக்கலாம் எனச் சிலர் சொல்லி வருகிறார்கள். (ஹௌ எபவுட் "பொடேடோ வடா?" 'பாவ் வடா?')

"வியாச"ர் விருந்தா?

சட்ட வட்டாரங்களில் நல்ல பெயரெடுத்த நீதிபதிகளான ஒய்.எஸ். ஜாஹிர்தாரும், ஏ.எஸ். சாகரேவும் திடீரென்று மும்பை உயர் நீதிமன்றத்திலிருந்து ராஜினாமா செய்திருப்பது, சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. சகன் புஜ்பலுக்கு, மெல்ல, வெல்ல அவலே கிடைத்திருக்கிறது! முதல்வர் மனோகர் ஜோஷியின் மாப்பிள்ளையான கிரிஷ் வியாஸ், சந்தேகப்படும்படியான முறையில் நில புலன்களை வாங்கி ஹவுஸிங் காம்ப்ளெக்ஸ் உருவாக்கும் முயற்சிக்கு எதிராகப் போடப்பட்டிருக்கும் வழக்கு, விசாரணைக்கு வருவதற்கும், ஜாஹிர்தார் ராஜினாமாச் செய்திருப்பதற்கும் ஏதோ சம்பந்தமிருப்பதாக முடிச்சுப் போட்டிருக்கிறார். நீதிபதி என்னவோ சொந்தக் காரணங்களுக்காக ராஜினாமா செய்வதாகச் சொல்லியிருந்தாலும், புஜ்பல் இன்னும் சில சொந்த பந்தங்களைப் புகுத்தி சுவையான "வியாசர்" விருந்து படைப்பார் என எதிர்பார்க்கலாம்!

கண்ணீர் விட்டா வளர்த்தோம்?

வெங்காயத்தை "மலரும் நினைவு"களில் நினைத்துக் கண்ணீர் சிந்துகின்றனர் மும்பை வாசிகள். எதிர்க் கட்சித் தலைவரான சகன் புஜ்பலும், தீபாவளி அன்பளிப்பாக, சி.எம். முக்கும், மேயருக்கும், ஆளுக்கொரு பெட்டி வெங்காயத்தை "ஸிம்பாலிக்"காக அனுப்பிப் பார்த்தார். ஊஹூம்! வெங்காயத்தைக் கண்ட மாத்திரத்தில் (ஆனந்த) கண்ணீர்த் துளிகள் இறங்கினவோ என்னவோ! விலை இறங்கவில்லை; இத்தனைக்கும், மகாராஷ்ட்ராவின் 'வெங்காய விளை பூமி'யான "லஸல்காவ்"வில் விவசாயிகள் சுதாரித்துக் கொண்டு விட்டனர்;

மும்பை மசாலா

தற்சமயம் நிறையவே உற்பத்தியாகிறதாம். ஆனால், எங்கள் வெங்காய வில்லன் மத்திய அரசுதான்! முதலில் ஒரு 30,000 டன்களை போக்ரன் (!) பரிசோதனைக்கென்று (ஏதோ ரேடியேஷன் விஷயமாம்) வாங்கியதாம்; அடுத்தது, மொத்தமாக வாங்கி, மத்தியிலிருந்து விநியோகிக்கும்போது, ராஜஸ்தானத்துக்கும், மத்திய பிரதேசத்துக்கும் அள்ளி விட்டிருக்கிறதாம்; மராத்திய வெங்காயம் தமிழகத்தில் கிலோ 16 ரூபாயில் கிடைக்க, மும்பையில் 32 ரூபாய்க்கு விற்றால் எப்படி? பார்த்தார் பிரதீப் பாவனானி – மும்பை இளைஞர் சங்கத்தைச் சார்ந்த இந்த முலுண்ட் வாசி, நேராக லஸல்காவுக்கே சென்று, கிலோ 4 ரூ. என்று 5 ட்ரக்குகள் வெங்காயத்தை ஏற்றி வந்து, முலுண்டில் தீபாவளி சமயத்தில் கிலோ 5 ரூ. என விற்று அசத்தினார். அங்கே கிலோ 15 ரூ. விற்ற 'எக்ஸ்போர்ட் க்வாலிடி' வகைகளை நாம் கண்ணால் கூடக் கண்டதில்லை என்றொரு வெங்காய வெடியையும் போனஸாக வழங்கினார்!

அண்ணே, அண்ணே, காவ்லி அண்ணே!

பாய்தூஜ் – மராத்தியர்களின் ரக்ஷா பந்தன்; தீபாவளியை ஒட்டி வரும்; இந்தத் திருநாளன்று, சகோதரர்கள், சகோதரிகளுக்கு அன்புப் பரிசு கொடுப்பது வழக்கம். (அல்லது, 'கம்பல்சரி'!) இம்முறை, தலைவனை இழந்த போலீசார் குடும்பங்களுக்கு பிரத்யேக அழைப்பு விடுத்து, அருண்காவ்லி, ஸ்பெஷல் 'பாய்தூஜ்' கொண்டாடினார். "போனால் தெரியும்" என்ற, பெரிசுகளின் மிரட்டலையும் மீறி, ரத்னபிரபா, வசந்தி என்ற இரு பெண்கள் சென்றிருக்கிறார்கள். அருமைச் சகோதரிகளின் நிலை கண்டு இரங்கி, ஆளுக்கொரு லட்சத்துக்கு 'செக்' கொடுத்திருக்கிறார் அன்பு அண்ணன் காவ்லி! இந்தப் பண்டிகைக்கு, 'பாய் தூஜ்' என்ற பெயர்ப் பொருத்தம் அப்படியே "சிலிர்க்க" வைக்கிறது. மும்பை வட்டாரங்களில் அண்டர்வர்ல்ட் டான்களின் செல்லப் பெயர் "பாய்"!

போக்ரன் குண்டு வெடிப்பும் வெங்காய விலையேற்றமும்!



சூப்பர் ஃப்ளாப் ஹீரோ!

'சூப்பர் ஹிட்' ஹீரோக்கள்

இங்கே 'ஊற்றிக் கொள்ளும்' பாலிவுட் மசாலாக்கள் யு.கே., யு.எஸ்ஸில் ஓஹோ என்று ஓடுவது வழக்கமாகி விட்டது. இந்த வகையில் 'தில்ஸே'வைத் தொடர்ந்து இப்போது 'படே மியா சோடே மியா'. அமிதாப் தொடர்ச்சியாக வழங்கி வரும் 'சூப்பர் ஃப்ளாப்பு'களில் இது லேடஸ்ட்! இருந்தாலும் அந்நிய மண்ணின் அமிதாப் அபிமானிகள் அவரை, "சூப்பர் ஹிட்" ஹீரோ பதவியிலிருந்து இறக்கத் தயாராக இல்லை; பர்மிங்ஹாமில் இது திரையிடப்பட்டபோது, 'ஹவுஸ் ஃபுல்' போர்டை மாட்ட வைத்த கையுடன், அமிதாப்பின் தரிசனத்துக்காக மணிக் கணக்கில் கால் கடுக்க நின்றிருக்கிறார்கள். மிக லேட்டாக வந்துவிட்டு, இவர்களைக் கண்டு கொள்ளாமல் சென்ற அமிதாப்பின் கார் மீது முட்டை, பாட்டில், கல் எல்லாம் வீசி, அவரை 'சூப்பர் ஹிட்' டாக்கியிருக்கிறார்கள். இதே ஸ்டைலில், ஜோத்பூரில் சக்கை போடு போட்டுக் கொண்டிருந்த சல்மான் கானின் 'ப்யார் கியா தோ டர்னா கியா?'வும், 'பந்தனும்' ஹிட்லிஸ்டில் இடம் பெற்று விட்டன! மான் விஷயம் சல்மானை ஓட ஓட விரட்டிக் கொண்டிருக்கிறது!

— ஜெயஸ்ரீ ராஜ்



வராந்தா முழுவதும் விரக்தியான முகங்கள். ''மக்கள் குறைதீர்க்கும் நாள்''. வெள்ளை நிறப் பின்னணியில் நீலவர்ண எழுத்துக்களோடு பேனர் காற்றில் நெளிந்தது. எல்லோருமே கலெக்டரிடம் கொடுப்பதற்காகக் கையில் மனு வைத்திருந்தார்கள்.

'....உயர்திரு கலெக்டர் சமூகம் அவர்களுக்கு எனது கணவரும், மாமியாரும் வரதட்சணை கேட்டுப் பல நாட்களாகத் துன்புறுத்தி வருகிறார்கள்....'

'....அய்யா, நான் ஒரு ஆதரவற்ற ஏழைப் பெண். உடல்நலமில்லாத எனது தாயாரையும், ஊனமுற்ற தங்கையையும் காப்பாற்ற வேண்டிய நிலையில் உள்ளேன். அரசாங்கத்திடமிருந்து ஒரு தையல் இயந்திரம் பெற்றுத் தந்தால்....'



போட்டிக் கதை – 10

'....அய்யா, நான் வசிக்கும் அம்பேத்கர் நகர்ப் பகுதியில் கடந்த வாரம் ஏற்பட்ட தீ விபத்தில் எனது குடிசை முழுவதுமாய் எரிந்து நாசமாகி விட்டது. வீடிழந்து குடும்பத்துடன் தெருவில் நிற்கும் எனக்கு கலெக்டர் அய்யா அவர்கள் ஆவன செய்யுமாறு...'

அந்தக் கும்பலில் சற்றே தேஜஸாய்த் தெரிந்தார் சண்முகசுந்தரம். வயது அறுபத்தைந்து. அதிகாலை யோகாப்பியாசம், பத்து வருடங்களை ஒளித்து வைத்துக் கொண்டு அவரை ஐம்பத்தைந்து வயதுக்காரர் போலக் காட்டியது. சூரியனில் முக்கி சாயம் போட்டது மாதிரி பளீர் என்று கதர் சட்டையும், வேட்டியும் அணிந்திருந்தார்.

''சண்முகசுந்தரம்... சண்முகசுந்தரம்...''

பியூன் சப்தமிட்டதும் அவசரமாய் எழுந்தார். கதவை நெருங்குவதற்குள் இன்னொரு முறை இரைந்தான்.

''வேகமா உள்ளே போய்யா. கலெக்டர் முந்நூறு பேரைப் பார்த்து முடிக்கணும்...''

சண்முகசுந்தரத்துக்குள் கருக்கென்று கோபம் ஜனித்தது. அதைக் காட்ட அவகாசமில்லாமல் கலெக்டரின் அறைக்குள் நுழைந்தார்.



கைகூப்பியவரை



சத்யராஜ்குமார்

சுயநல மனோரதங்கள்

ஏற இறங்கப் பார்த்த இளம் வயது கலெக்டர், "ம், சொல்லுங்க," என்றார்.

"எம் பேர் சண்முககந்தரம். சுதந்தரப் போராட்டத்தில் தீவிரமா ஈடுபட்டவன். தண்டி யாத்திரை, க்விட் இண்டியா மூவ்மென்ட் எல்லாத்திலும் முன்னுக்கு நின்னு வேலை செஞ்சிருக்கேன். காந்திஜியோட அதிதீவிரமான ஃபாலோயர். எனக்குள்ளே இளரத்தம் ஓடினப்ப வெள்ளைக்காரனைப் பார்த்துக் கொதிச்சுக் கொதிச்சு போராட்டத்தில் குதிச்சேன். என்னைப் போல லட்சம் பேர். அதுக்குப் பலனா சுதந்தரம் கிடைச்சது. ஆனா, இன்னமும் ரத்தம் கொதிக்கறது மட்டும் நிக்கலை. பாம்பு வாயிலிருந்து மீட்டு முதலை வாயில் கொடுத்த கதைதான் நடந்திருக்கு."

கலெக்டர் அவரை அசுவாரஸ்யமாய்ப் பார்த்தார். "என்ன பிரச்னை? தியாகிகள் பென்ஷன் சரியா கிடைக்கறதில்லையா?"

"தியாகிகள் பென்ஷன் வேண்டாம்ன்னு எழுதிக் கொடுத்துட்டேன். சின்னதா கதர்க் கடை வெச்சிருக்கேன். என்னோட செலவுகளைத் தாக்குப்பிடிக்கற அளவுக்கு வருமானம் இருக்கு. முடியாத



[illegible]களுக்குப் போய்ச் சேரட்டுமேன்னு பென்ஷன் வேண்டாம்ன்னு எழுதிக் கொடுத்துட்டேன்."

"உங்களோட குறை என்ன? அதைச் சொல்லுங்க."

"தனிப்பட்ட முறையில் எனக்குள்ள குறைகளைத் தீர்த்து வையுங்கன்னு கேட்டு நான் வரலை கலெக்டர் ஸார். ஒரு பொதுப் பிரச்னையை உங்க முன்னால எடுத்து வைக்க வந்திருக்கேன்."

"பீடிகை எதுவும் போட வேண்டாம். நேரடியா விஷயத்துக்கு வாங்க. வெளியே உங்களைப் போல இன்னும் எத்தனையோ பேர் காத்திருக்காங்க."



ஒரு வறண்ட புன்னகையோடு சொன்னார் சண்முககந்தரம்.

"நான் அந்த ஏழை ஜனங்ககிட்டே பேசிப் பார்த்தேன். தனிப்பட்ட முறையில் எல்லார்க்கும் வேற வேற பிரச்னைகள் போலத் தோணினாலும் அடிப்படையில் அத்தனை பேருக்கும் ஒரே ஒரு பிரச்னைதான் கலெக்டர் ஸார். தினமும் குடிச்சிட்டு வந்து புருஷன் கொடுமைப்படுத்தறான்... குடி போதையில் சிம்னி விளக்கைத் தட்டிவிட்டு ஒரு குடிசைப்பகுதி முழுவதுமே எரிஞ்சு நாசமாயிடுச்சு.... குடும்பத்தைக் காப்பாத்த வேண்டியவன் குடிச்சுக் குடிச்சு குடல் வெந்து அல்பாயுசில் கண்ணை மூடிட்டான், அவனோட பதினாறு வயசுப் பொண்ணு குடும்ப பாரத்தைத் தோளில் சுமந்துக்கிட்டு கவர்மெண்ட் தையல் மெஷின் வாங்கித் தருமான்னு எதிர் பார்த்து நிக்குது... சுதந்தரம் கிடைச்சதும் அரசியல்வாதிகள் செஞ்ச சாதனை, காந்திஜியோட கொள்கைகளை முடிஞ்



சளவுக்குக் காத்தில் பறக்க விட்டதுதான். யோசிச்சுப் பாருங்க. தெருவுக்குத் தெரு திறந்து விட்டிருக்கற மதுக்கடைகள் மட்டும் இல்லைன்னா உங்க அறைக்கு வெளியே நிக்கற கும்பலில் பாதிப் பேர் இங்கிருக்க மாட்டாங்க.''

கலெக்டர், சண்முகசுந்தரத்தை அலட்சியமாய்ப் பார்த்தபடி வாக்கியங்களை அடுக்கினார். "பெரியவரே, நீங்க சொல்றதெல்லாம் சரிதான். இப்போ ஜனத் தொகை மிதமிஞ்சிப் போச்சு. அரசாங்கத்தில் செலவு கட்டுக்கடங்காமப் போயிட்டிருக்கு. கவர்மெண்ட்டுக்குப் பெரிய வருமானமே மதுக்கடைகள் மூலமாத்தான் வருது. இதையெல்லாம் ஒண்ணும் செய்ய முடியாது. மதுக்கடைகளை மூடறதுங்கறது இன்னிக்கு தேதியில் சாத்தியமில்லாத விஷயம். உங்களுக்குச் சொந்தப் பிரச்னை ஏதாவது இருந்தாச் சொல்லுங்க. முடிஞ்சாத் தீர்த்து வெக்கறேன். இதுக்காகவெல்லாம் வேலை மெனக்கெட்டு வராதீங்க. உங்க நேரமும் வேஸ்ட். என் நேரமும் வேஸ்ட். கதர்க் கடைல வியாபாரத்தைக் கவனிச்சிங்கன்னா நாலு காசு கைக்கு வரும்.''

சண்முகசுந்தரம் ஆழமான பார்வையில் அவரை வாங்கிக் கொண்டு சொன்னார்.

"பிரச்னையை நான் இன்னும் சொல்லவே இல்லை. நீங்களா அனுமானிச்சிட்டுப் பேசினா எப்படி? தொழில்துறை மூலமா வருமானத்தைப் பெருக்கத் தெரியாத உதவாக்கரை அரசாங்கங்கள் சாராயக் கடைகளை ஒரு நாளும் மூடப் போறதில்லைன்னு எனக்குத் தெரியாதா? தவிர உங்களோட அதிகார வரம்பு என்னன்னும் எனக்குத் தெரியும். உங்க வரம்புக்கு உட்பட்ட ஒரு கோரிக்கையோட வந்திருக்கேன்.''

"என்ன கோரிக்கை?''

"மார்க்கெட் ரோட்டில் போன வாரம் டி.எஸ்.பி. தலைமையில் கோலாகலமா திறந்து வெச்சாங்களே 'பவுன் ஒயின்ஸ்'ங்கற மதுக்கடை! அந்தக் கடையை உடனடியா மூடறதுக்கு நீங்க உத்தரவு போடணும்.''

"ஏன்?''

"காந்தி சிலைக்கு நேர் எதிரே அந்தக் கடையைத் திறந்திருக்காங்க. காந்திஜி முன்னிலையில்தான் அமோகமான வியாபாரம். அத்தனை குடிகாரன்களும் மூக்கு முட்டக் குடிச்சிட்டு, அந்த தேசப் பிதாவின் காலடியில்தான் விழுந்து புரள்றாங்க. மகாத்மாவுக்கு இதை விடப் பெரிய அவமானம் ஏதாவது இருக்க முடியுமா கலெக்டர் ஸார்?''

கலெக்டர் திகைப்பில் உறைந்து போய் உட்கார்ந்திருக்க, சண்முகசுந்தரம் தொடர்ந்தார்.

"சிலை வெக்கறதோடவும், வருஷம் ஒரு முறை மாலை போடறதோடவும் கடமை முடிஞ்சதா? அதைப் பாதுகாக்கிற பொறுப்பு நமக்கில்லையா? ஒரு தேசத் தலைவருக்கு சிலை வெச்சு மரியாதை செய்யலைன்னாலும் பரவாயில்லை. குறைஞ்சபட்சம் அவமரியாதை செய்யாமலாவது இருக்கக் கூடாதா?''

இன்டர்காமில் பி.ஏ.வைக் கூப்பிட்டார் கலெக்டர்.

கலெக்டர் கேட்டார் : "மார்க்கெட் ரோட்டில் உள்ள பவுன் ஒயின்ஸ் யாரோடது?''

"அருள்மொழியோடது ஸார்.''

சில விநாடிகளை யோசனைக்குக் கொடுத்த கலெக்டர், சண்முகசுந்தரத்தை ஏறிட்டார். "மனுவைத் தந்துட்டுப் போங்க. நான் இந்தப் பிரச்னையைக் கவனிக்கறேன். மிச்ச விவரங்களை பி.ஏ. உங்ககிட்டே பேசுவார். பி.ஏ.விடம் திரும்பிச் சொன்னார். பெரியவர்கிட்டே நீங்க விளக்கமாப் பேசிடுங்க.''

பி.ஏ. தலையாட்டி விட்டு சண்முகசுந்தரத்தைக் கூட்டிக் கொண்டு சென்றார். தன்னுடைய இருக்கைக்கு எதிரே அவரை அமர வைத்தவர், பால்பாயிண்ட் பேனாவினால் காதைக் குடைந்து கொண்டே சொன்னார்.

"பெரியவரே உங்க கோபம் என்னவோ நியாயமானதுதான். ஆனா இந்தப் பிரச்னையை இத்தோட மறந்துடுங்க.''

திடுக்கிட்டு நிமிர்ந்தார் சண்முகசுந்தரம். "கவனிக்கறேன்னு கலெக்டர் சொல்றார். நீங்க இப்படிச் சொல்றீங்களே?''

"உங்க கோரிக்கையைப் பரிசீலிச்சாலே அவரைத் தண்ணியில்லாத காட்டுக்குத் தூக்கி அடிச்சிடுவாங்க. கலெக்டர் அவரோட பதவியைக் காப்பாத்திக்க வேண்டாமா? விஷயம் புரியாம ரொம்ப அப்பாவியா வந்து இப்படி ஒரு கோரிக்கையை வெச்சிருக்கீங்க. உங்க மேல கலெக்டருக்கு இரக்கம் ஏற்பட்டிருக்கு. அதனாலதான் உங்ககிட்டே என்னைப் பேசச் சொன்னார்.''

"புரியும்படியா ஏதாவது சொல்லுங்க. வேண்டாத இடத்தில் இருக்கும் ஒரு மதுக்கடையை மூடறதுக்குக் கூட கலெக்டருக்கு அதிகாரம் இல்லையா?''

"நிலைமை தெரியாம பேசாதீங்க. அருள்மொழி ஆளுங்கட்சியில் பெரிய புள்ளி. ஸ்டேட் பூராவும் பத்துப் பதினைஞ்சு ஒயின் ஷாப் அவர் கையில் இருக்கு. கட்சிக்கு நிதியை அள்ளி அள்ளி வீசக் கூடிய ஆள். கட்சியை நம்பி அவர் இல்லை. அவரை நம்பிக் கட்சி இருக்கு. அப்பேர்ப்பட்ட ஆளோட கடையை அப்புறப்படுத்தணும்ன்னு கனவு காணாதீங்க."

சண்முகசுந்தரம் கோபமானார்.

"ஆளுங்கட்சிக்காரன்னா கொம்பா முளைச்சிருக்கு? என்ன வேணா அராஜகம் செய்யலாமா? முறைப்படி கலெக்டர் கிட்டே மனு தந்திருக்கேன். நீங்க நடவடிக்கை எடுக்கலைன்னா கோர்ட்டுக்குப் போவேன்."

பி.ஏ. சிரித்தார்.

"கோர்ட்டுங்கறது ஜட்ஜ்தானே பெரியவரே. நாலு ஜட்ஜ் நல்லவங்களா இருந்தா இரண்டு பேராவது விலை போறவங்களா இருக்காங்க. ஆளுங்கட்சிக்கு எதிரா தீர்ப்பு சொல்லக்கூடிய தைரியம் பல பேருக்கு இல்லை. அருள்மொழி ஆளுங்கட்சியில் சாதாரண ஆள் இல்லை. வீண் வம்பை விலைக்கு வாங்காதீங்க. கலெக்டர் ஸார் நல்லவர்தான். எத்தனையோ ஏழை ஜனங்களுக்கு அவரால முடிஞ்ச உதவிகளைச் செய்யறார். நீங்க கேக்கற கோரிக்கையை நிறைவேத்தணும்ன்னு மனசார அவர் விரும்பலாம். ஆனா ப்ராக்டிக்கலா அது முடியாது. ஒருவேளை மூணு மாசம் பொறுமையா காத்திருந்தா உங்க எண்ணம் நிறைவேற வாய்ப்பிருக்கு."

"மூணு மாசம் காத்திருக்கணுமா? எதுக்கு?"

"இடம், பொருள், காலம் அறிந்து ஒரு காரியத்தைச் செய்யணும்ன்னு உங்களுக்குத் தெரியாதா? இந்த ஆட்சிக் காலம் இன்னும் ஒரு மாசத்தில் முடிஞ்சிடும். தொடர்ந்து எலெக்ஷன். எலெக்ஷன்ல ஒருக்கால் வேற கட்சி ஜெயிச்சதுன்னா அருள்மொழி மாதிரி ஆட்கள் பல்லைப் பிடுங்கின பாம்பாயிடுவாங்க. அப்போ இதே கோரிக்கையை கலெக்டர்கிட்டே வெச்சீங்கன்னா அவரால நிறைவேத்த முடியும்."

சண்முகசுந்தரம் பாதி நம்பிக்கையும், பாதி அவநம்பிக்கையுமாக எழுந்தார்.

எண்ணி எழுபத்தைந்து நாட்களுக்குள் எத்தனை சம்பவங்கள்! சண்முகசுந்தரம் சில இளைஞர்களைத் திரட்டி கையெழுத்து வேட்டை நடத்த முயற்சி செய்தார். விஷயம் கேள்விப்பட்டு அருள்மொழியின் ஆட்கள் கதர்க் கடையின் கண்ணாடியை உடைத்து சண்முகசுந்தரத்தை மிரட்டி விட்டுப் போனார்கள். லோக்கல் இன்ஸ்பெக்டர் அருள்மொழிக்கு எதிராக எஃப்.ஐ.ஆர். போடக் கூடப் பயந்தார். இதற்குள் அரசியல் தலைகீழாய்த் தடம் புரண்டது. ஆளுங்கட்சி தொண்ணூறு சதவித இடங்களில் டெபாசிட் இழந்திருக்க - எதிர்க்கட்சி வந்து - அமைச்சரவை பதவிப் பிரமாணம் கூட நடத்தி முடித்து விட்டது.

மார்க்கெட் ரோடு காந்தி சிலை, குடிமகன்களிடம் படும்பாட்டைப் பார்த்து தினந்தோறும் ரத்தக் கண்ணீர் வடிக்கிற சண்முகசுந்தரத்துக்குள் மெல்லிசாய் நம்பிக்கைக் கீற்று உற்பத்தியானது.

பத்திருபது இளைஞர்களிடம் திரட்டிய கையெழுத்துக்களோடு இன்றைக்கு மீண்டும் கலெக்டர் ஆபீஸுக்கு வந்திருந்தார்.

ஃபைலுடன் குறுக்கே போன பி.ஏ. அவரை அடையாளம் தெரிந்து நின்றார்.

"என்ன பெரியவரே, மறுபடியும் வந்திருக்கீங்க?"

"ஆட்சி மாறிடுச்சு. காந்தி சிலைக்கு எதிரே உள்ள மதுக்கடையை அகற்ற இப்பவாவது முயற்சி எடுக்கலாமேன்னு மறுபடி மனுவோட வந்திருக்கேன்."

பி.ஏ.வின் முகம் சட்டென மாறியது.

"மன்னிக்கணும் பெரியவரே. கலெக்டரால இப்பவும் எதுவும் செய்ய முடியாது."



வந்தவர்: சம்திங் ரொம்ப அதிகமா கேக்கற மாதிரி இருக்கே சார்...?

ஆபீஸ் மானேஜர்: அதிகமெல்லாம் இல்லேப்பா... கவர்மெண்ட் ரேட்டே அதுதான்!

– சீர்காழி வி. ரேவதி

ஆந்திராவின் எக்ஸ்கியூடிவ்!

ஆந்திராவிலுள்ள பிசினஸ் வட்டாரத்தில் C.E.O (Chief Executive Officer- தலைமை நிர்வாக அதிகாரி) என்று அழைக்கப்படுபவர் யார் தெரியுமா? அண்மையில் 'பிசினஸ்மேன் ஆப் தி இயர்' என்று எகனாமிக் டைம்ஸ் பத்திரிகையால் விருது வழங்கப்பட்ட முதல்வர் சந்திரபாபு நாயுடுதான்!

தலைமை நிர்வாக அதிகாரி என்பவர், தாம் சார்ந்திருக்கும் நிறுவனத்தைச் சிறப்பாக நடத்தி, நிறுவனத்துக்கும் அதன் பங்குதாரர்களுக்கும் அதிக லாபத்தை ஈட்டித் தருவதோடு, அந் நிறுவனத்தின் பணியாளர்களும் திருப்தியோடு பணியாற்றும்படி செய்பவர். இப்படிப்பட்டவர்தாம் சிறந்த நிர்வாக அதிகாரியாகப் போற்றப்படுவார்!

நாயுடுவைப் பொறுத்தவரை ஆந்திர மாநிலத்தையே ஒரு நிறுவனமாகவும் மக்களையெல்லாம் அதன் பங்குதாரர்களாகவும் நினைத்து வெற்றிகரமாகச் செயல்படுகிறார். சாஃப்ட்வேர் தொழில் நுட்பத்தில் இன்று முதலிடம் வகிப்பது ஆந்திராதான். இவரது முயற்சியால்தான் ஹைதராபாத் இன்று 'ஹைடெக் நகரம்' என்று அழைக்கப்படுகிறது! இத்தனை ஏன்? கம்ப்யூட்டர் உலகின் மன்னன் பில் கேட்ஸ் கூட நாயுடுவால் கவர்க்கப்பட்டிருக்கிறார் என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன்!

– அ. சங்கரன்



சண்முககந்தரம் பதறினார்.

"ஏன்?"

"அன்னிக்கு நீங்க வந்துட்டுப் போன பிறகு அருள்மொழியைப் பத்தி மேலும் விசாரிச்சுப் பார்த்தேன். உங்களுக்குத் தப்பான நம்பிக்கையைத் தந்துட்டேன்னு அப்போதான் எனக்குப் புரிஞ்சது."

"தயவுசெஞ்சு விளக்கமாச் சொல்லுங்க."

"அருள்மொழி பங்குவகிக்கிற கட்சி ஆட்சிக் கட்டிலை விட்டுக் கீழே இறங்கிடுச்சு. ஆனா, இப்போ ஆட்சியிலிருக்கற கட்சியில் அவரோட தம்பி பெரிய ஆள். அவருக்கு மொத்தம் நாலு தம்பிமார்கள் இருக்காங்க. நாலு பேரும் நாலு கட்சியில் முக்கிய புள்ளிகளா இருக்காங்க. எந்த ஆட்சி வந்தாலும் இந்த ஊரோட கண்ட்ரோல் சுவிட்ச் அந்தக் குடும்பத்தின் கையில்தான் இருக்கும். அந்த மதுக் கடையை அசைக்கறது சாமானிய காரியம் இல்லை. பேசாம திரும்பிப் போயிடுங்க."

சண்முககந்தரத்துக்கு உடம்பு ரத்தம் பூராவும் சில விநாடிகளுக்குத் தகித்தது. படபடத்தார்.

"நான் திரும்பிப் போக மாட்டேன். கண்டிப்பா கலெக்டரைப் பார்க்கப் போறேன்."

பிடிவாதத்தோடு காத்திருந்து – கலெக்டரின் அறைக்குள் சென்றார். கலெக்டர் சொற்ப விநாடிகள் அவரை உற்றுப் பார்த்து நினைவுக்குக் கொண்டு வந்தார்.

"ஆட்சி மாறினாலும் அந்த மதுக் கடையை மூடறதுக்காக இன்னொரு முறை மோதிப் பார்க்கலாம்னு வந்திங்களா?"

சண்முககந்தரம் மறுத்தலாய்த் தலையை ஆட்டினார்.

"அந்த எண்ணத்தோடதான் வந்தேன். ஆனா உங்க பி.ஏ.கிட்டே பேசினப்புறம் என் எண்ணத்தை மாத்திக்கிட்டேன். இப்போதைக்கு உங்களால நிறைவேத்த முடிஞ்ச வேற ஒரு சின்னக் கோரிக்கையை மட்டும் உங்ககிட்டே வெக்கறேன். இந்தக் கோரிக்கையை நிறைவேத்த எந்த அரசியல்வாதியும் முட்டுக்கட்டை போட மாட்டான்னு நம்பறேன்."

கலெக்டர் ஆர்வத்துடன் சண்முககந்தரத்தைப் பார்த்தார்.

"என்ன கோரிக்கை பெரியவரே?"

சண்முககந்தரத்திடமிருந்து கல்லை வெட்டினாற் போல அழுத்தமாய் வார்த்தைகள் வந்து விழுந்தன.

"காந்தி சிலையை வேற இடத்தில் கொண்டு போய் வெக்கணும்." ●

பந்து வீச்சில் ஒரு சர்ச்சை!

ஹர்பஜன் சிங்கின் தாற்காலிக அணி நீக்கம், கிரிக்கெட் ரசிகர்களின் மத்தியில் ஒரு கேள்விக்குறியை எழுப்பியிருக்கிறது. என்ன காரணம்?

ஹர்பஜன் சிங், சந்தேகமான முறையில் பௌலிங் செய்கிறார் என்று குற்றம் சுமத்தப் பட்டதால், நடந்து முடிந்த வில்ஸ் கோப்பை பந்தயத்தில் அவர் இடம்பெறவில்லை. அதாவது அவர் பந்தை வீசவில்லை, பந்தை எறிகிறார் என்பது குற்றச்சாட்டு. கிரிக்கெட் விதிகளின்படி பந்து வீசப்பட வேண்டுமே தவிர எறியப்படக்கூடாது. இப்படி ஒரு பந்து வீச்சாளர் செயல்பட்டால் அதை "நோ பாலாக" அம்ப்பயர் அறிவிக்க விதிகளில் இடமுண்டு. சர்வதேச கிரிக்கெட் அமைப்பு (ICC) இதுகுறித்து நமது இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவுக்கு தங்கள் அறிக்கையை அனுப்ப, அதன் விளைவாக இந்தத் தாற்காலிக(?) அணி நீக்கம்.



"ஸ்ரீலங்கா அணியைச் சேர்ந்த முத்தையா முரளீதரன் மீது இதேபோன்ற ஒரு குற்றச்சாட்டு எழுந்த போது அந்த நாட்டுத் தேர்வாளர்களோ, கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழுவோ அவரை விட்டுக் கொடுக்கவில்லை. "பிறவியில் ஏற்பட்ட அவரது கையில் உள்ள ஒரு சின்னக் குறைபாடு காரணமாகவே அவரது பந்து வீச்சும் குறை உள்ளதாகத் தெரிகிறது'' என்று ஜாலமாகப் பேசி, அவரைத் தொடர்ந்து சர்வதேச கிரிக்கெட் பந்தயங்களில் இடம்பெறச் செய்தனர். நம் நாட்டு கிரிக்கெட் தேர்வாளர்கள் மட்டும் ஏன் ஹர்பஜன் சிங்கை சர்வதேச அரங்கில் விட்டுக் கொடுக்க வேண்டும்?" என்பதுதான் ரசிகர்களின் கேள்வி!

"19 வயதுக்குட்பட்டவர்களுக்கான உலகக் கோப்பைப் பந்தயங்களுக்காக தென்னாப்பிரிக்காவுக்கு நான் நம் அணியின் 'கோச்'சாகச் சென்றிருந்தேன். அப்போது பல நாட்கள் கவனித்த போதும் அவரது பந்து வீச்சில் எந்தத் தவறும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை!" என்கிறார் ஸ்ரீகாந்த்.

இருந்தபோதிலும், நவம்பரில் ஹர்பஜன்சிங்கை, இங்கிலாந்தின் முன்னாள் சுழல்பந்து வீச்சாளரும், தற்போதைய 'கோச்'சுமான ஃப்ரெட் டிட்மஸிடம் பயிற்சி எடுத்துக் கொள்ள லண்டனுக்கு அனுப்ப முடிவெடுத்திருக்கிறது, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுக் குழு.

இதே போன்று குற்றம் சுமத்தப்பட்ட இந்திய அணி வீரரான ராஜேஷ் சௌஹானும், ரஞ்சிக் கோப்பைப் பந்தயங்களில் முன்பு தமிழகம் சார்பாகவும் பிறகு கோவா அணியிலும் ஆடிய கோகுல கிருஷ்ணாவும் பின்னர் பயிற்சிக்கு அனுப்பப்பட்ட பிறகும் பிரகாசிக்கவில்லை! அதனால் ஹர்பஜன் சிங்குக்கும் என்ன நிலை வருமோ என்று பலரும் சந்தேகத்தோடு பார்க்கிறார்கள்.

— ஜி.எஸ்.எஸ்.



• தகிக்கிறது!

• அபத்த ஆசை!

• வீராயமான அறிவுரை!

• 'ஏழைமை' ஏய்ப்பு!

● எஸ். அருள்மொழி, காட்டூர்.

? 'ராவணனை இகழ வேண்டாம்' என்று கவிஞர்களிடம் வேண்டுகோள் விடுக்கும் கலைஞர், 'அவனையும் புண்படுத்தி என்னையும் புண்படுத்தாதீர்கள்' என்கிறாரே... இதன் அர்த்தம்...?

! ராவணனை நமது புராணங்கள் இகழவில்லை; சிறந்த பக்திமானாக, அறிவாற்றல் மிக்கவனாக, மாவீரனாகச் சித்திரிக்கிறது. அவனுடைய ஒரு குற்றம் கண்களை மறைத்து, மேலே மேலே தவறுகளைச் செய்ய வைத்தது என்பதை எடுத்துச் சொல்கிறது. புராணங்கள் வரலாறுகள் அல்ல. நமக்கு வழிகாட்டி, நற் பண்புகள் ஏற்படுத்த எழுதப்பட்ட காப்பியங்கள்.

● வி. பரமசிவம், மதுரை – 16.

? வரப் போகும் மாநிலங்களின் தேர்தல் முடிவுகளை வைத்து, மத்திய அரசின் செயல்பாடுகள் மீதான மக்களின் தீர்ப்பாக அதை எடுத்துக் கொள்ள முடியாது என்கிறாரே வெங்கையா நாயுடு...?

! பிறகேன் டெல்லியில் முதல்வரை மாற்றி, விழி பிதுங்கி அவஸ்தைபட்டதாம் பி.ஜே.பி!

● ஜி. நீலா, மன்னார்குடி.

? 'நான் ஏழையின் மகன், அதனால் ரிக்ஷாவில் வந்தேன்' என்று நிருபர்களிடம் (சி.பி.ஐ அலுவலகம் வந்தது குறித்து) லாலு பிரசாத் யாதவ் கூறிக் கொண்டது...?

! ரிக்ஷாவை ஓட்டியல்லவா வந்திருக்க வேண்டும்! ஒருவர் ஓட்ட, கால் மேல் கால் போட்டு உட்கார்ந்து 'ஷோ' காட்டி வந்ததில் என்ன சிறப்பு?...

● டி.ஏ.சி. பிரகாஷ், திருச்செங்கோடு.

? உலக அழகிப் பட்டம் வென்ற இந்தியரைத் தெரிந்த அளவுக்கு 'நோபல் பரிசு' வென்ற ஓர் இந்தியரை யாருக்கும் தெரிவதில்லையே... என்ன காரணம்?

! இருபத்தைந்து வயதுக்குட்பட்ட அழகிகளுக்கு நோபல் பரிசு தரப்படாததே காரணம்.

● கே.ஆர். வெங்கடேஷ், சீர்காழி.

? கூட்டணி பற்றி கேள்வி கேட்டால் எல்லா அரசியல்வாதிகளும் 'அரசியலில் நிரந்தரப் பகைவனும் இல்லை; நிரந்தர நண்பனும் கிடையாது...' என்று ஒரே பதிலைச் சொல்கிறார்களே... ஏன்? பேசாமல், எங்களுக்கு நிரந்தரக் கொள்கை கிடையாது என்று கூறலாமே...?

! அரசியல்வாதிகள் உண்மை பேசுவதில்லை என்பது தெரியாதா?!

● பா. நாராயணன், சென்னை – 40.

? மூதறிஞர் ராஜாஜி தலைமையில் சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்ட கல்கி, சதாசிவம் மற்றும் பலர், நாடு சுதந்தரம் பெற்றால் யாதொரு பிரதிபலனும் எதிர்பார்க்கக் கூடாது என்று சபதம் மேற்கொண்டார்களாமே?

! சபதமொன்றுமில்லை. தியாகிகளுக்கான அரசு சலுகைகளையும் ஊதியத்தையும் ஏற்க மறுத்தனர் – தியாகத்துக்குக் கூலி பெறுவது கேவலம் என்பதால்.

● கலை நடராஜன், எண்ணூர்.

? வருடா வருடம் தீபாவளிப் பண்டிகை சுவாரஸ்யம் குறைந்து கொண்டே வருவது ஏன்...?

! நீர் ஒருவேளை ரஜினி ரசிகரோ? ரஜினி படம்

நெருப்பாற்றில் நீந்துவதாகச்

வராத தீபாவளியை துக்க தினமாக அனுஷ்டிப்போம் என்று ரஜினி ரசிகர்கள் தான் போஸ்டர் ஒட்டுகிறார்கள். மனவியல் ரீதியாக என்ன ஒரு obsession!

● என். பாலகிருஷ்ணன், மதுரை – 1

? அருமையான ஜோக் ஒன்று சொல்லுங்களேன்...


! அண்மையில் தாம் கேள்விப்பட்டதாக லால்குடி ஜெயராமன் சொன்ன (புதிர்) ஜோக் அது: ஒரு கப்பலில் லாலு, ஜெ, கௌடா, சு. சுவாமி முதலான தலைவர்கள் பயணம் செய்து கொண்டிருக்கின்றனர். திடீரென்று கப்பல் மூழ்கிவிட்டால் யார் தப்பிப் பிழைப்பார்கள்...?

விடை: இந்தியா பிழைக்கும்!

● ஆர். சாலமோன், ஆலங்குளம்.

? 'நான் நூறாண்டு வாழ்வது என் கையில் இல்லை; கடவுள் கையில்தான் இருக்கிறது...' என்று கோவை பொதுக் கூட்டத்தில் கருணாநிதி பேசியிருக்கிறாரே...?

! ராவணன் கையில்தான் உள்ளது என்று சொல்லாமல் விட்டாரே, சந்தோஷப் படுங்கள்!



• தியாகத்துக்கு... விலையில்லை ...!



• வயதும் வார்த்தையும்!

● மல்லிகை மன்னன், மதுரை – 17.

? 'என்னுடைய யோசனைகளை ஜெயலலிதா கேட்டு நடந்தால், பத்திரிகைகள் அவரை மிக மோசமாக விமர்சனம் செய்யாது...' என டாக்டர் ராம்தாஸ் 'அட்வைஸ்' பண்ணியிருக்கிறாரே...?

! பிறர் யோசனைகளைக் கேட்டு நடந்தால் ஜெயலலிதாவாக இருக்க முடியாதே!

● ந. வந்தியக்குமாரன், சென்னை – 41.

? கோபப்படாமல் இருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும்...?

! கோபம் வந்தாலும் கோபப்படாமல் இருக்க வேண்டும்!

● இந்திரா, பெங்களூர் – 8.

? நெருப்பாற்றில் நீந்தி இயக்கத்தை நடத்தி வருகிறேன் என்று ஜெயலலிதா கூறியது பற்றி...?

! பின்னே, வழக்குகளெல்லாம் சுடாதா என்ன...?

● பெ. பொன்ராஜபாண்டி, மதுரை – 10.

? சிலைகள் வைக்க அனுமதி மறுப்பதன் மூலம் சாதிக் கலவரங்களை ஒழித்து விட முடியுமா...?

! சிலைகளா சண்டை போடுகின்றன!

● சிவராம சுப்பிரமணியன், தூத்துக்குடி – 1.

? சேரனின் 'தேசிய கீதம்' எப்படி...?

! நாடகத்தனமான டாக்குமெண்டரி.

● ஜெ. கண்ணன், சென்னை – 101 ❑

? கிரிக்கெட் பந்தில் விளையாடியவர் ரப்பர் பந்தில் கிரிக்கெட் ஆட ஆசைப்படுவது போல, பிரதமராக இருந்த தேவே கௌடா முதல்வராக ஆசைப்படுகிறாரே...?

! பந்தே இல்லாமலல்லவா கிரிக்கெட் ஆடப் பார்க்கிறார்!


● எஸ். முரளி, குறிஞ்சிப்பாடி.

? குமுதம் பத்திரிகையின் பொறுப்பாசிரியர் வேலையிலிருந்து மாலன் விலகிவிட்டாராமே?

! ரொம்ப நல்லது – மாலனுக்கு!



• பண்டிகை பாம்!



• நன்மைக்கே!

❑ ரூ 50 பரிசு பெறுபவர்:
ஜெ. கண்ணன்,
246, பதினோராவது தெரு,
அண்ணாநகர் மேற்கு,
சென்னை – 101

சொல்கிறாரே 'ஜெ'...?

புதியபார்வை - பை மன்த்லி நின்னு போனதுல, தீவிர இலக்கிய ரசிகர்களுக்குப் பெரிய இழப்பு. குங்குமம் மாதிரி ஒரு வெகுஜனப் பத்திரிகைல பல வருஷம் வேலை பார்த்தாலும் பாவை சந்திரன், தீவிரமான இலக்கிய நோக்கோட ரொம்ப சிரத்தையா இதைப் பண்ணிட்டு வந்தார். குறிப்பா, விமர்சனங்களுக்குப் புதிய பார்வை போட்டுக் கொடுத்த மேடை ரொம்பப் பெரிசு. விருப்பு வெறுப்பில்லாமல் சமகால இலக்கியங்களைத் தகுதியான நபர்களைக் கொண்டு விமர்சிக்கச் செஞ்சது பெரிய சேவை. இந்த நூற்றாண்டின் சரியான இலக்கிய வடிவம்னு சொல்லப்படற - பல நல்ல குறுநாவல்களைப் புதிய பார்வைல நான் படிச்சிருக்கேன். பாவை சந்திரனை இலக்கிய உலகம் இனி எப்படிப் பயன்படுத்திக்கப் போறதுன்னு பார்க்கணும்.

• • •

கோயமுத்தூர்ல நடந்த கல்கி நூற்றாண்டு விழாவுக்கு இன்விடேஷன்ல பேர் போடாத இன்னொரு வி.ஐ.பியும் போயிருந்தார்-that's me! ஃபங்ஷன் பத்தியெல்லாம் ஜோரா எழுதிடுவாங்க; தெரியும். நான் சொல்ல விரும்பறது வேற விஷயம்.

கூட்டத்துக்கு வந்திருந்த பல வாசகர்களோட, யார்னு காண்பிச்சுக்காம பேசினதுல சில விஷயங்கள் தெரிஞ்சுக்கிட்டேன்.

கோவை வாசகர்கள் ரொம்ப ஷார்ப். ஒரு பத்திரிகை விடாம படிச்சுடறாங்க. ஒரு டி.வி. ப்ரோக்ராம் விடறதில்லை. சினிமா செய்திகள்ல அவங்களுக்கு அவ்வளவு நாட்டம் இல்லை. "சல்மான் ருஷ்டி இந்தியாவுக்கு வர்றதுக்கு ஏற்பாடு பண்றதா அத்வானி சொல்லியிருக்காராமே? அப்ப சாத்தான் கவிதைகளும் வருமா? மெட்ராஸ் லேண்ட் மார்க்ல காப்பி கிடைக்குமா?"ன்னு கேட்டார் ஒரு ஸீனியர் ஸிடிஸன்.

"கோவை வெடிகுண்டு சம்பவங்கள் பத்தின ஆய்வு அறிக்கைகள் மக்கள் பார்வைக்குக் கிடைக்கணும். உண்மை அப்பத்தான் சரியா சொல்லப்பட்டிருக்கான்னு தெரியும்"னார் ஓர் இளைஞர்.

பஞ்சாலைத் தொழிலாளர்களோட கஷ்டம் பத்தி பத்திரிகைக்காரங்களுக்கு ஏதாவது தெரியுமா? யாராவது டாக்குமென்ட்ரி மாதிரி செய்ய முன் வருவாங்களான்னு கேட்டார் ஒரு தொழிலாளி.

"இங்கல்லாம் ஷூட்டிங் நடந்தா கும்பல் சேராது. இது மாதிரி இலக்கியக் கூட்டம்னா கட்டாயம் வருவாங்க"ன்னார் ஒரு மூத்த (கோவை) எழுத்தாளர்.

"தோ பாருங்க!" என்று அவர் காட்டிய திசையில் கல்கி கி.ரா., ராஜேஷ்குமார்கிட்ட ஆட்டோகிராஃப் வாங்க முண்டியடிச்சுக்கிட்டு நூறு பேர்!

தொடர் குண்டுவெடிப்புகள், கோவை

சுமி எதிர்க்கும் இயக்கம்?!

மக்களுக்கு மனசளவுல பாதிப்பு ஏற்படுத்தியிருக்கான்னு அன்னபூர்ணா ஓட்டல் ரூம் பாய் ஒருத்தர்கிட்ட கேட்டேன்.

"முதல்ல இருந்திச்சிங்க. அப்புறம் வெடிச்சிருச்சின்னு நியூஸ் வந்தா, ஆபீஸ் போற வழில அந்தப் பக்கமா ஒரு நிமிஷம் போய் நின்னு உச்சு கொட்டிட்டுப் போயிருவாங்க. நிறையப் பேர் டிரான்ஸ்பர் வாங்கிட்டு வெளியூர் போயிடறாங்க இப்ப"ன்னு சொன்னார்.

• • •

"**சு**மி ஒழிக!"ன்னு எங்க ஏரியால

அங்கங்க கிடைக்கற சுவர்ல எல்லாம் எழுதி வெக்க ஓர் இயக்கம் ஆரம்பிச்சிருவாங்க போல இருக்கு. கேபிள்ல திருட்டு சினிமா போடறது பத்தி எழுதியிருந்தேன் இல்லை? மாநிலம் முழுக்க இல்லாட்டாலும் எங்க ஏரியால மட்டும் போனவாரம் அதைத் தடை பண்ணிட்டாங்க. (போலீஸ்



ஸ்டேஷன்ல விசாரிக்கணும்; SI என் விசிறியோ என்னவோ?)

"உனக்கென்ன, எழுதிட்ட. பகல் முழுக்க கொட்டு கொட்டுன்னு போரடிச்சிட்டு இருக்க வேண்டியதாயிருச்சே!"ன்னு எங்க வீட்டுலயே கூட வருத்தப்பட்டாங்க.

என் ஃப்ரெண்டு ஒருத்தன் சொன்னான்: "ஒஸில புதுப்படம் பார்க்கறது பெரிய விஷயமில்லை. திருட்டுத்தனமா காண்பிக்கறதுலேயும் பார்க்கறதுலேயும் தான் ஒரு கிக்."

குறைஞ்சது அடுத்த நூற்றாண்டுக் கடைசியிலேயாவது தேசம் உருப்படக் கூட்டுப் பிரார்த்தனை செய்வோம்.

* * *

லேட்டஸ்ட் ஸ்பான் இஷ்யூலேருந்து ஒரு கட்டுரையை எடுத்தனுப்பி, படிச்சுப் பாரு சுமின்னார், சுப்ரபாலன்ங்கற என் எழுத்தாள நண்பர் ஒருத்தர். மொழிகளோட அழிவு பத்தின கட்டுரை அது.

உலகத்துல மொத்தம் ஆறாயிரம் மொழிகள் உண்டாம். (அதுல கிட்டத்தட்ட அம்பது பர்ஸன்ட் பேசப்படறதில்லை- நம்ம சமஸ்கிருதம் மாதிரி.)

மிச்சமிருக்கற மொழிகள்லேயும் சுமார் முன்னூறு தவிர எஞ்சினதெல்லாம் வரிசையா அழிஞ்சிட்டே வருதாம்.

21ம் நூற்றாண்டு முடியறதுக்குள்ள வருஷத்துக்கு இருபது லேங்வேஜஸ் வீதம் அழிஞ்சிட்டே வரும்னு ஆராய்ச்சி பண்ணிச் சொல்றார் மிக்கேல் க்ராஸ்ங்கற ஒரு மொழி இயல் வல்லுநர்.

கல்கியோட 'கணையாழியின் கனவு' சிறுகதைத் தொகுப்புக்கு டி.கே.சி. ஒரு முன்னுரை எழுதியிருக்கார். அதுல சொல்றார்: "கிரீக், லத்தீன், சமஸ்கிருதம் முதலிய வழக்கற்ற பாஷைகளோடு தமிழும் ஒன்றாய்ப் பிதிர்க்கடன் செய்ய வேண்டிய கௌரவத்துக்கு உள்ளாகி விடுமோ என்று பயப்படும்படி நேர்ந்தது..."

டி.கே.சி. எழுதி கிட்டத்தட்ட அம்பது வருஷத்துக்கு மேல ஆயிடுச்சு. நல்லவேளை, இன்னும் அப்படி ஆகலை. இனியும் ஆயிடக் கூடாதுன்னா எல்லாரும் கண்டிப்பா தமிழ்லேயே பேசணும்; எழுதணும்- எப்பவும்.

நான்கூட சுத்தமா தமிழ் எழுதக் கத்துக்க ஆரம்பிச்சிருக்கேன்- இப்ப 'ரீஸன்டா'த் தான்.

— சுமி

நினைவிருக்கிறதல்லவா!

அமரர் கல்கி நூற்றாண்டு சிறப்புப் போட்டிகள்!

ரூ. 60,000

பரிசுத் திருவிழா!

நாவல் போட்டி : பரிசு : ரூ. 25,000

- கல்கியில் 26 வாரங்கள் தொடராக வெளியிடக்கூடிய அளவிலான நாவலாக இருக்க வேண்டும்.
- சரித்திர நாவல், சமூக நாவல், மர்ம நாவல், விஞ்ஞானப் புதினம் (Science Fiction) என எதுவானாலும் அனுப்பி வைக்கலாம்.
- தரம் மட்டுமே கருத்தில் கொண்டு பரிசு முடிவு செய்யப்படும்.

கடைசி தேதி : மார்ச் 15, 1999.

மினி தொடர் கதைப் போட்டி: பரிசு ரூ. 10,000

- கல்கியில் நான்கு வாரங்கள் வெளியிடக்கூடிய மினி தொடர்கதைகள் வரவேற்கப்படுகின்றன!
- மின்னல் வேகத்தில் முன்னேறும் கதையாக இருக்க வேண்டும்.
- ஒவ்வொரு வாரத்துப் பகுதியும் நான்கு பக்கங்களுக்கு மிகாமல் அமைய வேண்டும்.
- தலையைப் பிய்த்துக் கொள்ளும் அளவுக்கு சஸ்பென்ஸ் இருக்க வேண்டும்!
- மர்மக் கதையாக இருக்க வேண்டிய கட்டாயமில்லை!

கடைசி தேதி : டிசம்பர் 15, 1998.

இசைப் பாடல் போட்டி: பரிசு ரூ. 10,000

- உள்ளத்தை உருக்கி வார்த்தைகளில் வடிக்கும் இசைப் பாடல்கள் பரிசீலனைக்கு வரவேற்கப்படுகின்றன.
- பக்திப் பாடலாகவோ, தேச பக்திப் பாடலாகவோ, சமுதாய

விழிப்புணர்வு தீமாகவோ இருக்கலாம்.

● கீர்த்தனை வடிவில் பாடல் அமைய வேண்டிய கட்டாயமில்லை.

● எழுத்து வடிவில் பாடலை அனுப்பினால் போதுமானது. இசையமைத்து அனுப்ப வேண்டாம்.

கடைசி தேதி : ஜனவரி 15, 1999.

நகைச்சுவைப் பயணக் கட்டுரைப் போட்டி : பரிசு ரூ. 10,000



● உள்நாட்டு, வெளிநாட்டு, ஏன் பக்கத்து ஊர்ப் பயணம் குறித்தும் எழுதலாம்.

● இடைவிடாது சிரிக்கும்படி கட்டுரை அமைய வேண்டும்.

● பயணக் கட்டுரைக்கான இதர இலக்கணங்கள் - வரலாறு, பூகோளக் குறிப்புகள், வர்ணனைகள், மக்கள், இயற்கை, பழக்க வழக்கங்கள் யாவும் அமையப் பெற வேண்டும். நகைச்சுவையுடன் தகவல்களைப் பின்னித் தர வேண்டும்.

● இக் கட்டுரை கல்கியில் 5 முதல் ஆறு பக்கங்களுக்குள் (படங்கள் உள்பட) அடங்கும்படி அமைய வேண்டும்.

கடைசி தேதி : ஜூன் 10, 1999.

வாசகர்களுக்கான போட்டி: பரிசு ரூ. 5,000

கல்கி கலெக்ஷன் பகுதியை உன்னிப்பாகப் படித்து வாருங்கள். பொன்னியின் செல்வன் நீங்கலான பகுதியில் இடம்பெறும் கட்டுரை/கவிதைகளுள் உங்களை அதிகம் கவர்ந்தது எது? ஏன்...? என்பதை ஒரு பக்க விமர்சனமாக எழுதி அனுப்புங்கள்.

● மே, 1999 இறுதி வரையிலான கல்கி கலெக்ஷன் பகுதியைத் தொடர்ந்து படித்து, பிறகு சிறந்த ஒன்றைத் தேர்வு செய்து விமர்சனம் எழுதுங்கள்.

● விமர்சிக்கப்படும் கட்டுரை இடம்பெற்றுள்ள இதழ் தேதியைக் குறிப்பிட்டு எழுத வேண்டும்.

● விமர்சனம் கல்கியில் ஒரு பக்கத்திற்குள் அடங்கும்படி அமைய வேண்டும்.

கடைசி தேதி : ஜூன் 20, 1999.

அனுப்பப்படும் அனைத்துப் படைப்புகளும் 'சொந்தக் கற்பனையே' என்ற உறுதிமொழியுடன் அனுப்பப்பட வேண்டும்.

ஒவ்வொரு போட்டிக்கும் ஒரு பரிசு மட்டுமே வழங்கப்படும்!

அனைத்துப் போட்டிகளிலும் ஆசிரியர் தீர்ப்பே இறுதியானது.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு செப்டெம்பர் 9, 1999 - அமரர் கல்கி நூற்றாண்டு நிறைவு விழா நிகழ்ச்சியில் பரிசுகள் வழங்கப்படும்.



லட்சுமணன் கோட்டைத் தாண்டும் ஆடுகள்!

இந்திய - சீன எல்லைக் கோட்டை மெக்மோஹன் கோடு என்று குறிப்பிடுவார்கள். இந்த 'லட்சுமணன் கோடு' சந்தடியின்றித் தாண்டப் படுகிறது என்பது கவலை அளிக்கும் ஒரு விஷயம்.

இப்படி எல்லை மீறுபவர்கள் சீன ராணுவத்தினரல்ல. ஆடு மாடுகளை மேய்க்கும் சீனர்கள்தான். ஆனால் இதுவே வருங்காலத்தில் எல்லைப் பதற்றத்தை உருவாக்கி, இரு நாடுகளுக்கிடையே போரை உண்டாக்கிவிடுமோ என்று அரசியல் விமர்சகர்களைக் கவலை கொள்ள வைத்திருக்கிறது.

"ஏதோ சில மேய்ப்பர்கள் தவறி நுழைந்திருக்கலாம். இதற்கெல்லாம் கவலைப் படுவதா! அத்துமீறி வந்தவர்களை வெளியேற்றினால் போயிற்று" என்று கூறுபவர்கள், சரித்திரத்தின் சில பழைய பக்கங்களை அறிந்திருக்கவில்லை என்றே அர்த்தம்.

"சீன இந்தி பாய் பாய்" என்ற கோஷத்தை, அன்றைய பிரதமர் ஜவாஹர்லால் நேரு பிரபலப்படுத்தி, இரு நாடுகளின் சகோதரப் பாசத்தை கட்டிக்காட்டிய போதே, அவரை முதுகில் குத்தியது சீனா. 1962-ல் சீனா நம் மீது போர் தொடுத்தது. பிறகு ஒரு வழியாக சகஜ நிலைமை திரும்பியது.

என்றாலும் அதற்கு மூன்று ஆண்டுகள் கழித்து, "தங்கள் எல்லைப் பகுதிக்குள் இருந்த ஆயிரக் கணக்கான ஆடுகளை இந்தியா கைப்பற்றிக் கொண்டு அத்துமீறியிருக்கிறது" என்ற குற்றச்சாட்டை வெளியிட, மீண்டும் பதற்ற நிலை.

"இந்தியாவின் தரப்பில் யாரும் அப்படிப்பட்ட செயலில் ஈடுபடவில்லை. ஒரு வேளை தாங்கள் சர்வதேச எல்லைக் கோடு ஒப்பந்தம் ஒன்றை மீறுகிறோம் என்பதை அறியாமல் சில வெள்ளாடுகளும் செம்மறி ஆடுகளும் எல்லையைத் தாண்டியிருக்கலாம்" என்று அப்போதைய பிரதமர் லால் பகதூர் சாஸ்திரி சற்றே நகைச்சுவை கலந்து பேச, எப்படியோ பதற்றம் தணிந்தது. அதற்குப் பிறகு சீனாவும் இந்தியாவும் நல்ல நண்பர்கள் ஆகிவிடவில்லை. என்றாலும் விரோதத்தை வளர்த்துக் கொள்ளவில்லை.

இந்த நிலையில் இலேசான, இருதரப்பினரும் வளர்த்து விட்டிருக்கக் கூடாத, ஒரு கசப்புணர்வு இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்டுள்ளது.

இந்தியா அணுகுண்டு சோதனைகளை சமீபத்தில் செய்தபோது கூட "தெற்கு ஆசியாவில் நிலவும் அமைதியை இது குலைக்கக் கூடும்" என்று கூறியது சீன அரசு. அதற்குச் சில நாட்கள் கழித்து, "சர்வதேச அமைப்பின் பொது எண்ணத்தைப் பற்றி கவலைப்படாத அத்துமீறலான செயல் இது. இந்த சோதனைகளினால் சீனாவை மட்டுமல்ல, தனது பிற அண்டை நாடுகளையும் இந்தியா பயமுறுத்த முயற்சிக்கிறது" என்று தனது கருத்துக்களை மேலும் கடுமையாக்கிக் கொண்டிருக்கிறது.

சீனாவை நமது முதல் எதிரியாக ஜார்ஜ் பெர்னாண்டஸ் சித்திரிக்க, அதுதான் இப்படி பூமராங்காக மாறியுள்ளது என்று கருத்துத் தெரிவித்தவர்களும் உண்டு. பிறகு பிரதமர் வாஜ்பாயி இது குறித்து சமாளிப்பாக, சீனாவை சாந்தப்படுத்தும் வகையில் ஓர் அறிக்கையை வெளியிட்டார்.


இந்தச் சூழலில்தான் சீனாவைச் சேர்ந்த சில ஆடு மேய்ப்பவர்கள் லடாக்கில் உள்ள இந்திய புல்வெளிப் பகுதிக்குள் நுழைந்திருக்கிறார்கள் என்ற செய்தி வந்திருக்கிறது. எல்லைக் கோட்டை வலியுறுத்தி "சீன அரசு இந்த விஷயத்தில் தீவிர கவனம் செலுத்த வேண்டும்" என்று கூறினால், அதற்கு எந்த அளவு ஒத்துழைப்பு இருக்கும் என்பது கேள்விக்குறிதான். காரணம் "பிரிட்டிஷ் ஏகாதிபத்ய அரசு வரையறுத்த ஒரு எல்லைக் கோட்டை நாங்கள் ஏற்பதாவது? அவமானம்" என்றெல்லாம் முன்பு முரண்டு பிடித்துவிட்டு, கடைசியில்தான் வேண்டா வெறுப்பாக இந்த மெக்மோஹன் பிரிவுக் கோடு என்பதை ஒப்புக் கொண்டது சீனா.

"நாங்கள்தான் அப்போதே இதை முழுமனதாக ஏற்கவில்லையே" என்று கூறி, சீனா இன்னொரு பிரளயத்தை உண்டாக்காமல் இருக்க வேண்டுமே என்பதுதான் பலரது கவலை.

— குல்லூ







✉ "அழைப்பிதழில் இருந்த அழகு முதல்வன் படத்திலும் வெளிப்பட வேண்டும்" என்ற கமெண்ட் 'நச்' சென்று இருந்தது!
பெரியகுளம்,
எஸ். சையது முகமது.

✉ ஆயிரம் வார்த்தைகளால் விவரிக்க முடியாத அபத்தத்தை ஒரே ஒரு படம் காட்டி விட்டது. 'மார்ஷல் உடையில் மகாத்மா'வை சொல்கிறோம்.
புனே, ஜெ. ரஜினி ராம்கி.

✉ சுமி மேடம், நீங்க கேபிள்லே பார்த்த புதுப்படம் எல்லாம் சி.டி. கேஸெட்ஸ்தான்! இதில் படங்கள் ஜம்ப் ஆகாது. கிராச் இருக்காது! பன்னீர் மாதிரி ஒரு தெளிவு இருக்கும்! ஹி..ஹி... எங்க ஊரிலே வாரம் ஒரு புதுப்படம் ரன்னிங்ல இருக்கு!"
பள்ளிபாளையம்,
ரஞ்சனிப்ரியன்.

✉ சென்சாரில்படங்கள் தணிக்கை செய்யப்படும் முறைகள் சுவராஸ்யமாகவும் கலகலப்பாகவும் இருந்தது.
திருச்சி – 8,
தி.மா. தமிழழகன்.

✉ ஜப்பானிய பெற்றோர், தம் குழந்தைகளின் கல்வியில் அதிக அக்கறை காட்டுவது நல்லதுதான். ஆனாலும் ஞாயிற்றுக் கிழமைகளிலும் அவர்களை மினி ஸ்கூலுக்கு அனுப்புவது கொஞ்சம் ஓவருங்க!
தூத்துக்குடி - 1 ப. சுகுமார்.

✉ 'டீ பார்ட்டி அரசியல்' தலையங்கம் படித்தேன். என்னதான் ஒரு முக்கியமான கூட்டணிக் கட்சியின் தலைவியாக இருந்தாலும் ஜெயலலிதா, நாட்டை ஆளும் பிரதமரை இவ்வளவு தூரம் ஆட்டுவிக்கக் கூடாது. பாவம் வாஜ்பேயி! ஜெவுடன் கூட்டு வைத்துக் கொள்ள நினைப்பவர்கள் இனியாவது யோசிக்க வேண்டும்!
மொரட்டுப்பாளையம்,
க.நா. இராஜேஸ்வரன்.

வட்டமேஜை

✉ அமைச்சரவை விஸ்தரிப்பு கார்ட்டூன் பலமாக சிரிக்க வைத்தது. பலமுறை பார்க்கத் தூண்டியது!
பொன்மலை, ஆர். பிரகாஷ்.

✉ கிரீடம் சூட்டிய சென்னைக் கிளி ஸ்வேதாவின் அம்சமான அட்டைப்படம் கண்டவுடன் மனம் ஆனந்தத்தில் சிறகடித்தது!
மதுரை, வி. பரமசிவம்.

✉ 'டீ, டீ, தித்திக்கும் டீ!' சாருகேசியின் சுவாரஸ்யமான கற்பனையில் கலைஞரும்... வை.கோவும் எப்படி தப்பினார்கள்?
சர்க்கார்பதி, பி. ஜெயப்பிரகாஷ்.

✉ கடந்த நாற்பத்தி இரண்டு வாரங்களாகத் தம்முடைய எண்ண அலைகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டதற்கு எம்.எஸ். உதயமூர்த்தி அவர்களுக்கு, இளையதலைமுறையினரின் சார்பில் நன்றி கூறுகிறேன். 'எண்ணம் – உழைப்பு – தொடர் கண்காணிப்பு – கர்வமில்லாத வெற்றி' இவற்றைப் பற்றித் தொடர்ந்து, எளிமையாக விளக்கி வரும் அன்னாரது முயற்சி பாராட்டுக்குரியது.
திண்டுக்கல்–5, வெங்கி.

✉ இந்தியாவின் அழகு கிராமங்களில் உள்ளது என்றவர் அகிம்சாமூர்த்தி. அழகு மட்டுமல்ல முன்னேற்றமும் கிராமங்களைச் சார்ந்தே உள்ளது என்று தெளிவாகக் கூறியுள்ளார் டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்தி! பயனுள்ள தொடர்.
நெய்வேலி – 3, சு. ஸ்ரீகாந்த்.

✉ 'மக்கள் சக்தியை மன்றில் திரட்டினால் தக்கன எல்லாம் தடையின்றி நடக்கும்' என்ற தத்துவத்தைத் தமது முத்தான கருத்துக்களால் மெத்தவும் எழுச்சியுடன் எழிலொழுக எழுதிய டாக்டர் எம்.எஸ். உதயமூர்த்திக்கு என்றும் என் இதயப்பூர்வமான நன்றி, பாராட்டு!
பொறையாறு, கங்கா கணேசன்.

✉ 42 வாரங்களும் கல்கி கையில் கிடைத்தவுடன் முதலில் புரட்டத் தொடங்கியது உதயமூர்த்தி அவர்களின் பக்கங்களைத் தான்.
எலந்தங்குடி–1, கே.எம். ஜக்கரியா.

முதுகு வலிக்கு ஒரு புதுக் காரணம்!

மனசில் ஏதானும் குழப்பமோ, அதிருப்தியோ இருந்தால், அதுகூட முதுகுவலிக்கு ஒரு காரணமாகும் என்று சமீபத்திய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று தெரிவிக்கிறது.

'ஆனல்ஸ் அஃப் த ருமாட்டிக் டிஸீஸஸ்' என்ற ஆங்கிலப் பத்திரிகை ஒன்றில் இந்தக் கட்டுரை வெளியாகி இருக்கிறது.

மான்செஸ்டரில் உள்ள பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர்களும், கில் யூனிவர்சிடி ஆராய்ச்சியாளர்களும்தான் இந்தக் கட்டுரையை எழுதியிருக்கிறார்கள்.

'போன சில வருடங்களாகவே ஹெவி இண்டஸ்ட்ரிகள் எல்லாம் வெகுவாகக் குறைந்து போய் விட்டன. அப்படி இருந்தும் முதுகு வலி வந்து அவதிப்படுபவர்கள் அதிகரித்துக் கொண்டே போக என்ன காரணம் என்று மண்டையைக் குடைந்து கொண்டோம். சரி அது ஒரு பக்கம் இருக்கட்டும் என்று, வேலை செய்கிறவர்கள், வேலை இல்லாதவர்கள் எல்லாரையும் ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண்டோம். பொதுவாகவே சமூக வாழ்க்கையில் இருக்கிற பிரச்னைகள் உருவாக்குகிற அதிருப்தியும், பொருளாதாரச் சிக்கல்களும்கூட மன உளைச்சலை உண்டாக்கி, முதுகு - இடுப்பு வலியை உண்டாக்குகிறது என்று தெரிந்து கொண்டு இந்த ஆராய்ச்சி முடிவுகளை 'வெளியிட்டோம்' என்கிறார்கள் இந்த ஆராய்ச்சியாளர்கள்.

'வேலை சம்பந்தமாக மட்டுமே முழுக்க முழுக்க முதுகுவலி வருவதில்லை. அன்றாட, தினசரி வாழ்க்கையின் சில அம்சங்களும் காரணம்தான்' என்ற இந்தக் கண்டுபிடிப்பு பற்றி, மனநல மருத்துவர் டாக்டர் எஸ். நம்பியிடம் கேட்டோம்.

"நிச்சயமாக மனவேதனையும் முதுகுவலிக்குக் காரணம்தான்!" என்றார் டாக்டர் நம்பி.

"ஸ்ட்ரெஸ் எனப்படும் மன அழுத்தம், சைகலாஜிகல் பிரச்னைகளை உண்டாக்குகிறது. அது அதிகமாகும் போது நிச்சயம் லோ பேக் பெய்ன் வர வாய்ப்பு இருக்கிறது.



• குனிந்து நிமிர்ந்து கடுமையாக வேலை செய்பவர்களுக்கு மட்டுமல்ல; மன உளைச்சல் உள்ள பெண்களுக்கும் முதுகுவலி வரும்!

அதேபோல டிப்ரஷன் எனப்படும் மனச்சோர்வு நிலையும் ஒரு vague body pain உண்டாக்கும். இதில் சந்தேகமே இல்லை.

"மன உளைச்சல் இருக்கிற வீட்டுப் பெண்மணிகளைக் கேளுங்கள். அதை வெளிக்காட்டிக் கொள்ள முடியாத நிலையில், 'ஒரே பேக் பெயினாக இருக்கிறது!' என்பார்கள். அதனால்தான் இந்த மாதிரி வலிகளை 'சைகோசொமேடிக்' என்கிறார்கள். இது போன்ற வலிகளை 'சொமாடிவேட்டட் பாடி பிராப்ளம்' என்று குறிப்பிடுகிறார்கள்!

"உற்சாகமான மனநிலை, அயர்ச்சியின் போதும் வலிகளை விரட்டும் நிவாரணி போல உதவும்!" என்கிறார் டாக்டர் நம்பி.


— எஸ்.வி.என்

அக்னிசர்மா பக்கம்




மேஷம் : *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

இலேசான மனக்குழப்பத்துல இருக்கீங்களா? நாம சரியான பாதைல போறோமான்னு சந்தேகமா? கவலையை விடுங்க. தன்னம்பிக்கையை வளர்த்துக்கங்க. உங்களோட எல்லா நடவடிக்கைகளுக்கும் குருவோட சப்போர்ட் உண்டு. இந்த வாரம் நீங்க துணிஞ்சி செயல்படற எல்லா காரியமும் சக்ஸஸ்தான்! எதிர்பாராத இன்பச் சுற்றுலாக்கள் சிலருக்கு வாய்க்கும். பெண்களுக்கு வளமான வாழ்க்கைக்கான ஏதோ ஒரு திட்டம் இந்த வாரம் உருவாகும். பெரியவங்க ஆசி உங்களுக்குப் பரிபூரணமா உண்டுன்னாலும் வீடு, மனை, நகை எதுவும் இந்த வாரம் வாங்கற முயற்சி வேணாம். நஷ்டம் வரலாம்.




ரிஷபம் : *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

இந்த வாரம் உங்களுக்கு ரொம்ப சோதனையா இருக்குங்க. எதிலும் நிதானம் ரொம்ப முக்கியம். எப்பவும் குழப்பம், கவலை இருக்கும். என்னடா நினைச்சபடி செயல்பட முடியலையேன்னு வருத்தம் வரும். வீட்டுலயும் உங்க மனசு புரிஞ்சி நடந்துக்க மத்தவங்க தயாரா இருக்க மாட்டாங்க. வீணான சண்டை, சச்சரவுகள் வரலாம். சிலருக்கு உத்யோக ரீதில வேண்டாத இட மாறுதல் வரலாம். மேலதிகாரிகளை முறைச்சுக்காதீங்க. சக பணியாளர்களோட வாக்குவாதம் வேணாம். பணம் தண்ணியா செலவாகும். ஆனா, உங்க வயித்துக்கு ஒழுங்கா வேளைக்குச் சோறு போட முடியாது; அலைச்சல்! இந்த வாரம் கொஞ்சம் பல்லைக் கடிச்சிட்டு சமாளிக்கப் பாருங்க.




மிதுனம் : *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

எதிர்பாராத பண வரவு, திடீர் அதிர்ஷ்டங்கள், பார்ட்டிகள், புதிய வேலை வாய்ப்பு - இதுல ஏதாவது ஒண்ணைக் கட்டாயம் எதிர்பார்க்கலாம்! அவ்ளோ பிரமாதமான நேரம் இது. நீண்ட நாளா செய்ய நினைத்து, முடியாம இருக்கற காரியங்களை இப்ப ட்ரை பண்ணிப் பாருங்க. நண்பர்கள், சகோதரர்கள் உதவி கட்டாயம் உண்டு. நல்ல முதலீடுகளுக்கு இது ஏற்ற வாரம். ஆனா அலைச்சல் கொஞ்சம் அதிகமா இருக்கும். உடம்பும் கெட்டுப் போகலாம். குறிப்பா, குழந்தைங்க உடல் நலத்துல கவனமா இருங்க. இப்ப நீங்க எடுக்கற ஒரு முக்கியமான முடிவு, உங்க லைஃப் ஸ்டைலையே மாத்தக் கூடிய அளவுக்குப் பவர்ஃபுல்லா இருக்கப் போவுது.




கடகம் : *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

வாய்ப்புகளுக்குக் குறைவில்லை. ஆனா உங்க சோம்பேறித்தனத்தால பல நல்ல சான்ஸ்களை மிஸ் பண்ணுவீங்க. ஏதாவது வெளிநாடு சான்ஸ் வந்தா தவற விடாதீங்க. ஏன்னா அதிர்ஷ்டம் உங்களை வரவழைக்கற நேரம் இது. பெண்களுக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கற யோகம் இருக்கு. விவசாயிகள், கம்ப்யூட்டர் பணியாளர்களுக்கு இது அதிக வருவாய் சேரும் நேரம். அரசாங்கத்தால ஏதோ ஒரு நல்லது நடக்கப் போவுது. என்ஜாய் பண்ணுங்க.



சிம்மம் : *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்களுக்கு சாமர்த்தியம் ஜாஸ்திங்க. விரோதிகளைக் கூட நண்பர்களா மாத்திப்பீங்க. இப்ப குருவோட பார்வை உங்க பக்கம் நல்லா இருக்கு. பலருக்குத் திருமண யோகம் கூடும். சிலருக்கு உத்யோக ரீதில பதவி உயர்வோ, சம்பள உயர்வோ வரும். ஆனா இரவு நேரத்துல பயணம் செய்யாதீங்க. விபத்துகளுக்கு சான்ஸ் இருக்கு. சினிமாத் துறையைச் சேர்ந்தவங்க ஃபைட் சீன்ஸை கூடியவரைக்கும் ஒத்திப் போடுங்க. பொருளாதார ரீதில பிரச்னை எதுவும் வராதுன்னாலும் இப்ப யாருக்கும் கடன் குடுக்கறதோ ஜாமீன் கையெழுத்துப் போடறதோ வேணாம்.




கன்னி : *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*

தேவையில்லாத விஷயங்களுக்காக மனசை அலட்டிக்கறதை முதல்ல விடுங்க. வாழ்க்கை உங்களுக்கு இப்ப நல்ல முன்னேற்றப் பாதைல போயிட்டு இருக்கு. சங்கீதம் சினிமாத் துறையினருக்கு பல புதிய வாய்ப்புகள் வரும். வெளிநாடு சான்ஸ் கூட சிலருக்கு வரலாம். அதே சமயம் சிறு சிறு உடல் உபாதைகளும் வந்து படுத்



கன்னி ராசிக்காரரான மிருதங்க வித்வான் உமையாள்புரம் சிவராமனுக்குப் பல நல்ல வாய்ப்புகளும் வெளிநாடு போற யோகமும் வரப் போகுதாம்!

தும். வயிற்றுவலி, முழங்கால் வலி மாதிரி, வய சானவங்களுக்கு மன மகிழ்ச்சி உண்டாகறாப் பல மகன்கள் ஏதாவது நல்ல விஷயம் கொண்டு வருவாங்க. சிலருக்குத் திருமணம் கூடலாம். காதல் அனுபவங்கள் சூப்பரா ஒர்க் அவுட் ஆகும்.




துலாம் : *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம் 3-ம் பாதம் வரை)*

தன்னம்பிக்கை ஜாஸ்திங்க உங்களுக்கு. அதனாலேயே ரொம்பக் கஷ்டமான காரியங்களைக் கூட 'ப்பூ'ன்னு ஊதித் தள்ளிடுவீங்க. எதிரிங்க பணாலாயிடுவாங்க. உங்க திறமைக்குப் பல நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணம் ஒண்ணும் இப்ப இருக்கும். குறிப்பா காவல் துறையினருக்கு நீண்ட தூரப் பிரயாணம் ஒண்ணு கட்டாயம் இருக்கும். நாய், தேள் மாதிரியான ஜந்துக்கள் விஷயத்துல கவனமா இருங்க. வெளியிடங்கள்ல பரோட்டா, சமோசான்னு வெட்டாதீங்க. ஸ்டொமக் ப்ராப்ளம் வரலாம்.




விருச்சிகம் : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

அலைச்சல் அதிகமா இருக்கும். தலை சுத்தல் மாதிரி ஏதாவது பிரச்னை வரலாம். கூடிய வரைக்கும் பயணங்களைத் தவிர்த்துடுங்க. எழுத்தாளர்களுக்கு இது பிரமாதமான வாரம். ஏதாவது பரிசு கூட கிடைக்கலாம்! பணப் பிரச்னை இருக்காது. ஆனா, பிக்பாக்கெட்ல கொஞ்சம் பறி கொடுக்க நேரலாம், கவனம்! வீட்டுல ஏதோ ஒரு நல்ல காரியம் நடக்கப் போவுது. கல்யாணம் ஏதாவது நடக்க சந்தர்ப்பம் கூடி வரலாம். பெண்களுக்கு இது புதுப் புடைவை வாரம்! ஜமாய்ங்க!



தனுசு : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*


எச்சரிக்கையா இருங்க. உங்களைக் கவிழ்க்க, உங்க நண்பர்களே காத்துட்டிருக்காங்க. உங்க முயற்சிகளுக்குப் பல வடிவங்கள்ல முட்டுக்கட்டை வரலாம். பணப் பிரச்னை வரும். ஆனா, தப்பித் தவறியும் கடன் வாங்கிடாதீங்க. தண்டச் செலவுகள் எதுவும் இப்ப வேணாம். கணவன் மனைவி உறவுல ஊடல் நிறைய இருக்கும். விட்டுக் கொடுத்து நடந்துக்கங்க. சிலருக்கு வேண்டாத இடமாறுதல்கள் வரலாம்! பயணத்துல எச்சரிக்கை முக்கியம்.



மகரம் : *(உத்தி ராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*


அதிகமா உழைக்க வேண்டி வருங்க. ராத்திரி கண் விழிச்செல்லாம் வேலை பார்ப்பீங்க. கண் எரிச்சல், அலர்ஜி மாதிரியான சுகக்கேடு சிலருக்கு வரலாம். ஆபீஸ்ல யாரைப் பத்தியும் அபிப்ராயமே சொல்லாதீங்க. மேலதிகாரிகள் கிட்ட மரியாதையா நடந்துக்கங்க. கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக்ஸ் துறையில உள்ளவங்களுக்கு இது பண வரவுக்கான வாரம். பழைய பாக்கிகள் வசூலாகும். கோர்ட்ல ஏதாவது கேஸ் இழுத்தடிச்சிட்டிருந்ததுன்னா இப்ப பைசலாயிடும்.

நடக்குமென்பார், நடக்கும்!



கும்பம் : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*

மதிப்பும் கௌரவமும் 'குப்'புனு உசரப் போகுது. நீங்க எதிர்பாராத இடத்துலேருந்து பண வரவோ, புது உறவோ வந்து சேரும். வீட்டுல உற்சாகமும் மகிழ்ச்சியும் நிலைச்சு இருக்கும். பெற்றோருக்கு, மூத்த மகனால ஏதாவது நல்லது நடக்கலாம். பெண்கள் கொஞ்சம் சோர்வாகவும் அசதியாகவும் இருப்பாங்க. தலைவலி, கால் வலின்னு சின்னப் பிரச்னை ஏதாவது வரலாம். அதிகம் அலைச்சல் கூடாது. அநாவசிய வம்புகள்ல தலையிடாதீங்க.



மீனம் : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

எந்த எதிர்ப்பையும் சமாளிக்கற திறமை இருக்கும் போது என்னங்க கவலை? இது உங்களுக்கு ஏறு முகம்தான். பரீட்சை, இன்டர்வியூ எதுவானாலும் சக்ஸஸ்தான்! சிலருக்கு வெளி நாடுகள்ல வேலை வாய்ப்புக்கான அழைப்பு வரலாம். விஞ்ஞானிகள், பொறியாளர்களுக்குப் பிரமாதமான வாரம். விவசாயிகள், பெண்கள் இவர்களுக்குப் பண வரவு வழக்கத்தை விடக்கூடும். சாலைப் பயணத்துல எச்சரிக்கையா இருங்க. சிறு விபத்துக்கான ஆபத்து இருக்கு.





"பார்த்தீர்களா இந்த அவலத்தை" என்று அந்த ஓவியங்கள் முறையிட்டன. தங்கள் சோகத்தை நம்முள் இறக்கின.

அழகாகச் சுற்றப்பட்ட பரிசு உறை. அதன் உள்ளே ஒரு கல்லறை. அதன் மேல் ஓர் எலும்புத் துண்டு.

வானவில் ஒன்று தரையைத் தொட்டுக் கொண்டிருக்க, கீழே நிற்கும் மனிதர்களின் முகத்தில் மருந்துக்கும் மகிழ்ச்சி இல்லை.

மரக்கிளையில் துருத்திக் கொண்டு நிற்கும் ஒரு மனிதத் தலை.

விதவிதமான கைகள்மட்டும் ஒரு கான்வாஸ் முழுதும், "ஐயோ எங்களைக் காப்பாற்றுங்கள்," "இதைக் கேட்பாரில்லையா?" என்று அவை கதறுவதைக் காண (கேட்க) முடிகிறது.

சற்றுத் தள்ளிப் பசுமை. என்றாலும் அதை அடைய முடியாமல் இடையே மூண்டுள்ள தீ.

மனிதர்களின் எக்ஸ்ரேக்களில் கத்தி, அரிவாள், கட்டி எல்லாம் தெரிகின்றன.


மூன்று பெண் காவலர்கள். சுற்றிலும் கலவரச் சுள்ளிகள் இன்னமும் எரிய, அவர்கள் கையிலுள்ள தொப்பிகளில் காய் கறிகள் ('எரிகிற வீட்டில் சுருட்டியவரை லாபம்'!)

பாதங்களின் அடிச்சுவடுகள். அவற்றில் ரத்தம் பதிந்துள்ளன. கைகூப்பிய இரு நிழலுருவங்கள் இடையே.



இந்த ஓவியங்கள் சென்னை அருங்காட்சியக வளாகத்தில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. இவற்றை வரைந்தது பிரபல ஓவியர் சந்ரு மட்டுமல்ல; மூன்று வளைக்கரங்களும் கூட - ரேணுகா, பொற்கொடி, பெனிடா ஆகிய ஓவியக் கல்லூரி மாணவிகள். ராமநாதபுரத்தில் சமீபத்தில் கலவரம் ஏற்பட்ட பகுதிகளுக்கு நேரில் சென்று, அங்கு கண்ட காட்சிகள் மனத்தில் ஏற்படுத்திய தாக்கத்தை வண்ணங்களில் பதிவு செய்துள்





அவலங்களைச் சொல்லும் நவீன ஓவியங்கள்!

ளனர்.

மதுரை இறையியல் கல்லூரியின் ஒரு பகுதியான தலித் ஆராய்ச்சிப் பிரிவால் ஏற்பாடு செய்யப்பட்டதாம் இந்த முயற்சி.

"சென்ற வருடமே ஓவியப் பட்டறை ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நாற்பது தலித் ஓவியர்கள் கலந்து கொண்ட அந்த முயற்சிக்குக் கிடைத்த வரவேற்புதான் இந்தப் பயணத்துக்கு வித்திட்டது எனலாம். அரசியல் இல்லாமல் அங்கு சென்று பார்வையிட்டு வந்த முதல் குழு எங்களுடையதுதான். யாரிடமும் அனுமதியென்று பெறாமல் காஷுவலாகச் சென்று வந்தோம். வரும்போது நெஞ்சில் பெரும் பாரம்" என்றார் பெனிடா.

"பிரச்னைகள் முதலில் வெடித்த மேலக்கொடுமளூர் பகுதியிலிருந்துதான். வேனில் எங்கள் இரண்டு நாள் பயணத்தைத் தொடங்கினோம். தலித் மக்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குத்தான் சென்றோம். மற்றொரு தரப்பினரையும் சந்தித்திருந்தால் பிரச்னையை ஓரளவு முழுமையாகப் புரிந்து கொண்டிருக்கலாம்தான். ஆனால் அங்கெல்லாம் எங்களை அனுமதிப்பார்களா என்பதே சந்தேகமாக இருந்தது. இருந்தாலும் அவர்கள் அடித்து ஒட்டிய சில போஸ்டர்கள் தான் பிரச்னையைப் பெரும் கலவரமாக மாற்றியது என்று பேசிக் கொண்டிருந்தார்கள்" என்றார் பொற்கொடி.



''முதலில் தயங்கினார்கள். 'எதிர்த் தரப்பு ஆசாமிகள்' இல்லை யென்பதை உறுதி செய்து கொண்ட பிறகுதான் பேசினார்கள். 'நகைகள் வாங்கி வந்ததற்கு பதிலாக கத்தி வாங்கி வச்சிருந்தா சமாளிச்சிருக்கலாம்' என்றும், 'எங்க துணிமணியெல்லாம் எரிஞ்சு போச்சு. கட்டிக்க மாற்றுத் துணி கூட இல்லே' என்றும் சிலர் சொன்னபோது ரொம்ப கஷ்டமாக இருந்தது" - இது ரேணுகா.

எப்படியோ சில 'அடிவயிற்றுத் தீ' ஜ்வாலைகள் சித்திர வடிவம் பெற்று விட்டன. உருக்கமான இந்த முயற்சி எண்ணெயாய் மாறித் தீயை வளர்த்து விடாமல், மழையாய் மாறி மனங்களை மாற்றித் 'தீ'யை அணைக்க உதவினால் சந்தோஷம்தான். ●

— அருண்சரண்யா

புத்தாண்டு நாளில் 1-1-1999 மங்களம் சேர்க்கும் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா 108 கலசபூஜை

இடம் : ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா மஹா பீடம் டிரஸ்ட் அலுவலகம், 2/34, கண்ணபிரான் கோவில் குறுக்குத்தெரு, கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி, சென்னை - 600 119. Ph: 8276769. PP

தற்போது அனுபவித்து வரும் பயம், கஷ்டம், துக்கம், வறுமை, வெறுப்பு, கசப்பு, பிரிவு, ஏவல், பில்லி, சூன்யத்தினால் சங்கடங்கள் ஆகியவற்றிலிருந்து விடுபடுவதற்காக 1-1-1999 புதுஆண்டு அன்று நிறைவேறும் ஸ்ரீ ப்ரத்யங்கிரா மஹா கலச பூஜையில் இதுவரை பூர்த்தியாகாத கார்யங்களை பூர்த்தி செய்து தர வேண்டும் என்ற சத்திய சங்கல்பத்துடன் கலசம் ஸ்தாபித்து நலம் பெற அழைக்கிறோம்.

பிரதான கலசம் ரூ.1000-00 உபகலசம் ரூ.500-00 புத்தாண்டு தினத்தில் அம்பாளுக்கு மலர் வழிபாடு ரூ.300-00 அன்னதான உபயம் ரூ.1500-00 உபயதாரர்கள் உபயத்துக்கான தொகையை ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா மஹாபீடம் டிரஸ்ட் என்ற பெயருக்கு எடுத்து, டிரஸ்ட் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்துகொள்வது உத்தமம். வெளியூர் வாசிகளுக்கு பிரசாதம் பதிவு தபாலில் அனுப்பப் பெறும். சென்னை வாசிகள் நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

நிகழ்ச்சி நிரல் :- கலச பூஜை காலை 10 முதல் 12வரை. மலர் வழிபாடு 12முதல் மாலை 2வரை, மஹாபிராசாத விநியோகம்.

எல்லா சங்கடங்களிலும் கஷ்டங்களிலும் உதவிக்கு ஒருவரும் இல்லாத இடத்திலும்

கோரரூபே மஹா ப்ரத்யங்கிரா சர்வ சத்ரு பயங்கரீ
பக்தேப்யோ வரதே தேவி த்ராஹிமாம் சரணாகதம்

என்ற மந்திரத்தை மூன்று முறை ஜெபம் செய்து **தாயே, ப்ரத்யங்கிரா, என்னை காப்பாற்றி கரை சேர்ப்பாயாக,** என்று மனமுருகி ப்ரார்த்தனை செய்தால், ஞானம், பரக்ஞானம், விக்ஞானம் என்ற மூன்று கண்களால் பக்தனை பரிவுடன் பார்த்து அருள்செய்வாள். இதனால் விபத்து, அகால மரணம் நேராது. மூடத்தன்மையும் கொடிய பாவமும் சபலமும் சஞ்சலமும் விலகி அறிவும் ஆண்மையும செல்வமும் மோக்ஷமும் கிடைக்கும்.

பஞ்ச ப்ரஹமமாய் விளங்கி, ப்ருதவீ முதல் சிவன் வரை உள்ள 36 தத்துவங்களிலும் வியாபித்து நிற்கும் ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவியை சரணாகதி அடைந்து தேவையான சுக லாப ஐஸ்வர்யங்களைப் பெற்று வாழ்வாங்கு வாழ்வீர்களாக.

உலகம் வியக்கும் இந்திய டைரக்டர்!

'அட! ஒரு வேற்று நாட்டுக்காரர் நம்ம 'காந்தி' படத்தை என்ன ஒரு அழகாக, இயல்பாக எடுத்திருக்கிறார்' என்று ரிச்சர்ட் அட்டென்பரோவை நாம் பாராட்டினோம்!

இன்று 'அட! ஓர் இந்தியன் நம் அரசியைப் பற்றி என்னமாய்ப் படம் பிடித்திருக்கிறான்' என்று இங்கிலாந்து மக்கள் வியந்து போயிருக்கிறார்கள்.

முதலாம் எலிசபெத் மகாராணியின் வாழ்க்கையை இயக்கியுள்ள நம் சேகர் கபூருக்குத்தான் அந்தப் பாராட்டு. கனடாவிலும் வெனிஸிலும் பங்கேற்ற 'எலிசபெத்' திரைப்படம் விமர்சகர்களின் 'ஓஹோ'வைப் பெற்றுள்ளது.

இத்தனைக்கும் எலிசபெத் ராணியைப் பற்றி ஏற்கெனவே நான்கு படங்கள் வெளி வந்து





• எலிசபெத் படத்தில் வரும் சில காட்சிகள்...



விட்டன. இப்போதும் மெரில் ஸ்ட்ரீப்பை ராணி வேடம் ஏற்க வைத்து ஹாலிவுட்டில் ஒரு படம் தயாரிக்க உள்ளனர். பி.பி.ஸி. யிலும்கூட ராணி எலிசபெத்தை அடிப்படை

யாகக் கொண்டு ஒரு படம் தயாரிப்பது குறித்து யோசித்து வருகிறார்கள்.

இப்படி இருந்தும் 'எலிசபெத்' படம், அது வெளியிடப்பட்ட ரோம் மற்றும் லண்டன் நகரங்களில் வசூலை அள்ளிக் குவிக்க என்ன காரணம்? சரித்திரத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் உணர்வுகளுக்கும், சினிமாத்தனத்துக்கும் முன்னுரிமை கொடுத்ததும்கூட ஒரு முக்கியக் காரணமாக இருக்கக் கூடும். "பம்பாய் பயிற்சி எனக்குப் பெரிதும் உதவியது" என்று கூறும் சேகர் கபூரின் பாலிவுட் வாழ்க்கையில் பல மேடு பள்ளங்கள். இரண்டு சூப்பர் ஹிட் படங்களைக் கொடுத்தாலும் மற்றபடி பதினாறு வருடங்கள் படங்களில்லாமல் இருந்தவர். நடிகராகப் பெற முடியாத வெற்றிக் கனியை இயக்குனராகிப் பெற்றவர்.



• டைரக்டர் சேகர் கபூர்

சம்பல் கொள்ளைக்காரியும், இன்றைய எம்.பி.யுமான பூலான் தேவியின் கதையை 'பாண்டிட் க்வீன்' என்ற பெயரில் இவர் எடுத்த படம், இந்தியாவில் (ஏழு வாரங்கள் ஓடிய பிறகு!) தடை செய்யப்பட்டு விட்டது என்றாலும் உலக அரங்கில் அவருக்குப் பெரும் புகழ் அளித்தது. ஆனால் பூலான்தேவி உட்பட பலரிடமிருந்து அதற்கு எதிர்ப்பு!

'ஒருவேளை இருப்பவர்களை திரைப்படமாக்கினால் வம்பு என்றுதான் இறந்த அரசியைப் படமெடுத்தாரோ' என்று யாரும் நினைத்து விட வேண்டாம். அவர் அடுத்து இயக்கப் போகும் படம் 'தி பர்த் ஆஃப் எ நேஷன்: சௌத் ஆப்ரிக்கா' என்பது ஒருவிதத்தில் நெல்சன் மண்டேலாவின் வாழ்க்கை வரலாறுதான். இதற்காக அவரை இருமுறை சந்தித்திருக்கிறார் சேகர் கபூர்.

— குல்லூ

படங்கள் - நன்றி: 'அவுட்லுக்'

"ஏங்க, வரும்போது பிட்னி மார்க் கடலை எண்ணெய் வாங்கிட்டு வாங்க."

"பிட்னி மார்க் கடலை எண்ணெய்யா? அதுல அப்படி என்ன விசேஷம்?"

"அந்த எண்ணெய் ஒரே காரலடிக்கும். பயங்கர கசப்பாய் கசக்கும். வாயில வைக்க சகிக்காது. அதோட கலவையும் மணமும் வயித்த புரட்டிக்கிட்டு வாந்தி எடுக்க வரும். அதுல சமைச்சாதான் டேரா போட்டிருக்கிற விருந்தாளிகளை விரட்ட முடியும்?"

— அ. வைத்தியலிங்கம்





"கல்யாணப் பத்திரிகையில் என்ன பின் குறிப்பு போட்டிருக்கு?"

"சுவையான சம்பந்திச் சண்டையை பார்க்கத் தவறாதீர்கள். அரிய வாய்ப்பு என்றுதான்!"

— லலிதா செல்லப்பா

ஸ்ரீ சனீஸ்வர பகவான் தோஷ நிவாரண பூஜை
ஸ்ரீ மிருத்யுஞ்ஜெய சிவ ஸ்ரீ கார்ய மஹா பூஜை

10.10.98 சனிக்கிழமை முதல் 23.1.99 சனிக்கிழமை வரை

இடம்: ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா மஹா பீடம் டிரஸ்ட் அலுவலகம், 2/34, கண்ணபிரான் கோவில் குறுக்குத்தெரு, கிழக்கு கடற்கரை சாலை, உத்தண்டி சென்னை - 600 119. Ph: 8276769. PP

ஆயுள் காரகனான ஸ்ரீ சனீஸ்வர பகவான் ஒவ்வொருவர் ஆயுள் அமைப்பில் ராகு 18, கேது 7, சனி 19 என்று 44 வருஷங்கள் ஆட்சி செய்கிறார். அன்றாட வாழ்வில் ராகு காலம், எமகண்டம் ஸ்ரீ சனி பகவானின் காலமே ஆகும். ஒருவருடைய ஆயுள் காலத்தில் 1-8 வயது வரை அற்ப ஆயுள், 8-33 குறைந்த ஆயுள், 33-66 மத்திம ஆயுள் 66-99 வயது நீண்ட ஆயுள். இந்த காலங்களில் சனிப்பார்வையைப் பொறுத்துதான் சாம்ராஜ்யமும், சரிவும், வாழ்வும் மரணமும் நிகழ்கின்றன. சனிப்பார்வை சர்வ நாசம் என்பது முதுமொழி. சனியின் அம்சமே ராகு, கேது, காலசர்ப்ப தோஷம். இதனால்தான் சிறை வாசம், கிரிமினல் வழக்குகளில் சிக்குதல், இருட்டு, திருட்டுக் குற்றங்கள் செய்து குடும்பத்துக்கும் குலத்துக்கும் பாவத்தை மூட்டை மூட்டையாக சேர்த்தல், இயற்கைக்கு மாறான தற்கொலை, கொலை, விபத்து முறைகளில் மரணம் நிகழ்தல், குடும்ப சுகம் குறைவு, புத்ர பாக்யம் தாமதம், கூட்டு வியாபார குழப்பம், கூடா நட்பு, பிதுர் சொத்தில் வழக்கு, துஷ்ட வழியில் ஆசை, மன சாந்தி குறைவு ஆகிய குறைகள்.

இத்தகைய சங்கடங்களிலிருந்து விடுபடுவதற்கு ஒவ்வொருவரும் ஸ்ரீ சனீஸ்வர பகவானை ப்ரிதி செய்து அவர் அருளைப் பெறுவது மிக அவசியம்.

காலத்துக்கு அதிபதியாக விளங்கும் மஹா சக்தி ஸ்ரீ ப்ரத்யங்கிரா தேவியின் சந்நதியில் ஸ்ரீ சனீஸ்வர பகவான் யந்திரம் ஸ்தாபிக்கப் பெற்று - 106 நாட்களும் காலை 10 முதல் 12 வரை பூஜை நிறைவேறும். பரிகார பூஜை செய்ய விரும்புவோர் ரூ. 500.00 ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜெய பூஜை ரூ. 500.00 இரண்டுக்கும் சேர்த்து ரூ. 1000.00 டிராப்டை ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா மஹா பீடம் டிரஸ்ட் பெயரில் எடுத்து அனுப்பி வசதியான நாளை குறிப்பிட்டு ஜாதகம், பெயர், குறைகள், மிகத் தெளிவாக தபால் முகவரி ஆகியவற்றுடன், டிரஸ்ட் முகவரிக்கு அனுப்ப வேண்டும். நேரில் கலந்து கொள்ள முடியாதவர்களுக்கு பரிகார பூஜை செய்து பதிவு தபாலில் பிரசாதம் அனுப்புவோம்.

சத்ரு ஜெயம் என்னும் மங்களத்தை தரும் ஸ்ரீ மஹா ப்ரத்யங்கிரா யாகம், அகால மரணம், விபத்து வராமல் காப்பாற்றும் ஸ்ரீ ம்ருத்யுஞ்ஜெய யாகம் ஆகியன சில குறிப்பிட்ட ஞாயிறு கிழமைகளில் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. காரண நிமித்தமாக உபயம் செய்வோர் மட்டும் நேரில் தொடர்பு கொள்க.

83 குறையொன்றுமில்லை

குறையொன்றுமில்லை

குறையொன்றுமில்லை

பாழுங்கிணற்றுக்குள்ளே வாய் பிளந்திருக்கிற பாம்பு நம்மைப் பீடிக்கிற வியாதி! ஏகப்பட்ட, நூதனமான வியாதிகள். எத்தனையோ நம்மைப் பார்த்து வாயைப் பிளக்கின்றன. முதுமையும் வியாதியும் கிட்டே நெருங்குகின்றன.

இந்த வியாதிகளை நாம் வெறுமனே விடுகிறோமா...? இதிலே அவர் நிபுணர்; அதிலே இவர் நிபுணர் என்று மருத்துவரிடத்திலே போய்க் காண்பிக்கிறோம். அப்படி மருத்துவரிடத்திலே காண்பிப்பது, கிணற்று விளிம்பிலே இருக்கிற மரத்துக் கிளையை எகிறிப் பிடித்துக் கொள்ள முயற்சி பண்ணுகிற மாதிரிதான். என்னதான் மருந்தை நாம் வாங்கிச் சாப்பிட்டாலும் என்னதான் புஷ்டியான ஆகாரங்களைச் சாப்பிட்டாலும் நமக்கு விதிக்கப்பட்டதற்கு மேல் ஒருகணம் நாம் இருக்க முடியுமா...? க்ஷணே க்ஷணே ஆயுட்காலம் குறைந்து கொண்டே இருக்கிறது என்பதைத்தான் இரண்டு பெருச்சாளிகள் துருவித் துருவிக் காண்பிக்கின்றன.

ஒன்று: காலம்; இன்னொன்று மிருத்யு! இரண்டும் துருவித் துருவி ஆயுளை அரிக்கின்றன. நாம் என்னதான் மருந்தை வாங்கிச் சாப்பிட்டாலும் வாங்கிய மருந்தில் என்ன பார்க்கிறோம். முதலில் உற்பத்தி தினம், அப்புறம் முடிவு தினம். அதற்கு மேல் உபயோகப்படுத்தக் கூடாது அதை. அதற்கு வீர்யம் கிடையாது. அதேபோல் சரீரத்துக்கும் பகவான் வைத்திருக்கிறான். இது உற்பத்தி நாள்; இது முடிவு நாள்! ஆனால் மருந்தில் எழுதியிருப்பது போல இது கண்ணுக்குத் தெரியாது!

உற்பத்தி தினமும் முடிவு தினமும் எழுதப் பெற்ற மருந்தை வாங்கி, அதே போல உற்பத்தி தினமும் முடிவு தினமும் குறிக்கப்பட்ட நம் உடம்புக்கு இடுகிறோம். அதனால் இது தாற்காலிகமேயொழிய நிரந்தரம் இல்லை என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

ஆக, கிணற்று விளிம்பின் மரக்கிளையைப் பிடித்துக் கொள்வது மருத்துவரை நாடிப் போவதுதான்.

இதற்கிடையிலே ஆயிரமாயிரம் தேனீக்கள் கொட்டுகின்றனவே... அவை என்ன? அவைதான் பந்து மித்ராதிகள்; உற்றார் உறவினர்கள் – 'சுரீர் சுரீர்' என்று பாதாதிகேசம் நம்மைக் கொட்டிக் கொண்டேயிருப்பார்கள். இத்தனைக்கு நடுவிலே நாம் காணும் ஆனந்தம் என்பது... அந்த ஒரு துளி தேன்! அதைச் சுவைத்து, "அடடா! என்ன இனிமை! என்ன மதுரம்!" என்று ஒருவர் சொன்னால் எப்படியிருக்குமோ அப்படித்தான் நாம் அல்ப விஷயங்களிலே ஈடுபட்டு அவற்றைப் பெரிதாக நினைத்துக் கொண்டிருக்கிறோம்... சாச்வதமான நித்யானந்தத்தைக் கொடுக்கக் கூடியவன் எம்பெருமான் ஒருவன்தான் என்று உணர்ந்து அவன் திருவடியிலே ஈடுபட வேண்டும்.

அல்பத்வம், அஸ்திரத்வம் என்ற இரண்டு துன்பங்களைச் சொன்னேன். அடுத்தது துக்க மூலத்வம். ஒரு விஷயத்தை நாம் அடையும் முன்பு அந்த முயற்சியில் ஏற்படுகிற துக்கம்தான் துக்க மூலத்வம். அவ்விஷயத்தை அடைந்த பிற்பாடு அதை அனுபவிக்கிறபோது ஏற்படக் கூடியது துக்க மிச்ரத்வம் என்கிற துக்கம். அப் பொருளை இழந்த பிறகு அடைகிற துக்கம் துக்கோதர்கத்வம்.

எல்லோருக்குமே சுலபமாகத் தெரியும் - பொருளைச் சம்பாதிப்பதற்கு முன் ஏகப்பட்ட துக்கம். ரொம்ப கஷ்டப்பட்டு, சிரமப்பட்டு உடம்பை வருத்தி, அந்தப் பொருளை ஈட்ட வேண்டியிருக்கிறது.

அந்தப் பொருளை ஒவ்வொரு க்ஷணமும் வைத்துக் காப்பாற்றுவது எவ்வளவு துக்கத்தை - துன்பத்தை ஏற்படுத்துகிறது! பொருள் போய் விட்டால் எத்தனை துக்கம்!

ஆகையினால் பொருளானது பரமார்த்தம் இல்லை. அன்னம் பரமார்த்தமில்லை, தன்னைச் சேர்ந்தவை பரமார்த்தம் இல்லை... உலகிலே இப்படியே நாம் பார்த்துக் கொண்டே போனோமானால், எந்த வஸ்துவும் பரமார்த்தமில்லை... எதை நாம் தொட்டாலும் இந்த மூன்றும் இருந்து கொண்டே யிருக்கும். பகவத் விஷயத்தில் மட்டும்தான் இந்த மூன்று தோஷமுமில்லை.

அதற்கும் மேலே நாம் பார்த்தோமானால், இயற்கையாகவே பகவானை அனுபவிக்கக் கொடுத்து வைத்தவர்கள் நாம்... அந்த ஆனந்தானுபவம் நமக்கு உண்டு. ஆனால் பிரகிருதி சம்பந்தத்தினாலே அந்த ஆனந்த அனுபவம் நமக்கு விட்டுப் போய் விட்டது. அதை உணர்ந்து அவன் திருவடியிலே நாம் ஈடுபட



அருள்வாக்கு



பதினான்கு உலகங்களும் ஒரு ராஜ்யம். இந்த ராஜ்யத்திற்கு ஒரு சக்ரவர்த்தி. அந்த சக்ரவர்த்திக்கு எல்லா ஜீவராசிகளும் பிரஜைகள். ராஜ்யமும் அநாதி, சக்ரவர்த்தியும் அநாதி. ராஜ்யமும் சக்ரவர்த்தியும் பிரஜைகளும் இருந்தால் அதற்கு ஒரு சட்டம் வேண்டும். இவைகள் எல்லாம் அநாதியானால், சட்டமும் அநாதி. அந்த அநாதி சட்டமே வேதம். இவற்றில் ராஜ்யமான பிரபஞ்சத்தை "அநாதி" என்றாலும், அவ்வப்போது அதற்கு உற்பத்தி உண்டு; அழிவும் உண்டு. சக்கரவர்த்தியான பரமாத்மாவும், சட்டமான வேதமுமே சாச்வதம்.

உலகம் உற்பத்தி ஆகிறது, வளர்கிறது, பிரளயம் அடைகிறது, திரும்பவும் உற்பத்தி ஆகிறது, வளர்கிறது, பிரளயம் அடைகிறது. சக்ரவர்த்தியும் சட்டமும் மாத்திரம் ஸ்திரம். ஒவ்வொரு ஸ்ருஷ்டியின் ஆரம்பத்திலும், அந்த சக்ரவர்த்தி அதிகார புருஷர்களை சிருஷ்டி செய்கிறான். அந்த அதிகாரிகளுக்கு வேண்டிய யோக சக்தியைக் கொடுக்கிறான். யோக சாஸ்திரத்தில் தன் ச்ரோத்திரத்திற்கும் வெளி ஆகாசத்திற்கும் அபேதமான ஒரு ஸாம்யம் உபதேசிக்கப்பட்டிருக்கிறது. அதை அநுஷ்டிக்கும் போது திவ்ய ச்ரோத்திரம் கிடைக்கிறதாம். அந்த திவ்ய ச்ரோத்திரத்தைக் கொண்டு வெளி ஆகாசத்தில் ஸ்திரமாய்க் கிடக்கும் அநாதி சப்த அலைகளை ஈசனுடைய அருள் சகாயத்தால் அந்த அதிகார புருஷர்கள் அடைகிறார்கள். அவர்களே முதல் முதலில் வேதத்தை அறிந்தவர்களாகிறார்கள். அவர்களே மந்திரத்திற்கு மஹரிஷிகள்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய சுவாமிகள்

வேண்டும்.

இந்த பிரகிருதி சம்பந்தம் சாஸ்வதம் என்று நினைத்தோமானால், இந்த உலகத்தில் இருக்கக் கூடியது பெரிதென்று நினைத்தோமானால் அதனால் ஏற்படக் கூடியது துக்கம் தான். ஆகையினால், பிரகிருதி சம்பந்தத்தை அடியோடு ஒதுக்க வேண்டும்.

ஆனந்தன், ஆனந்தமயன், அவன்.... அவனை அனுபவிக்க வேண்டும் என்ற எண்ணம் வர வேண்டும். ஆனால், அதற்கு மேலே பாருங்கள்... சுவாபாவிகமாக, இயற்கையாக நாம் அவனை அனுபவிக்கக் கூடியவர்களாக இருந்தாலும் புண்ய-பாவங்கள் அதற்குத் தடையாக இருக்கின்றன. அந்தத் தடையை நீக்கிக் கொள்வதற்கும் அவன் திருவடியைத்தான் பற்றிக் கொள்ள வேண்டும்.

இப்படி, புண்ய பாவங்களும் துக்கம், பிரகிருதி சம்பந்தமும் துக்கம். ஆனந்தத்துக்குத் தடையாக இருக்கிற பிரகிருதி சம்பந்தம் துக்கம்... இப்படி எல்லாமே துக்கமாக இருப்பதனாலே ஏழு தோஷங்கள் அவற்றில் இருக்கின்றன. அவற்றை அறவே தவிர்த்து, எம்பெருமான் திருவடியைப் பற்றி, அவன் வடிவழகிலே ஈடுபட்டு, அவனையே பூரணமாய் ஆச்ரயித்து அவனையே வேண்ட வேண்டும். 'நீயே எனக்கு வேண்டும்; அதுதான் சாஸ்வதம்!" என்று கேட்க வேண்டும்.

'அக்னியே நீ என்னை முன்னுக்கு அழைத்துச் செல்' என்ற பிரார்த்தனை வேதத்தில் வருகிறது... அப்படியென்றால் என்ன...? உபநிஷத் சொல்கிறது:

'எவனுக்கு அக்னியானது சரீரமாக இருக்கிறதோ, எவனுக்கு வாயுவானது சரீரமாக இருக்கிறதோ...' என்று இப்படிச் சொல்லிக் கொண்டே போய் 'அக்னிக்கு அந்தர்யாமியானவன் பகவான்' என்கிறது.

ஆகையினாலே இங்கே 'அக்னி'யே! என்று அழைத்தோமானால் பகவானையே குறிக்கிறது.

விஜயநகர சமஸ்தானத்தைச் சேர்ந்த வித்யாரண்யர், சுவாமி தேசிகனுடைய உயர்ந்த பாண்டித்யத்தைப் பார்த்து, 'இந்த விஜயநகர

சமஸ்தானத்திலே ஆஸ்தான வித்வானாகத் தாங்கள் இருக்க வேண்டும்' என்று கேட்டு எழுதினார்.

அதற்கு சுவாமி தேசிகன் பதில் எழுதினார்.

ஒரு பூமி... பூமியிலே ஒரு மூலை. அந்த மூலையைப் பரிபாலனம் பண்ணுவதனாலேயே பெரிய சக்ரவர்த்தி என்று மனத்திலே கர்வங் கொண்டிருக்கும்படியான ஒரு சாமான்ய அரசனை நான் பாட மாட்டேன். சமஸ்த ஐச்வர்யமும் அவன் திருவடியே எனக்குத் தரும் என்பதால் மானுடனைப் பாடேன்... என்று சொல்லி விட்டார்!

'வயிறு என்ன வயிறு அது!' அந்த வயிற்றுக்காக ஒருத்தரைப் போய் இந்திரன் – சந்திரன் என்று இல்லாததையும் பொல்லாததையும் சொல்லி பல் வரிசையைக் காட்ட மாட்டேன்' என்று சொல்லி விட்டார்!

உஞ்ச விருத்தி, அஜகர விருத்தி என்று சொன்னேனில்லையா... அதைப் போல் இன்னொரு வகையான ஜீவனமும் உண்டு:

சிலம் என்றால் அறுவடையான நிலத்திலே சிந்தியிருக்கிற தானியம். அதைச் சிறு பறவைகளெல்லாம் எடுத்துக் கொண்டு போய்ச் சாப்பிடும். இப்படிக் கீழே விழுந்தவற்றைத் திரட்டி எடுத்துப் போய், அதைச் சமைத்துச் சாப்பிடுவார்கள் மகான்கள். ஒருத்தரிடம் போய் கை நீட்டிக் கேட்க மாட்டார்கள்.

'அந்த ஒரு பிடி சாதம் பசியைத் தணிக்கப் போதாதோ? ஒரு முழம் துணி மான சம்ரக்ஷணத்துக்குப் போதாதா...? அதை விடுத்து, அதற்காகப் பலரிடத்தில் போய் யாசிக்க வேண்டுமா...?'

அதனால் 'எம் பெருமானைத் தவிர, வேறு எதையும் நாட மாட்டேன். நானாக சம்பாதித்தது எதுவுமில்லை; என் பூர்வர்கள் வைத்தது எதுவுமில்லை, சர்வ லோக பிதாமகரான பிரும்மா, யக்ஞம் பண்ணுகிறபோது அந்த வபா ஹோமத்திலே தோன்றினானே அத்திகிரி வரதன்... அந்த வரதன் தவிர வேறு ஐச்வர்யம் எனக்கு வேண்டாம்' என்று சொல்லி விட்டார் சுவாமி தேசிகன்.

சுவாமி தேசிகனின் வைராக்கியத்துக்கு எடுத்துக்காட்டாய் ஒரு வரலாறு சொல்வது உண்டு: அவர் வீதி வலம் வருகிற போது ஒரு கிரஹத்திலே – தனிகனுடைய கிரஹத்திலே – தங்கத்தால் அரிசி பண்ணி அவர் மடியிலே கொட்டி விட்டார்கள்! ஏற்கெனவே சில இடங்களில் அரிசி விழுந்திருந்தது. இந்த சுவர்ண அரிசி விழுந்தவுடனே பார்த்தார்... 'ஐயோ! பகவானுக்கு நைவேத்தியம் பண்ண வேண்டிய அரிசியிலே புழுவைக் கொட்டி விட்டார்களே!' என்று அதை அங்கேயே, அந்த வீட்டு வாசலிலேயே சேர்த்து விட்டார்!

அப்படிப்பட்ட வைராக்கிய சீலர் அவர் என்றால் அவர் மனைவியும் அவருக்குச் சமமான வைராக்கியத்துடன் வாழ்ந்தவர்.... வேறு கிரகங்களில் சுவாமி அரிசி சேர்த்துக் கொண்டு போய் அவளிடம் தந்தபோது என்ன கேட்டாள் தெரியுமோ...?

(தொடரும்)



''அம்மா, இப்ப நவம்பர் பத்தாவது மாதம்தானே?''

''ஆமாண்டா கண்ணு, ஏன் கேட்கறே?''

''பக்கத்தாத்து மாமி, அக்காவை 'இது எத்தனையாவது மாதம்' என்று கேட்டார். 'நாலாவது மாசம்'னு பதில் சொல்றாளே!''

– லலிதா செல்லப்பா

''உன் மாமியார் வாயை மட்டும் அசைக்கறா... வார்த்தை கேட்க மாட்டேங்கறதே?''

''அது என்னை நோக்கி வீசப்படுற 'சென்சார்' பண்ண வேண்டிய வார்த்தைகளாம்!''

– அம்பை தேவா



நந்தகுமாரன்

திடீரென்று கடைகள் ஒவ்வொன்றாய் மூடப்பட்டுக் கொண்டிருந்தன. மக்கள் பீதியுடன் அங்கும் இங்கும் ஓடிக் கொண்டிருந்தார்கள். சைக்கிளில் வந்து கொண்டிருந்த மோகன் சைக்கிளை விட்டு இறங்கினான். அவன் வேலை செய்யும் கூரியர் அலுவலகம், அவன் இருக்கும் இடத்திலிருந்து அரை கிலோ மீட்டர் தூரத்தில் இருந்தது.

கலவரம் நடப்பதைப் பார்த்தால், அலுவலகத்திற்குப் போக முடியாது என்றே தோன்றியது அவனுக்கு. பிறகு போய்க் கொள்ளலாம் என்று சைக்கிளைத் திருப்பினான். அப்போது வேகமாக கைக் குழந்தையுடன் வந்த ஒரு பெண் அவன் மீது மோதினாள். அந்த அதிர்ச்சியில் அவன் சைக்கிளை தவற விட்டான்.

"பார்த்து வரக் கூடாதும்மா?" என்றவன், அந்தப் பெண்ணின் முகத்தைப் பார்த்ததும், "செல்வி நீயா?" என்றான்.

"ஸாரிங்க" - என்று சொல்லிய அவள், "எப்படி இருக்கறீங்க?" என்று கேட்டாள்.

''நல்லா இருக்கேன்'' - என்று சொல்லிக் கொண்டே கீழே விழுந்த சைக்கிளை தூக்கி நிறுத்தினான்.

"நிற்காதீங்க. சீக்கிரம் வாங்க. அரிவாள், தடி, கம்பு வச்சிக்கிட்டு சில பேர் போறவங்க, வர்றவங்களையெல்லாம் துரத்தித் துரத்தி அடிச்சுக்கிட்டு வர்றாங்க" - என்றாள், அவள் மூச்சு வாங்கிக் கொண்டே.

"என்ன பிரச்னை?"

''பக்கத்து தியேட்டர்ல சினிமா பார்க்கும் போது தகராறாம். அப்போ தியேட்டர் முதலாளி பையனை சிலர் வெட்டிட்டு இருக்காங்க. தியேட்டர்காரங்க அடிச்சவங்க யார்னு பார்த்து, அவங்க ஊருக்குப் போய் தாக்கியிருக்காங்க. அது ஜாதிக் கலவரமாயிட்டுது. சீக்கிரம் வாங்க போகலாம்'' - என்று அவள் அவசரப்படுத்த, சைக்கிளை வேகமாக தள்ளிக் கொண்டு அவளுடன் நடந்தான்.

"இது உன் குழந்தையா?" குழந்தையைப் பார்த்துக் கேட்டான்.

"பார்த்தாத் தெரியலை. என் குழந்தை தான். வீட்டுக்காரர் மில்லுல வேலை செய்யறார். நீங்க என்ன பண்றீங்க?"

"ஆல் இந்தியா கூரியர் சர்வீஸ்ல வேலை செய்யறேன். டெலிவரிக்கு போய்ட்டு வரும் போது இப்படி ஆயிட்டுது. இனிமேல் எங்கே ஆபீஸ் போறது? ஆபீஸ் மூடிட்டு இருப்பாங்க. வீட்டுக்குப் போக வேண்டியது தான்."

''நம்ம ஊர்லயிருந்தா வேலைக்கு வர்றீங்க?"

"அங்கேயிருந்து வந்தால் கட்டுப்படியாகுமா? இங்கேதான் அக்கா வீட்ல தங்கியிருக்கேன்."

அவர்கள் நடந்து வந்து கொண்டிருந்த போது, பின்னால் ஆயுதங்களுடன் ஒரு கூட்டம் ஓடி வந்து கொண்டிருந்தது.

''பின்னால ஆளுங்க ஓடி வர்றாங்க. அவங்க ஓடி வர்றதைப் பார்த்தால்,





பழைய சிநேகமும் புதிய ஒரு ஆரம்பம்

குழந்தையை வச்சுக்கிட்டு அல்லல் பட்டிருக்கணும்'' - என்று பேச்சை ஆரம்பித்தாள் அவள்.

"நீ பத்தாவதோடு படிப்பை நிறுத்திட்டே இல்ல?''

"ஆமாம், நீங்க?''

''டிகிரி படிச்சிருக்கேன். நல்ல வேலை இன்னும் கிடைக்கலை. அதுதான் கூரியர் சர்வீஸ்ல வேலை செய்துக்கிட்டு இருக்கேன். சர்வீஸ் கமிஷன் இண்டர்வியூ அட்டெண்ட் பண்ணியிருக்கேன். வேலை கிடைக்குதான்னு பார்ப்போம்.''

''கல்யாணம் ஆயிட்டுதா?''

''இன்னும் இல்லை. அரசாங்க வேலை கிடைத்தால்தான் பொண்ணு தேடுவோம்னு வீட்ல சொல்லிட்டாங்க.''

"அப்போ கல்யாணச் சாப்பாடு போடறதுக்கு ரொம்ப நாள் ஆகும்னு சொல்லுங்க'' - அவள் சிரித்தாள்.

"ஆகலாம்'' - என்று அவனும் சிரித்தான்.

மோகனும், செல்வியும் ஆறாம் வகுப்பிலிருந்து பத்தாம் வகுப்பு வரை ஒன்றாகப் படித்தவர்கள். பக்கத்து பக்கத்து வீடு. அவளுடைய அத்தைக்கு குழந்தை இல்லாததால், அத்தை வீட்டில் தங்கிப் படித்தாள். சொத்து விஷயமாக செல்வியின் அத்தைக்கும், அவள் அப்பாவுக்கும் பிரச்னை வர, அவளுடைய அப்பா செல்வியை சொந்த ஊருக்கு அழைத்துச் சென்று விட்டார். அதன் பிறகு மோகன் இப்போதுதான் அவளைப் பார்க்கிறான்.

கண்ணுல படறவங்களையெல்லாம் அடிப்பானுங்க போலிருக்கு. வீடு எங்கே இருக்கு? நான் வேணும்னா சைக்கிள்ல கொண்டு வந்து விடறேனே?'' என்றான் மோகன்.

அவள் குழந்தையுடன் சைக்கிளில் ஏறி அமர்ந்து வழி சொன்னாள்.

"நான் உங்களை இங்கே பார்ப்பேன்னு கொஞ்சம் கூட எதிர்பார்க்கலை. நல்ல வேளை நீங்க வந்தீங்க. இல்லைன்னா நான்

வீட்டருகில் சைக்கிளை நிறுத்த அவள் குழந்தையுடன் இறங்கிக் கொண்டாள்.

"அப்போ நான் வர்றேன் செல்வி'' - அவன் புறப்படத் தயாரானான்.

"அட இவ்வளவு தூரம் வந்துட்டு, வீட்

டுக்கு வராமல் போறீங்களே. வாங்க காப்பி சாப்பிட்டுப் போகலாம்" என்று அவனை அழைத்தாள்.

"செல்வி, உன்னைத் தேடிக்கிட்டு இப்பத் தான் உன் வீட்டுக்காரர், சைக்கிள் எடுத்துக் கொண்டு போனார். இந்தா சாவி" என்று பக்கத்து வீட்டுப் பெண் சாவி கொண்டு வந்து கொடுத்தாள். அவள் புன்முறுவலு டன் சாவியை வாங்கி, கதவைத் திறந்தாள்.

"சார் யாரு? உங்க சொந்தமா?" – என்று மோகனைப் பார்த்துக் கொண்டே அந்தப் பெண் மெதுவாகக் கேட்டாள்.

"ஆமாம். பஜார்ல கலாட்டா. இவர்தான் பாதுகாப்பா கூட்டிட்டு வந்தாரு."

"அப்படியா?" – என்று கூறிவிட்டு அந்தப் பெண் மோகனை ஏற இறங்கப் பார்த்தாள்.

"உள்ளே வாங்க" – மோகனை அழைத் தாள்.

அந்தப் பெண் வாசலில் நிற்பதைப் பார்த்த செல்வி, 'ரொம்ப தேங்க்ஸ்ங்க' என் றாள். அதன் பிறகே அந்தப் பெண் தன் வீட்டிற்குப் போனாள்.

அவள் ஃபேனையும், லைட்டையும் போட்டு விட்டு, குழந்தையைப் படுக்கையில் கிடத்தி விட்டு வந்தாள்.

"உட்காருங்க" – சேர் கொண்டு வந்து கொடுத்தாள்.

அவன் உட்கார்ந்தான்.

சிறிது நேரத்தில் காப்பி வந்தது. அவன் சங்கோஜத்துடன் காப்பியை வாங்கிப் பருக ஆரம்பித்தான். மௌனத்தை உடைக்கும் விதமாய் அவனது பெற்றோர் பற்றி விசாரித்தாள்.

அவன் காப்பி அருந்தி விட்டு "புறப் படட்டுமா?" என்றான்.

வாசலில் சைக்கிள் நிற்கும் சத்தம். எட் டிப் பார்த்தாள். அவள் கணவன் சந்திரன் வந்திருந்தான்.

"எப்படி வந்தே? பஜார்ல கலாட்டா வாச்சே. சைக்கிள் யாருது?" – வாசலி லிருந்து கொண்டே கேட்டான்.

"உள்ளே வாங்க சொல்றேன்."

உள்ளே நுழைந்த சந்திரன், மோகனைப் பார்த்ததும் புருவம் உயர்த்தினான்.

"இவர் என் கூட படிச்சவரு. அத்தை வீட்டுக்குப் பக்கத்து வீடு. இங்கே ஆல் இந்தியா கூரியர் சர்வீஸ்ல வேலை செய் யறாரு. இவர்தான் என்னைக் கூட்டிட்டு வந்தாரு" – மோகனை, சந்திரனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

"வணக்கம் சார்" – என்றான் மோகன்.

"வணக்கம். வந்து ரொம்ப நேரம் ஆச்சா?" என்றான் சந்திரன் மோகனை பார்வையால் அளந்து கொண்டே.

"பத்து நிமிஷம்தான் ஆகுது. அப்போ நான் கிளம்பறேங்க" – அவன் இருவரையும் பார்த்தான்.

"காப்பி சாப்பிட்டீங்களா?" – என்று காலியான காப்பி தம்ளரை பார்த்தான் சந்திரன்.

"ம். சாப்பிட்டாச்சு" – அவன் புறப்படத் தயாரானான்.

"சாப்பிட்டுப் போகலாமே" – என்றாள் செல்வி.

அவள் இந்தக் கேள்வி கேட்டதும், அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தான் சந்திரன்.

"சாருக்கு அவசரமா வேலை இருக்கு போலிருக்கு. அதுதான் புறப்பட்டுட்டார்" – என்றான் சந்திரன். மோகன் எங்கே சாப்பிட தங்கிவிடப் போகிறானோ என்று.

"இன்னொரு நாளைக்குப் பார்க்க லாங்க" – அவன் புறப்பட்டான்.

சைக்கிளை எடுத்துக் கொண்டு கொஞ்ச தூரம் போன பின்புதான், ஹாண்ட்பேக்கை செல்வி வீட்டில் விட்டு விட்டு வந்தது மோகனுக்கு ஞாபகம் வந்தது.

திரும்ப செல்வி வீட்டுக்கு வந்து அழைப்பு மணியை அழுத்தத் தயாரான மோகன், அவனைப் பற்றி சந்திரனும் செல்வியும் காரசாரமாக பேசுவதைக் கேட்டதும், அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று கவனிக்க ஆரம்பித்தான்.

"நான்தான் வர்றேன்னு சொன்னேன் இல்லே? எதுக்குடி அவன் சைக்கிள்ல வர ணும்? பார்க்கிறவங்க என்ன நினைப் பாங்க?" – இது சந்திரன்.

"அவர் இல்லைன்னா, நானும் உங்க பையனும் அந்த ரௌடி கும்பல்கிட்ட மாட் டிக்கிட்டு இருந்திருப்போம். பத்திரமாக கூட் டிட்டு வந்தாரே. அவருக்கு ஒரு நன்றி யாவது சொன்னீங்களா?" – இது செல்வி.

"சரி. கூட்டிட்டு வரட்டும். தெரு முனை யிலேயே இறங்கிக்கிட்டு அவனை அனுப் பிட வேண்டியதுதானே. வீட்டு வரைக்கும் கூட்டிட்டு வந்து அவனுக்குக் காப்பி வேற கொடுத்து அனுப்பறே?"

"என் கூடப் படிச்சவரு. தெரிஞ்சவரு. வீட்டுக்குக் கூட்டிட்டு வந்தது என்ன தப்பு?"

"அவனைப் பார்த்தால் ஒரு மாதிரியான

ஆள் மாதிரி தெரியுது. இனிமேல் அடிக்கடி வீட்டுக்கு வரப் போறான் பாரு."

"அவர் ஜென்டில்மேன். அப்படியெல்லாம் பேசாதீங்க."

"அவன் ஜென்டில்மேன்னு உனக்கு எப்படித் தெரியும்?"

அவள் பதில் பேசவில்லை. மௌனமாக இருந்தாள்.

அதற்கு மேல் மோகன் அங்கே நிற்கவில்லை. ஹாண்ட்பேக் போனால் போகட்டும் என்று சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டான். ஹாண்ட் பேக்கில் செலவுக்காக வைத்திருந்த புதிய ஐநூறு ரூபாய் நோட்டு இருந்தது. அதுதான் கவலையாக இருந்தது அவனுக்கு. எப்படியாவது அந்த ஹாண்ட்பேக் வந்து சேர்ந்து விடும் என்று நினைத்தவனாய், சைக்கிளை வேகமாக மிதித்தான்.



"ஆபீஸ்ல எனக்கும் மானேஜருக்கும் பனிப்போர்!"

"ஏன்?"

"ஆபீசில தூங்கறதுக்கு ஏ.சி. ஒரு கேடான்னு அணைச்சுட்டுப் போயிட றாரு!"

— அம்பை தேவா

மறுநாள் மதியம் மோகன் சாப்பிட்டு விட்டு, கடையில் வாழைப்பழம் வாங்கிக் கொண்டிருந்தான். அப்போது சந்திரன் இரண்டு நபர்களுடன் பக்கத்திலிருந்த ஒயின்ஷாப்பிலிருந்து வெளிப்பட்டான்:

"என்ன சந்திரன் நேற்று வரைக்கும் பணம் இல்லைன்னு சொல்லிக்கிட்டு இருந்தே. இப்ப எப்படிப் பணம் வந்தது? புது ஐநூறு ரூபாய் நோட்டை எடுத்து விட்றே?" என்றான் சந்திரனின் கூட வந்த ஒருவன்.

"அட, நீ ஒண்ணு. நேற்று என் வீட்டுக்கு என் பொண்டாட்டிக்கு தெரிந்தவன்னு ஒருத்தன் வந்திருந்தான். அவன் போகும் போது ஹாண்ட்பேக்கை விட்டுட்டுப் போயிட்டான். அதில பார்த்தால் ஐநூறு ரூபாய் நோட்டு" – சந்திரன் சொல்லிக் கொண்டே சிரித்தான்.

சந்திரன், அவனுடைய ஹாண்ட்பேக்கை தன்னுடைய அலுவலகத்திற்குக் கொண்டு வந்து கொடுப்பான் என்று நினைத்திருந்த மோகனுக்கு, சந்திரன் இவ்வாறு சொன்னது அதிர்ச்சியாக இருந்தது.

இந்த விஷயத்தைச் செல்வியிடம் சொல்லலாமா என்று யோசித்தவன், சொன்னால் செல்வியின் மனசு சங்கடப்படும் என்று விட்டு விட்டான்.

அலுவலகம் வந்தவனிடம், 'பாரதி நகர்' ஒரு டெலிவரி இருக்கு. போயிட்டு வர்றியா?" என்று ஒரு கவரை நீட்டினான் அவனுடன் பணிபுரியும் சேகர்.

கவரை வாங்கியவன் பெறுநர் முகவரியைப் பார்த்தான்.

செல்வி, க/பெ. சந்திரன், 3, இரண்டாவது தெரு, பாரதி நகர் என்றிருந்தது.

"நான் டெலிவரி போகலை சேகர். யாரிடமாவது கொடுத்து அனுப்பு" என்றான் அவன் விரக்தியாக.

"ஏன்?" – என்றான் சேகர்.

"உடம்பு சரியில்லை. நான் அரை நாள் லீவு போடப் போறேன்" என்றான் அவன் பொய்யாக.

இரண்டு நாள் போன பின்பு, மதிய வேளையில் மோகன் அலுவலகத்திலிருந்த போது செல்வி வந்தாள். அவள் கையில் அந்த ஹாண்ட் பேக்.

"வா செல்வி" – வரவேற்றான்.

"ஹாண்ட்பேக்கை வச்சுட்டு வந்திட்டீங்களே" என்று அந்த ஹாண்ட்பேக்கை நீட்டினாள்.

"மறந்தே போயிட்டேன்" என்று வாங்கிக் கொண்டான்.

"நான் வர்றேன்" – அவள் புறப்பட்டாள்.

"காப்பி சாப்பிட்டுப் போகலாமே?"

"இல்லை. நான் அவசரமாக போகணும். அவன் பதிலைக் கூட எதிர்பார்க்காமல் அவள் கிளம்பினாள்.

அப்போதுதான் அவன் கவனித்தான். அவள் காதிலிருந்த கம்மலைக் காணவில்லை.

அவன் அவசரமாக ஹாண்ட்பேக்கை திறந்து பார்த்தான். அதில் ஐந்து நூறு ரூபாய் நோட்டுக்கள்.

ஹைர ஹைர ஹைரோப்பா — 4

அடுத்து ஆம்ஸ்டர்டாம் விசிட் என்று முடிவு செய்தோம். ஜூடர்மியர் ரயில்வே ஸ்டேஷனிலிருந்தே ஆம்ஸ்டர்டாமுக்கான டிக்கெட் மட்டுமின்றி, அங்கு நாங்கள் செல்லவிருந்த போட் ரைட் (Boat ride), மியூசியம்... இன்னும் சில இடங்களுக்கான டிக்கெட்டுகளைக் கூட எடுக்க முடிந்தது - இதை 'காம்பி டிக்கெட்' என்கிறார்கள்.

ஜூடர்மியர் ரயில் வேஸ்டேஷனுக்குச் சென்றால், நமக்கென்றே ரயில் விடுகிறார்களோ என்ற சந்தேகமே ஏற்பட்டு விட்டது! ஹீட்டர் வசதியுடனிருந்த கண்ணாடிக் கூண்டில் நாங்கள் மட்டுமே குளிர் காய்ந்து கொண்டிருந்தோம்! நிறைய நேரத்துக்குப் பிறகு நாயுடன் ஒரு மனிதர் எஸ்கலேட்டரில் இறங்குவதைப் பார்த்து – "ஹா... இன்னொருவர் வருகிறார்'' என்று குதிக்குமளவுக்கு ஏகாந்தம்!



• ஆம்ஸ்டர்டாம் நகரம்....

ஆம்ஸ்டர்டாமை அடைந்து, சென்ட்ரல் ஸ்டேஷனில் இறங்கிய பிறகுதான் கமாரான கூட்டத்தையே பார்க்க முடிந்தது. இங்கே கால்வாய்ப் பயணம் சுகமான அனுபவம்; பெரிய பெரிய படகுகளில் பயணிகளை ஏற்றிக் கொண்டு, நீர் நிலைகளை ஒட்டியிருக்கும் – அந்தக் காலத்தில் அரண்மனைகளாகவும் இந்தக் காலத்தில் ஹோட்டல்களாகவும் மாறிவிட்ட கட்டடங்களைப் பற்றிய ரன்னிங் கமெண்ட்ரியை கேட்டுக் கொண்டே, குறுக்கிடும் ஏராளமான பாலங்களிடையே புகுந்து புறப்படுவது தனி இன்பம்.

நெதர்லண்ட்ஸின் சின்னங்களாக, காற்றாலைகள், ட்யூலிப் மலர்கள், மாடுகள், சீஸ் சுமந்து செல்லும் பெண்டிர், பாதரட்சைகள் (விவசாயிகள் அணிந்து கொள்ளும் மரச் செருப்புகள்)... இவற்றைச் சொல்லலாம்! கடைகளில் இவைதாம் வித விதமாகக் குவிந்து கிடக்கின்றன. பக்குவப்படுத்தப்பட்ட நிஜமான ட்யூலிப் மலரை கண்ணாடி கேசுகளில் அடைத்து விற்கிறார்கள்; ட்யூலிப் வடிவ குடைகள், சைக்கிள்களும், ட்யூலிப்களும் போட்ட டீஷர்ட்டுகள், பீங்கான் மாடுகள், மர ஷூக்கள் வடிவத்தில் சாவிக் கொத்து, பேனா ஸ்டான்ட், பூ ஜாடி...

டச்சுக்காரர்களுக்கு கலை ஆர்வமும்

ஜெயஸ்ரீ ராஜ்



• ஆம்ஸ்டர்டாம் நகர வீதியொன்று....

அழகு மிளிரும் ஆம்ஸ்டர்டாம் நகரம்!

உண்டு என்பதற்கு எடுத்துக் காட்டாய் "ரைக்ஸ் ம்யூசியம்"! ஏசு கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாறு பிரதான "தீம்" - நிறைய ஓவியங்கள்! கண்ணாடிகளில், ஜன்னல்களில், வண்ண ஓவியங்கள்! அரசபரம்பரையின் மேஜை, நாற்காலிகள், ஆயுதங்கள், ஆபரணங்கள் முதலானவை வித்தியாசமான கலெக்ஷன்!

மியூசியத்தில் ஒரு வேடிக்கையான அனுபவம்: ஐரோப்பாவின் மெட்ரோ நகரங்களில், டாய்லெட் வசதிகள் நம்மூர் ஃபைவ் ஸ்டார் ஸ்டைலில் இருந்தாலும், நெதர்லண்ட்ஸில் தனிக் கவர்ச்சியுடனிருந்தன. - அத்தனை துப்புரவு, அவ்வளவு நவீனம்!



• ஷெனவனின்கன் கடற்கரை

ஒவ்வொன்றின் இயக்கமும் ஒவ்வொரு புதுவிதம் - வெறும் தட்டையான டாங்கியில் சும்மா கை வைத்தாலே அருவியாய் நீர் கொட்டும் ஃப்ளஷ்ஷிலிருந்து, குமிழ்களைத் திருப்பி, ஸ்விட்சைத் தட்டி, சில இடங்களில் ஒன்றுமே செய்யாமல் "டைமர்" செட்டப் செய்திருக்கும்படி, ஒவ்வொரு நிமிடமும் தானே ஃப்ளஷ் செய்து கொள்ளும் ரகம் வரை ஏக வினோதம்.

ஆனால் மியூசியத்திலிருந்த "பளபள"க்கும் டாய்லெட்டில், ஃப்ளஷ்ஷை எப்படி இயக்குவதென்று புரியாமல் எதை எதையோ தட்டி, தடவி, குத்துவிட்டுப் பார்த்ததில் ஒன்றும் பயனளிக்காமல், வெறுப்புடன் தரையை ஒரு உதை விட்டதில், ...ஹா... நயாகராவை நேரில் பார்த்திருந்தால் கூட அத்தனை பரவசம் ஏற்பட்டிருக்குமோ என்னவோ... தரையோடு தரையாய் ஒரு பட்டனைப் புதைத்து வைத்திருக்கிறார்கள்! ஹும்... இயக்கக் குறிப்புகளையாவது அழகாக எழுதி வைத்திருக்க மாட்டார்களோ?

தெருக்களில் நடந்தபோது இன்னொரு ஆச்சர்யம் காத்திருந்தது. உடைகள் என்ற பெயரில் தனியாக ஒரு பளுவைச் சுமந்து கொண்டு



• சீஸ் மார்க்கெட்

நாங்கள் நடக்க, எதிர்ப்பட்ட இளம் நங்கையர் சிலர், வெறும் ஷார்ட்ஸ், டாப்ஸ் அணிந்து ஜாலியாக நடந்து சென்றது கண்ணை உறுத்தியது. மிக அருகில் வந்த பிறகுதான், வலை வலையாக, ஸ்கின் கலரில், உடலோடு ஒட்டிய அந்த ஆடை கண்ணில் பட்டது – இது குளிருக்கு ஏக பாதுகாப்பாம் – ஐஸ்வர்யாவும், கஜோலும், எப்படி அரை குறை ஆடைகளுடன், பனிச்சிகரங்களில், முடிவில்லாமல் நீண்டு கொண்டிருக்கும் டூயட்டுகளைப்பாடி ஆடுகிறார்கள் என்ற நெடுநாளைய மண்டைக் குடைச்சலுக்கு, அப்போதுதான் பதில் கிடைத்தது!

வைர கட்டிங்கும் இங்கே பிரபலம்; ஒரு ஃபாக்டரியின் உள்ளே போய் ரவுண்ட் அடித்தோம்; ஆர்வத்துடன் டச்சு மொழியில் எதை எதையோ அவர்கள் விளக்க, நாங்களும் நன்றாகத் தலையை ஆட்டி வைத்தோம் – வைரத்தைப் புரிந்து கொள்ள மொழி எதற்கு? அதுவும் தென்னிந்தியப் பெண்களுக்கு? – வெள்ளை, மஞ்சள், நீலம், பிங்க்கென வண்ண ஜாலங்களை வீசின... விலை ஒவ்வொன்றும்... (வேண்டாம்... இங்கேயே மயங்கி விட்டால், மேலே யார் படிப்பதாம்?)



''தலைவரோட தொலை நோக்குப் பார்வை விபரீதமா இருக்கு1''

''என்ன சேதி?''

''அடுத்த வருஷம் தற்கொலை பண்ணிக்கப் போற தொண்டர்களோட குடும்ப நல நிதின்னு இப்பவே இருபது லட்சம் ஒதுக்கிட்டாரு!''

– அம்பை தேவா

தகவல் தொடர்பை இவர்கள் எவ்வளவு கலை நயத்துடன் செய்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டு ''ஹாலந்து எக்ஸ்பிரியன்ஸ்'' என்ற ஷோ! வட்டவடிவமான தியேட்டரில், த்ரீ-டி இஃபெக்டுகளுடன், நமக்கு ஹாலந்தின் சரித்திரத்தையே, அதில் காணவேண்டிய முக்கியமான இடங்களை, டாகுமெண்ட்ரியாகக் காட்டி விடுகிறார்கள். துறைமுகம், கப்பல் கட்டுதல் போன்றவற்றைக் காணும் போது, அலைகளிடையே பயணிக்கும் அனுபவம், மலர்ப் படுகைகளையும், ஏலத்தையும் காணுகையில் அதன் மணம் நம்மைச் சுற்றிப் பரவும் சுகம்; வெண்ணெய், சீஸ் முதலானவற்றைச் சந்தையில் விற்று, ஏற்றுமதிக்கும் போது, நுரைத்துச் சுழிக்கும் ஓசையுடன், நம் வாயிலே கரையும் உணர்வு... ஒரே அசத்தலாயிருந்தது! ராஜா ராணியைக் கூட மினியேச்சர் சைஸில் மேடையில் உலவவிடும் தத்ரூபம்...

ஆம்ஸ்டர்டாமை ஒரு ரவுண்ட் வந்து, வீட்டிற்கு நாங்கள் திரும்பும்போது, டெம்ப்ரேச்சர் 2°C... ஸ்... வாயைத் திறந்தாலே ஐஸ் கட்டிகள்தான்... புகை மண்டலம்தான்...!

ஹாலந்தை முழுதும் சுற்றிப் பார்க்க இயலாதவர்கள் 'மதரோடேம்' சென்றால் அங்கே மினியேச்சர் ஹாலந்தை பார்க்கலாமென்றார்கள். ஆனால் நாங்கள் அடாத குளிரிலேயும், விடாமல் சுற்ற முடிவு செய்தோம். 'மாடம் டூஸாட்ஸ்' போன்ற மினிமெழுகு ம்யூசியத்தையும் விட்டு வைக்காமல், மறுநாள் நெதர்லண்ட்ஸின் அரசுப் பீடமான ''தி ஹேக்''கை நோக்கிப் பயணமானோம்! (சாதாரணமாக டில்லி, மும்பை, லண்டன், பாரீஸ் என்று தானே சொல்றோம்? 'தி சென்னை', 'தி நியூயார்க்' என்பதில்லையே! Hagueக்கு மட்டும், 'தி ஹேக்' என்ற சிறப்பு விளி!)

இங்கேதான் தெருக்களில், குதிரை மீது செல்லும் வீரர்களை (அந்தக் கால ட்ரெஸ்ஸில்) கண்டோம்!

''இண்டர்நேஷனல் கோர்ட் ஆஃப் ஜஸ்டிஸை'' (Peace Palace என்கிறார்கள்) தரிசித்தோம். உலக அளவில் முக்கியமான வழக்குகளுக்கு இங்கேதான் தீர்ப்பளிக்கப்படுகிறது. இந்தக் கட்டடத்தில், ஒவ்வொரு நாடும், ஏதோ ஒன்றை, தன் சார்பாக அளித்திருக்கிறது – டைல்ஸ், பெஞ்சுகள், சேர்கள், மார்பிள்கள் இப்படி...

அடுத்து நாங்கள் காணச் சென்றது "பனோரமா" – 'Panoramic view' என்பது தெரியுமாதலால், 'Panorama' என்றால் இயற்கையின் சௌந்தர்யங்களை அள்ளிக் கொடுக்குமிடமாக இருக்கும் என நினைத்திருந்தோம். அங்கு சென்ற பிறகுதான் தெரிந்தது 'பனோரமா' என்பது ஒரு விதப் 'பெயிண்டிங்' என்பது.

ஒரு கட்டடத்தின் மாடியில், வட்டவடிமான "க்னோப்" போன்ற விஸ்தாரமான அமைப்பில், திறந்த குடைபோல் 'ஆ'வென்று வாய் பிளந்திருந்தது. அந்தக் 'கான்வாஸில்' எழுதப்பட்டிருந்த சித்திரங்களை, இயற்கை வெளிச்சத்தில் கண்ட மாத்திரத்திலே, நம் வாயும் அப்படியே!

மெஸ்டாக் தம்பதியர், ஒரு கண்ணாடி ஸிலிண்டரின், புகழ்பெற்ற 'ஷெவனின்கன்' கடற்கரைச் சூழலில், அங்கே கண்ட காட்சிகளை அப்படியே சித்திரமாகத் தீட்டினார்கள், அந்த மாடலின் அடிப்படை யில், தங்களிடம் ஓவியம் பயிலும் மாணவர்களின் உதவியுடன், மூன்றுமாத காலம் இராப்பகலாக உழைத்து, கான்வாஸில் இந்தக் காட்சிகளை உயிர்ப்பித்திருக்கிறார்கள். குதிரைச் சவாரி செய்யும் வீரர்கள், சீஸ் விற்கும் மகளிர், மீன் பிடித்தல், கப்பல் ரிப்பேர், கிராமப்புற வீடுகள்... என்று அந்தக் காலத்து 'பீச்' சூழலை கண்முன்னே நிறுத்தியிருக்கிறார்கள். வண்ணங்களெல்லாம் இன்றளவும் மங்காமல் (மங்கிய வெளிச் சத்திலும்) பிரகாசிக்கின்றன.

இந்த பீச்சைப் பற்றிய சுவையான தகவல் ஒன்றும் நிலவுகிறது. இரண்டாம் உலகப் போரின் போது, இவர்கள் படையில் ஊடுருவிய ஜெர்மானியர்களை அடையாளம் கண்டு தண்டிக்க, பீச் பேருதவி செய்ததாம்.

எல்லா சிப்பாய்களையும் வரிசையாக நிற்க வைத்து, "Scheveningen" என்ற இந்தக் கடற்கரையின் பெயரை உச்சரிக்கச் சொன்னார்களாம். "ஷெவனின்கன்" என்று உதட்டளவில் உச்சரித்தவர்கள் தலை காணாமல் போக, அடி வயிற்றிலிருந்து சப்தமெழுப்பியவர்கள் தலை தப்பித்ததாம்! டச்சுக்காரர்கள், அழுத்தம், திருத்தமாக நாபியிலிருந்து சொற்களைத் தருவித்துப் பேசக் கூடியவர்கள்!

கடைசியாக, 'ஆம்னி வர்ஸம்' என்ற, மும்பை ப்ளானடோரியம் போன்றிருந்த தியேட்டரில், 'ஐ-மாக்ஸ்' ஷோ ஒன்று பார்த்தோம். ஸ்பெஷல் ப்ரொஜக்டரை வைத்துக் கொண்டு காட்சியமைத்திருப்பதுதான் இந்த 'ஷோ'வின் சிறப்பு! "ஸரங்கெட்டி" என்ற அந்தப் படம், வெயிற் காலத்தில், நாடு விட்டு நாடு செல்லும் விலங்கினங்களைப் பற்றியது! கண்ணில் நீரை வரவழைத்து விட்டது!



"ஊர் பூரா கடன் வாங்கியாச்சு, தப்பிக்க வழி தெரியலை..."

"மொட்டை போட்டுக்கலாமே...?"

"அதுக்குத்தான் பத்து ரூபா கேக்கறாங்களே, உங்களால கொடுத்து உதவ முடியுமா சார்?"

– சீர்காழி ரேவதி

மீண்டும் ரயில் பயணம் – குழந்தைகளுக்கு இலவச சாக்லேட், பிஸ்கட், கேம்ஸ் எல்லாம் டி.சி. தருகிறார்; இரண்டு ஸீட்டுகளுக்கிடையே (பர்மனென்டாக) டைனிங் டேபிள் போன்ற பலகையில், சதா சர்வ காலம் எதையாவது சாப்பிட்டுக் கொண்டே மக்கள் பயணிக்கிறார்கள். ரயிலின் வேகத்துடன் ஒப்பிடும்போது, அந்த ஊர்க்காரர்களின் வாழ்க்கை சாவகாசமாகவே கழிகிறது – இது ரிடையரானவர்களின் சொர்க்கபூமி என்று சும்மாவா சொல்கிறார்கள்?

இரண்டு நாட்கள் இரண்டே நிமிடமாய் பறக்க, அந்தத் தூய்மையையும் அமைதியையும் மனத்தில் சுமந்து கொண்டு, பிரிய மனமில்லாமல்தான் ப்ரேஸில் நோக்கிப் பயணமானோம்!

(தொடரும்)



அறிவியல், அவியல்!

● ஸ்வீடன் நாட்டில் நடை பெற்ற சமீபத்திய பரிசோதனைகளின் மூலம் கேரட்டின் முக்கியத்துவம் மீண்டும் நிரூபிக்கப்பட்டுள்ளது. கேரட்டில் உள்ள பீட்டா - கரோடின் சத்து, புற்று நோய் உண்டாவதை (முக்கியமாக நுரையீரல் புற்று நோய்) தடுக்கப் பெரிதும் உதவுகிறதாம். தவிர தினமும் உணவில் காரட்டை சேர்த்துக் கொண்டால் ரத்த அழுத்தம் சீராக இருப்பதோடு, மலச்சிக்கல் உண்டாவதும் தவிர்க்கப் படுகிறதாம்.

● ரோபோ என்றாலே அதன் முகத்தில் ஒருவித இயந்திரத்தனம்தான் தென்படும். மாறாக பலவித உணர்வுகளை அதனால் காட்ட முடிந்தால்? இப்படி ஒரு முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெற்றிருக்கிறது டோக்கியோ பல்கலைக் கழகம். கம்ப்யூட்டரின் உதவியோடு ரோபோவின் முகத்தில் பதினெட்டு அசையும் பாகங்களை விதவிதமாக இயக்கச் செய்வதன் மூலம் மகிழ்ச்சி, துக்கம், கோபம், திகில் ஆச்சர்யம், வெறுப்பு ஆகிய ஆறு உணர்வுகளை வெளிப்படுத்த வைக்க முடிந்திருக்கிறது. இவற்றை வெளிப்படுத்த நம் முகத்தைப் பொறுத்தவரை நாற்பது அசையும் பாகங்களை இயக்க வேண்டியிருக்கும்!

● பெங்களூரில் ரேடியோ டாக்ஸிகளை விரைவில் காணலாம். அதாவது டிரைவர்களிடம் வாக்கி டாக்கி செட்கள் இருக்கும். அவற்றிற்குப் பொதுவான ஒரு எண்ணும் கொடுக்கப்பட்டிருக்கும். டாக்ஸி தேவைப்படுபவர்கள் அந்த எண்ணைத் தொடர்பு கொண்டால் அந்தப் பகுதியில் உள்ள ஒரு டாக்ஸி அவர் இருக்கும் இடத்திற்கு வந்து சேரும்.

— ஜி.எஸ்.எஸ்.

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 250/-; Overseas : Rs. 1600/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 125/-: Overseas : Rs. 800/- (Air Mail)

வாழ்வில் முடிவெடுத்த அந்தத்
தருணம் என்றும் பசுமையானது...



அதற்கு ஈடான மற்றொரு தருணம் நீங்கள் யெஸ்டி அஸோஸியேடட் பில்டர்ஸிடம் இல்லம் வாங்கும் இனிய தருணம்தான்!



அண்ணா நகர், தி. நகர், நங்கநல்லூர், வேளச்சேரி மற்றும் பிற இடங்களில்
அழகிய தரமான டீலக்ஸ் ஃபிளாட்டுகள் மற்றும் தனி வீடுகள் வாங்க
அணுகுங்கள்

CREATORS
NOT JUST BUILDERS

YESDE ASSOCIATED BUILDERS LTD.

FLAT PROMOTERS & PROPERTY DEVELOPERS

26, Ranganathan Street, IInd Floor, T. Nagar, Madras - 600 017.
Phone: 4340224/4340210/-4342667. Fax: 044-2344333
E.Mail:yesde@md3.vsnl.net.in Web:www.yesdebuilders.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / MS (S) M4392/ 98 * Licensed to post without prepayment under PMG's Licence No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka

